


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஆகஸ்டு 02, 2007 புரட்சி 5 முழக்கம் 31 விலை : ரூ.2.50


## தமிழகத்தில் தலைவிரித்தாடும் தீண்டாமை வெறி:

# ‘இரட்டைக் குவளை’ அமுலிலுள்ள தேனீர் கடைகள் பட்டியல் – பாரீர்!

ஈரோடு, கோவை, தென்னாற்காடு மாவட்டங்களில் ‘இரட்டைக் குவளை’ முறை அமுலிலுள்ள தேனீர்க் கடைகள் மற்றும் தலித் மக்களை அனுமதிக்காத கோயில்களின் பட்டியலை - பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் தயாரித்துள்ளனர். அந்தப் பட்டியலை, இங்கு வெளியிடுகிறோம்.

பாபு, த/பெ. ராமசாமி,
பாபு டீ ஸ்டால்,
முருகன் கோவில் திடல்,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638503.

முருகேஷ், த/பெ.
ரங்கசாமி,
முருகன் டீ ஸ்டால்,
முருகன் கோவில் திடல்,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம்-638 503.

அழகிரிசாமி (கண்ணன்),
கண்ணன் டீ ஸ்டால்,
முருகன் கோவில் திடல்,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்
சத்தி வட்டம் - 638 503.

வெங்கடேஷ்,
த/பெ. செட்டியார்,
வெங்கடேஷ் டீ ஸ்டால்,
கடைவீதி சாலை,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

சுந்தரமூர்த்தி, த/பெ.
வெள்ளேகவுண்டர்,
சுந்தரமூர்த்தி டீ ஸ்டால்,
அம்மன் கோவில் வீதி,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

ராமசாமி, த/பெ. கருப்பண
முதலியார், ராமசாமி டீ
ஸ்டால், பாரஸ்ட் ரோடு,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

சஞ்சீவி, சஞ்சீவி டீ
ஸ்டால், கடைவீதி ரோடு,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

**முடி திருத்தக் கடைகள்**

பாபு, த/பெ. ராமசாமி,
பாபு டீ ஸ்டால்,
முருகன் கோவில் திடல்,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

சுப்பிரமணி சலூன் கடை,
கடைவிதி,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

வெள்ளியங்கிரி
சலூன் கடை,
முருகன் கோவில் திடல்,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

சுப்பிரமணி சலூன் கடை,
பெரியசாமி கோவில் வீதி,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

பெரியசாமி சலூன் கடை
(சின்னப்பையன்),
முருகன் கோவில் திடல்,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

பெரியசாமி சலூன் கடை,
நரசஸ்சாபுரம் பிரிவு,
கெம்பநாயக்கன்பாளையம்
அஞ்சல்,
சத்தி வட்டம் - 638 503.

**தேநீர் கடைகள்**

இராசு,
இராசு டீக்கடை,
புது மேட்டூர்,
ஆயில் மில் அருகில்,
சத்தி ரோடு,
தவிட்டுப்பாளையம்,
அந்தியூர் அஞ்சல்,
பவானி வட்டம்.

சம்பத் தேனீர்க் கடை,
சத்தி மெயின் ரோடு,
காசிபாளையம் அஞ்சல்,
கோபி வட்டம்.

கிரி தேனீர்க் கடை,
சத்தி மெயின் ரோடு,
காசிபாளையம் அஞ்சல்,
கோபி வட்டம்.

மல்லிகா டீ ஸ்டால்,
சத்தி மெயின் ரோடு,
காசிபாளையம் அஞ்சல்,
கோபி வட்டம். *(உணவு பரிமாறுவதற்கு இரண்டு பெஞ்சுகள் உள்ளன)*

இராயப்பன் தேனீர்க் கடை,
சத்தி மெயின் ரோடு,
காசிபாளையம் அஞ்சல்,
கோபி வட்டம்.

சிவாயாள் தேனீர்க் கடை,
சத்தி மெயின் ரோடு,
காசிபாளையம் அஞ்சல்,
கோபி வட்டம்.
*(உணவு பரிமாறுவதற்கு இரண்டு பெஞ்சுகள் உள்ளன)*

முருகபவன் தேனீர்க் கடை,
சத்தி மெயின் ரோடு,
காசிபாளையம் அஞ்சல்,
கோபி வட்டம்.

ஆசனூர்க்காரர் டீக்கடை,
சத்தி மெயின் ரோடு,
காசிபாளையம் அஞ்சல்,
கோபி வட்டம்.

பாய் டீக்கடை, மசூதி
பின்புறம்,
சத்தி மெயின் ரோடு,
காசிபாளையம் அஞ்சல்,
கோபி வட்டம்.

தங்கவேல்,
தங்கவேல் தேனீரகம்,
முதன்மைச் சாலை,
அளுக்குளி அஞ்சல்,
கோபி வட்டம்.

முத்துசாமி டீக்கடை,
செங்கோட்டையன் நகர்,
குள்ளம்பாளையம் வழி,
நாதிபாளையம் ஊராட்சி,
கோபி வட்டம்.

கந்தசாமி டீக்கடை,
செங்கோட்டையன் நகர்,
குள்ளம்பாளையம் வழி,
நாதிபாளையம் ஊராட்சி,
கோபி வட்டம்.

வேலன் டீக்கடை,
குள்ளம்பாளையம் பிரிவு,
ஈரோடு மெயின் ரோடு,
குள்ளம்பாளையம்,
கோபி வட்டம்.

ஜெயராணி டீக்கடை,
வேலன் டீக்கடை எதிரில்,
ஈரோடு மெயின் ரோடு,
குள்ளம்பாளையம்,
கோபி வட்டம்.

சுப்ரமணியம் டீக்கடை,
ஈரோடு மெயின் ரோடு,
பொலவக்காளிபாளையம்
அஞ்சல், கோபி வட்டம்.

பி.எஸ். கிருஷ்ணன்
டீக்கடை,
ஈரோடு மெயின் ரோடு,
பொலவக்காளிபாளையம்
அஞ்சல், கோபி வட்டம்.

பாரியூர் அம்மன் மகளிர்
சுயஉதவிக்குழு டீக்கடை,
ஈரோடு மெயின் ரோடு,
பொலவக்காளிபாளையம்
அஞ்சல்,
கோபி வட்டம்.

கார்மேகம் டீக்கடை,
ஈரோடு மெயின் ரோடு,
பொலவக்காளிபாளையம்
அஞ்சல், கோபி வட்டம்.

அசோக் டீ ஸ்டால்,
தாசம்பாளையம்,
ஈரோடு மெயின்ரோடு,
கோபி வட்டம்.

முருகேசன்,
த/பெ. சின்னப்ப உடையார்,
முருகேசன் டீக்கடை,
காரப்பட்டி,
கரட்டுப்பாளையம் அஞ்சல்,
குருமந்தூர் வழி.

சின்ன அம்மணி டீக்கடை,
க/பெ. கே.பி. ராஜா,
கரட்டுப்பாளையம் அஞ்சல்,
குருமந்தூர் வழி.

செல்வம்,
யுவராஜ் முடித்திருத்தகம்,
எலத்தூர் மெயின்ரோடு,
எலத்தூர்,செட்டிப்பாளையம்
அஞ்சல், கோபி வட்டம்.
*(இங்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முடி வெட்டுவதில்லை)*

நாச்சிமுத்து டீக்கடை,
எலத்தூர் மெயின்ரோடு,
எலத்தூர்
செட்டிப்பாளையம் அஞ்சல்,
கோபி வட்டம்.

சங்கீதா டீக்கடை,
பேரூராட்சி அலுவலகம்
அருகில், எலத்தூர்
மெயின்ரோடு, எலத்தூர்

4 ஆம் பக்கம்

## தோழர்களே தயாராவீர்!

ஆகஸ்டு 15 இல் தேனீர் கடைகளில், இரட்டைக் குவளை, இரட்டை இருக்கை பற்றியும், தலித் மக்களை அனுமதிக்க மறுக்கும் பொதுக் கோயில்கள் பற்றியும், பட்டியல் தயாரித்து விட்டீர்களா?

தோழர்கள் அனுப்பி வைத்த பட்டியலை இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம்.

உரிய நடவடிக்கை கோரி, தொடர்புடைய அரசுத் துறைக்கு, இவை முறைப்படி அனுப்பி வைக்கப்படும். அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனில், ஆகஸ்டு 15 இல் திட்டமிட்டபடி ‘இரட்டைக் குவளை’ உடைப்புப் போராட்டத்தில் கழகம் இறங்கும்.

கழகத் தோழர்களே!

- மாவட்டத்தில் போராட்டம் நடக்கும் பகுதியைத் தேர்வு செய்யுங்கள்.
- காவல் துறைக்கு போராட்டம் பற்றிய தகவல்களைத் தெரியப் படுத்துங்கள்.
- உடன்பாடுள்ள தோழமை அமைப்புகளைச் சந்தித்துப் பேசுங்கள். அவர்களின் ஆதரவைக் கோரி அவர்களையும் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளுங்கள்.
- போராட்டத்தின் நியாயத்தை பல்வேறு பிரச்சார வழிமுறைகளைப் பயன்படுத்தி, மக்களிடம் விளக்குங்கள்.

தீண்டாமையைப் பின்பற்றுவது சட்டப்படி குற்றம் என்பதை எடுத்துச் சொல்லுங்கள். சட்டங்கள் தங்கள் கடமையைச் செய்யாமல் வேடிக்கை பார்த்து நிற்பதைக் கண்டித்தும் –

சட்டத்தை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை கோரியும் –

தீண்டாமையையும், அதற்கு உயிர் கொடுக்கும் சாதி அமைப்பையும் எதிர்த்து, ‘பெரியார் திராவிடர் கழகம்’ இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளது. நாட்டின் அடிப்படையான முதலுரிமையும் முன்னுரிமையுமான ஒரு பிரச்சினையை கழகம் முன்னெடுத்துள்ளது.

தோழர்களே! கழகச் செயல்வீரர்களே, தயாராவீர்!

“இந்தக் காலத்து இளைஞர்கள் மனம் என்மீது வெறுப்புக் கொள்ளாது; வெறுப்புக் கொண்டு விடுமானாலும்கூட, நான் அதற்கு அஞ்சவில்லை. **இனி வருங்கால இளைஞர்கள் பாராட்டுவார்கள்; பாராட்டாவிட்டாலும், இன்று நான் சொன்னதைப் பின்பற்றி வீரத்தோடு, மானவாழ்வு வாழும் வழியில் இருப்பார்கள்.** சரியாகவோ, தப்பாகவோ, நான் அதில் உறுதி கொண்டிருப்பதால் எனக்கு எக்கேடு வருவதானாலும், மனக் குறையின்றி, நிறை மனதுடன் அனுபவிப்பேன்-சாவேன் என்பதை உண்மையாய் வெளியிடுகிறேன்.”

– பெரியார்

(தமிழர் தலைவர் - நூல், பக்.15)

**தலையங்கம்**

## சேலம் இரயில்வே கோட்டத்துக்கு தடையா?

1950-களிலேயே சேலம் ரயில்வே கோட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற உரிமைக்குரல் எழுந்துவிட்டது. தென்னக ரயில்வேயில் நிரம்பி வழிந்த பார்ப்பனர்களும், மலையாளிகளும், தொடர்ந்து, இந்த நியாயமான கோரிக்கைக்கு முட்டுக்கட்டைப் போட்டே வந்தனர். கடந்த சில ஆண்டுகளாக பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்து, இதற்கான போராட்டத்தை முன்னெடுத்தது. அனைத்துக் கட்சிகளையும் ஓரணியில் திரட்டும் முயற்சிகளை கழகம் மேற்கொண்டது. சேலம் இரயில்வே கோட்ட பாதுகாப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. கழகப் பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணன், இதற்கு முழு முயற்சி எடுத்து இதன் ஒருங்கிணைப்பாளராக இருந்து செயல்பட்டார். தென்னக இரயில்வே மேலாளராக இருந்த திரு. வர்கீஸ் எனும் மலையாள அதிகாரி, தனது முழு அதிகாரச் செல்வாக்கையும் பயன்படுத்தி, சேலம் கோட்டம் உருவாவதைத் தடுத்து வந்தார்.

இரயில்வே துறையின் அமைச்சராக தமிழகத்தைச் சார்ந்த ஒருவர் இருந்தும் இந்த நிலை. ஒரு கட்டத்தில் தமிழ்நாட்டில் இதற்கான அழுத்தங்கள் அதிகரித்தபோது, சேலம் இரயில்வே கோட்டம் அமைவது உறுதியாக்கப்பட்டு, அதற்கான தொடக்க விழா செப்.14-இல் நிகழும் என்று அறிவிக்கப்பட்டது. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் தொடக்க விழாவில் பங்கேற்க ஏற்பு வழங்கிய நிலையில், கேரளாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசு, சேலம் இரயில்வே கோட்டம் அமைவதை எதிர்த்து, உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது. உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதிக்க மறுத்தாலும், இரண்டு மாநில முதல்வர்களும் இதுபற்றி கலந்து பேச வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

சேலம் இரயில்வே கோட்டம் உருவாவதற்கு, இதன் மூலம் மீண்டும் முட்டுக்கட்டை போடப்பட்டுவிட்டது என்றே கருத வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டின் பெரும்பகுதி இரயில் நிலையங்களை, கேரளாவின் கட்டுப்பாட்டுக்குள் பாலக்காட்டில்தான் இருக்க வேண்டும் என்பது நியாயம் தானா, என்பதே அடிப்படையான கேள்வி. மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித்தனி சட்டமன்றம், நிர்வாக அமைப்புகள் வந்த பிறகு, ஒரு மாநிலத்தின் உரிமையில் மற்றொரு மாநிலம் தலையிடுவது எப்படி சரியாகும்? கேரளாவில் நடக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி, அப்பட்டமான இனவெறிப் பார்வையோடு தமிழர்களின் உரிமையைப் பறிக்கத் துடிப்பது, வன்மையான கண்டனத்துக்குரியதாகும். தமிழ்நாட்டு மார்க்சிஸ்ட்டுகள் இதில் உறுதியாக கருத்து தெரிவிக்காமல் பதுங்குவது, தமிழ்நாட்டுக்கு இழைக்கும் துரோகமாகும்.

தமிழ்நாட்டைச் சுற்றியுள்ள மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திராவில் நடக்கும் ஆட்சிகள் - தமிழகத்தின் நியாயமான நதிநீர் உரிமைகளைப் பறித்துக் கொண்டிருக்கின்றன. இப்போது கேரளா, தமிழகத்தின் ரயில் நிர்வாக உரிமையையும் பறிக்கத் துடிக்கிறது. இந்தியா என்கிற அமைப்பின் தோல்வியையே, இவை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் தமிழ்நாட்டின் உரிமைக்கு வலிமையாக கட்சிகளைக் கடந்து, தமிழர்கள் குரல் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

# அஞ்சலகத்தில் தீண்டாமை:

# களமிறங்கியது கோவை கழகம்!

கோவை அருகே - திருமலையம்பாளையத்தில் உள்ள அஞ்சலகத்தில் தலித் மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்ற செய்தி வெளியானவுடன் - கோவை பெரியார் திராவிடர் கழகம் உடனடியாக களமிறங்கியது. இதற்காக போராட்டத்துக்கும் தயாரானது. அஞ்சல் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியது. இதனைத் தொடர்ந்து அஞ்சலக அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார். செய்தி விவரம்:

கோவை மதுக்கரை வட்டம் - திருமலையம்பாளையத்தில் உள்ள அஞ்சலகத்தில் தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்காத வன்கொடுமை பற்றி 9.7.2007 அன்றே மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் ஆ. ராசாவிற்கும் அவரது டெல்லி அலுவலகத்திற்கு தொலை நகலும், அஞ்சல் வழி கடிதமும் அனுப்பினார். கழகப் பொதுச்செயலாளர் கு. இராம கிருட்டிணன், அமைச்சருக்கு அனுப்பிய புகாரின் நகலை கோவை தலைமை அஞ்சல் கண்காணிப்பாளருக்கும் அனுப்பப்பட்டது. அதன் பிறகு அஞ்சல் துறை நடவடிக்கையை தாமதப்படுத்தியதால் "திருமலையாம்பாளையம் அஞ்சல் நுழைவுப் போராட்டத்தை கழகம் அறிவித்தது. 20.7.2007 உள்ளூர் 'தினமணி'யில் போராட்ட செய்தியும் வந்தது. அதன் பிறகு 22 ஆம் தேதி அஞ்சல் துறை கண்காணிப்பாளர் பி.பி.ஆறுமுகம் நேரடி விசாரணை செய்து அஞ்சகலத்தில் தீண்டாமை உண்மை என்பதறிந்து உடன் நடவடிக்கை எடுத்ததால், கழகம் போராட்டத்தை ரத்து செய்தது. அஞ்சல்துறை அலுவலகத்திலிருந்து 24 ஆம்தேதி காலை தொலை நகல் மூலம் நடவடிக்கை எடுத்ததை எழுத்துப்பூர்வமாக பொதுச்செயலாளர், கோவை இராம கிருட்டிணனுக்கு அனுப்பியது. அதே நாள் காலை அஞ்சல் அதிகாரி சுமதியும் கைது செய்யப்பட்டார். அன்று (24 ஆம் தேதி) வெளிவந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழின் முன் பக்கத்தில் வெளியான செய்தியில் கழகப் பொதுச்செயலாளர் பேட்டியும், திருமலையம்பாளையம் கிளை செயலாளர் மணி கண்டன் பேட்டியும், கழகப் போராட்ட செய்தியுடன் வெளிவந்தது.

இவ்வளவும் நடந்து முடிந்த நிலையில் 25 ஆம் தேதி 'விடுதலை' ஏடு மத்திய அமைச்சருக்கு, திராவிடர் கழகம் கடிதம் எழுதியதால் - அஞ்சலக அதிகாரி கைதானார் என்று செய்தி வெளியிட்டுள்ளது.

## நவநீதன் ஆசிரியர் படத்திறப்பு

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் நகர கழகத் தலைவர் கு. நவநீதன் ஆசிரியரின் படத்திறப்பு நிகழ்ச்சி 19.7.07 வியாழன் அன்று காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில் நடந்தது. அந்த நிகழ்வில் மாவட்ட இளைஞரணிச் செயலாளர் புதுரோடு சிதம்பரம், மாவட்ட அமைப்பாளர் சதுமுகை பழனிச்சாமி, தலைமை கழகப் பேச்சாளர் கா.சு. வேலுச்சாமி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் ஸ்டாலின் சிவக்குமார் ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர். பின்னர் இறுதியாககு. நவநீதன் ஆசிரியரின் படத்தைத் திறந்து வைத்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி இரங்கலுரையாற்றினர். நவநீதன் அவர்களின் கொள்கை உறுதியை அனைத்து தோழர்களும் பின்பற்ற வேண்டும் என்று தனது உரையில் குறிப்பிட்டார். நிறைவாக ஆசிரியரின் மகன் பெரியார் செல்வன் நன்றி கூறினார்.

**தோழர்களே!**
**'புரட்சிப் பெரியார் முழக்கம்'** சந்தா முடிந்த தோழர்களே!
சந்தா முடிந்தும் தொடர்ந்து
ஏடு நிறுத்தப்படாமல் அனுப்பப்படுகிறது.
உடன் சந்தா செலுத்துங்கள்!

## புதுவையில் கழகம் எடுத்த எம்.ஆர்.இராதா நூற்றாண்டு விழா

தந்தை பெரியாரின் உண்மைத் தொண்டராகவும், அவர்தம் இயக்கத்தின் முன்னணி தளபதிகளில் ஒருவராகவும், சுயமரியாதை கருத்துகள், பகுத்தறிவு கொள்கைகள், நாடகங்கள், திரைப்படங்கள் வாயிலாக பரப்பி, தமிழர்கள் மான உணர்வு பெற தன் உடல், பொருள் அனைத்தையும் இழந்த, தமிழ்த் திரையுலகின் தன்னிகரற்ற நடிகராக விளங்கிய நடிகவேள் எம்.ஆர்.இராதா அவர்களுடைய நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் ஜூலை 14 சனிக்கிழமை அன்று புதுச்சேரி மாநில பெரியார் திராவிடர் கழகம் சார்பில், அரியாங்குப்பம், பெரியார் திடலில், மாலை 6 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்திற்கு பெரியார் திராவிடர் கழகத்தின் புதுச்சேரி மாநில துணைத் தலைவர் இரா. வீராசாமி தலைமை ஏற்றார். ஆ. ஆனந்தன், இரா. பெருமாள் முன்னிலை வகித்தனர். வரவேற்புரை செ. சுரேசு தொடக்க உரையை பெரியார் திராவிடர் கழகத்தின் புதுச்சேரி மாநிலத் தலைவர் லோகு. அய்யப்பன் ஆற்றினார். பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குநர் சீமான் சிறப்புரை ஆற்றினர். பெரியார் திராவிடர் கழகத்தின் மாநில செயலர் சு. விசயசங்கர், மாநில பொருளாளர் வீர.மோகன், அமைப்பாளர் இர. தந்தைபிரியன், இளைஞரணித் தலைவர் சா. சார்லசு, துணைச் செயலர் கோ. இராசேந்திரன், செய்தித் தொடர்பாளர் ம. இளங்கோ மற்றும் பெரியார் திராவிடர் கழகத்தின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ச. தீனதயாளன் நன்றி கூறினார்.

## அந்தியூர் நகர கலந்துரையாடல் கூட்டம்

23.7.07 காலை 11 மணி அளவில் அந்தியூர் அன்புராசு இல்லத்தில், மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில், சி. மாதேஸ் முன்னிலையில் அந்தியூர் நகர கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

அந்தியூர் கிளைத் தலைவராக தோழர் த.மா. வெங்கடாச்சலம், கிளைச் செயலாளராக மு. அன்பு, கிளை அமைப்பாளராக மு. வெங்கடேசு ஆகியோரை தேர்ந்தெடுத்து புதிதாக நியமித்தனர்.

விரைவில் 'பெரியார் முழக்கம்' இதழுக்கு ஆண்டு சந்தா சேர்த்து தலைமைக்கு அனுப்புவது என்றும், வருகின்ற செப்டம்பர் மாதம் 'அய்யா' பிறந்த நாளை முன்னிட்டு 'நாத்திகர் விழா' மற்றும் 'பெரியார் பிறந்த நாள் விழா' அந்தியூரில் மிகச் சிறப்பாக நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## கழக ஆட்சிக் குழு கூட்டம்

கழக ஆட்சிக் குழு கூட்டம் எதிர்வரும் ஆகஸ்டு 13 ஆம் தேதி திங்கள் காலை 10 மணியளவில் சென்னையில் கழகத்தின் புதிய தலைமைக் கழக அலுவலகத்தில் (1, காமராசர் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004. - கடற்கரைச் சாலையிலுள்ள வானொலி நிலையம் எதிரில்) கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கூடுகிறது. ஆட்சிக் குழு உறுப்பினர்கள் தவறாது வருகை தரக் கோருகிறோம்.

தோழமையுள்ள,
**கு. இராமகிருட்டிணன்**
**விடுதலை இராசேந்திரன்**
(பொதுச்செயலாளர்கள்)

வந்த கடிதங்கள்

## ‘உலகத் தலைவர் பெரியார்’ நூல் பற்றி

‘உலகத் தலைவர் பெரியார்’ விமர்சனம் படித்தேன். கடலூரில் பெரியார் மீது செருப்பு வீசியபோது தானும் உடன் சென்றதாக இப்போது பெரியார் வரலாற்றில் எழுதிக் கொள்ளும் திரு.வீரமணி, அவரது மேற்பார்வையில் அவராலேயே தயாரிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு முன் வெளியான ‘பெரியார்’ திரைப்படத்தில் ஒரு சிறுவன் ரிக்ஷாவுக்கருகே நடந்து வருவதுபோல ஏன் காட்சியை அமைக்கவில்லை?

**– கே. செல்வராசு, திண்டிவனம்.**

‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் உலகத் தலைவர் பெரியார் பற்றி எழுதியிருப்பதைப் பார்த்த பின்புதான் அந்நூலை ஒரு தி.க. தோழரிடம் இரவல் வாங்கிப் படித்தேன். கலைஞர் அவரது வரலாற்றில் முதல் மனைவி பத்மாவதி மறைவு பற்றி எழுதியிருந்தால் பொருளுண்டு. ஆனால் பெரியார் வரலாற்றில் கலைஞரின் மனைவி மறைவு செய்தியை அந்த அம்மையாரின் புகைப்படத்துடன் வெளியிட வேண்டிய அவசியம் என்ன வந்தது? ‘ஜால்ரா’ அடிப்பதற்கும் ஒரு அளவு வேண்டாமா?

**– மு.பக்கிரி, பட்டுக்கோட்டை**

ஒரு சொட்டு ரத்தம் சிந்தியதை பெரியார் வரலாற்றில் தடித்த எழுத்தில் எழுதியுள்ள திரு.வீரமணி, பெரியார் கொள்கையை பேசியதற்காக 13.11.1947 அன்று அடித்துக் கொன்று மரத்தில் தொங்கவிடப்பட்ட உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம் கொலையைப் பற்றி ஒரு வரி கூட எழுத முடியவில்லையே? பெரியார் 1948 ஜனவரியில் கொலை நடந்த இடத்தைப் பார்வையிட்டு விட்டு, வழக்கை சரியாக விசாரித்து குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும். இல்லையேல் முதல்வர் ஓமந்தூரார் பதவி விலக வேண்டுமென்று பேசியதும், அண்ணா, சம்பத், கலைஞர் ஆகியோர் நேரில் வந்து ஆறுதல் கூறியதும், நாவலர் நெடுஞ்செழியன் ஆறுதல் கூறியது மட்டுமின்றி அன்று அவ்வூரில் பொதுக் கூட்டத்தில் கண்டித்துப் பேசியதும், உள்துறை அமைச்சர் பி. கக்கன் நேரில் அவ்வூருக்கு வந்ததும், பெரிய செய்திகள் இல்லையா? கொலையைக் கண்டித்தும், உரிய நடவடிக்கை கோரியும் ஏராளமான திராவிடர் கழகப் பொதுக் கூட்டங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்ததெல்லாம் செய்திகள் இல்லையா?

**– பி.கே. பெரியசாமி, அரியலூர்**

‘உலகத் தலைவர் பெரியார் வரலாறு’ பற்றி கட்டுரைகள் வெளிவந்த ‘பெரியார் முழக்கம்’ ஏடுகளை, கழகத் தோழர்கள் ஆதரவாளர்கள், திராவிடர் கழகத்தினரிடம் தந்து படிக்கச் சொல்ல வேண்டும். **– மா. வடிவேலு, தாம்பரம்.**

12.7.07 இதழ் பெற்றேன். ‘சாதி ஒழிப்பு விளக்கக் கூட்டத்தில் சாதி மறுப்பு மணவிழா’ என்ற மகிழ்ச்சி செய்தி படத்துடன் கண்டு, பார்த்து, படித்து மிக மகிழ்ந்தேன். மிக நல்ல செய்தி இது. எவ்வளவோ சிக்கல்கள், இப்படி மேடையில் நடைபெறுவதால் தீர்கின்றன. இப்படி செய்வது மிக நல்ல முறை, சிக்கன முறை! இந்த எளிய முறையை பல தோழர்களும் தங்களின் வாழ்க்கைத் துணையேற்பு நிகழ்வுகளில் கடைப்பிடிக்க வேண்டும். பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் அனைத்து மணங்களும் இனி சாதி மறுப்பு மணங்களாகத்தான் இருக்க வேண்டும். அப்படி இல்லாத மணங்களுக்கு நம்மவர்கள் இனி தலைமை தாங்கக் கூடாது.

**– ச. நாத்திக நந்தனார், சென்னை.**

19.7.07 இதழ் கண்டேன். இதுதான் தமிழின உணர்வா? தலையங்கம் அருமையிலும் அருமை. உளவுத் துறையின் அதிர்ச்சிப் பின்னணியில் கே.பி. உன்னிக்கிருஷ்ணனின் திருவிளையாடல்களை அம்பலப்படுத்தியது பாராட்டுக்குரியது. ஐ.ஏ.எஸ். தேர்வில் தொடர்ந்து அநீதி இழைத்து வரும் பார்ப்பன வர்க்கத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் பெரியார் திராவிடர் கழகம் வழக்குத் தொடர்ந்தது போற்றத்தக்கது. தொடரட்டும் தங்கள் இதழியல் பணிகள். ‘உலகத் தலைவர் பெரியார்’ என்ற புதியவனின் கட்டுரை மிகச் சிறப்பானது. “கோடி கோடியாக பணம் புரளும் ஆன்மீக மோசடி வர்த்தகம்” முகப்புக் கட்டுரை அருமை. பக்கங்களைக் கூட்டுங்கள். ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தை வரலாற்று ஆவணமாக ஆக்குங்கள்.

**– தங்க சங்கர பாண்டியன், சென்னை–103.**

# காந்தியார் ஆதரித்த நாகா விடுதலை

*நாகா விடுதலைக்குப் போராடும் ‘நாகா தேசிய சோஷலிஸ்ட் கவுன்சிலு’க்கும் இந்தியாவுக்குமிடையே கடந்த 31 ஆம் தேதியோடு முடிவுக்கு வந்துள்ள போர் நிறுத்த ஒப்பந்தம், மீண்டும் தொடருவதற்கு இப்போது பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. நாகா தேசிய இன விடுதலைப் போராட்டம் பற்றிய ஓர் அறிமுகம் –*

இந்து சாதி அமைப்பிலிருந்து முழுமையாக வேறுபட்ட தனித்துவ மிக்கவர்கள் நாகா தேசிய இன மக்கள். நீண்டகாலமாக அங்கே கிராம நிர்வாக அமைப்பு முறை தான் நிலவியது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், அசாம், மணிப்பூர் பிரதேசங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பிரிட்டிஷ் ஆட்சி, அதன் வழியாக நாகலாந்தையும், தனது ஆட்சிக்குக் கீழே கொண்டு வந்தது. ஆனாலும், தனது காலணி நிர்வாக அமைப்பை, நாகர்கள் மீது பிரிட்டிஷ் நிர்வாகம் திணிக்கவில்லை. பிரிட்டிஷ் இந்தியா காலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் நாகாலாந்துக்குப் பொருந்தாது என்ற நிலையே நீட்டித்தது. மணிப்பூர் மாநிலத்தில்கூட நாகர்கள் வாழ்ந்த பகுதி பழங்குடியினர் பகுதியாக அறிவிக்கப்பட்டு, மணிப்பூர் ஆட்சி நிர்வாகத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. இந்து சாதி அமைப்பின் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமூகமாக நாகா சமூகம் இருந்ததைப் புரிந்து கொண்ட பிரிட்டிஷார், தங்களது நிர்வாக அதிகாரக் கட்டமைப்பின் கீழ், கொண்டு வராமல், நாகா கிராம நிர்வாக முறையை அங்கீகரித்தனர்.

1947 இல் பிரிட்டிஷார், இந்தியாவைவிட்டு வெளியேற முடிவுசெய்த போது இந்தியாவில் இடைக்கால அரசு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பிரிட்டிஷார், ஆலோசனைப்படி, இந்தியாவின் இடைக்கால நிர்வாக கவுன்சிலும், நாகா தேசிய கவுன்சிலும் கலந்து பேசி 9 அம்சங்கள் அடங்கிய ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொண்டன. நாகர்கள் வாழக்கூடிய பகுதிகளை இணைத்த ‘நாகாலிம்’ (அகண்ட நாகாலாந்து) அரசைப் பாதுகாப்பது என்றும், இந்த அரசுக்கு இந்தியா 10 ஆண்டு காலம் மட்டும், பாதுகாப்பு வழங்கும் என்றும், அதற்குப் பிறகு தங்களது எதிர்காலத்தை நாகர்கள் முடிவு செய்து கொள்ளலாம் என்றும் அந்த உடன்பாடு கூறியது.

ஆனால், இந்திய தேசியப் பார்ப்பனர்கள் வழக்கம் போல் தங்கள் திருவிளையாடல்களையே நடத்தினர். அரசியல் நிர்ணய சபையில் இந்த 9 அம்ச உடன்பாட்டுக்கு புதிய விளக்கங்கள் தரப்பட்டன. இந்திய அரசியல் அமைப்புக்குக் கீழே தான் அதற்குக் கட்டுப்பட்டே நாகலாந்து கிராமசபைகள் செயல்படும் என்றும், இதை இந்தியாவே நாகாலாந்து தேசிய கவுன்சிலைக் கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாக அமுல்படுத்தும் என்றும் முடிவு செய்தனர்.

அதன் பிறகு, நாகர்களின் பூர்வீகப் பிரதேசங்களை ராணுவத்தின் மூலம் கைப்பற்ற இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சி ஆயத்தமானது. 1947 ஜூலை 19 இல் இந்தப் பிரச்சினையை காந்தியார் கவனத்துக்குக் கொண்டு போனபோது, “நாகர்கள் விரும்பினால், இந்தியாவிலிருந்து பிரிந்து சுதந்திரநாடு அமைத்துக் கொள்ள முழு உரிமை உண்டு” என்று கூறினார். நாகர்களின் தேசத்தை ராணுவத்தின் மூலம் பறிப்பதைத் தாம் எதிர்ப்பதாகவும் காந்தி அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து, 1947 ஆகஸ்டு 14 ஆம் தேதி, நாகாலாந்து தேசிய கவுன்சில், நாகாலாந்தை சுதந்திர நாடாக அறிவித்து, அய்.நா., பிரிட்டன் மற்றும் இந்தியாவுக்கு இதைத் தெரிவித்தது. இந்த சுதந்திரப் பிரகடனத்தை இந்தியா ஏற்க மறுத்தது. சிலர் தவறான பாதைக்கு நாகாலாந்தை அழைத்துச் செல்வதாக இந்தியா குற்றம் சாட்டியது. வாக்கெடுப்பு நடத்தி தீர்மானிக்கலாம் என்று நாகர்கள் முன் வைத்த கோரிக்கையையும் இந்தியா ஏற்க மறுத்தது. 1951 ஆம் ஆண்டு மே 16 ஆம் தேதி, நாகர்களே, ஒரு வாக்கெடுப்பை நடத்தினர். அதில் 99.9 சதவீதம் பேர், நாகாலாந்து சுதந்திர நாடாக வேண்டும் என்று வாக்களித்தனர். நாகா மக்களின் உணர்வுகளை அங்கீகரிக்க மறுத்த இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சி, ராணுவத்தை அனுப்பி நாகா தேசிய இனத்தை ஒடுக்கி, அவர்களின் சுதந்திரக் குரலை நசுக்க முயன்றது.

*1956 இல் நாகா பிரச்னை தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் வந்தபோது, அன்றைய பிரதமர் நேரு, நாகர்கள் உரிமை தொடர்பாக, அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சிறப்புரிமைகளை இந்தியா விரும்பினால், மாற்றியமைத்துக் கொள்ளும் என்று அறிவித்தார்.*

இந்த நிலையில் - நாகர்கள் தங்களுக்கென ஒரு ராணுவத்தைக் கட்டி எழுப்பி, 1956 மார்ச் மாதத்தில் ‘நாகலாந்து தேசிய கூட்டமைப்பு அரசை’ப் பிரகடனப் படுத்தினர். ஆக்கிரமிப்பு இந்திய ராணுவத்துக்கு எதிராகப் போராட்டத்தைத் துவக்கினர். அடுத்த மூன்று மாதங்களில் நாகர்கள் பிரதேசங்களிலிருந்து, இந்திய ராணுவம் வெளியேற்றப்பட்டது. மீண்டும், ஆயிரக்கணக்கான படைகளுடன் இந்தியா தனது ஆக்கிரமிப்பைத் தொடங்கியது. 1958-59 இல் ஆக்கிரமிப்பு இந்திய ராணுவத்தை பல்லாயிரக்கணக்கான நாகர்கள் சுற்றி வளைத்து, அவர்களை சித்திரவதை முகாம்களில் அடைத்தனர். உணவு, தண்ணீர்கூட தரப்படவில்லை. பல இந்திய ராணுவத்தினர் இறந்தனர்.

நிலைமை மோசமாகவே பெட்ரண்ட்ரசல், மைக்கேல் ஸ்காட் (இவர் காந்தியின் ஆரம்பக் கால நண்பர்) சமரசம் பேச முன் வந்தனர். இவர்கள் தலையீட்டினால் போர் நிறுத்தம் செய்து கொள்ள இந்தியா முன் வந்தது. ஆனாலும், 3 ஆண்டுகளிலேயே 1967 இல் போர் நிறுத்தம் முறிந்து சமாதான ஒப்பந்தம் சீர்குலைந்தது. தொடர்ந்து இந்தியா, நாகாலாந்தை, இந்துக்களின் நாடாக மாற்றி இந்தியாவுக்குள் இணைக்க திட்டமிட்டு காய் நகர்த்தியது. இந்துமதத் தீவிரவாதிகளைக் கொண்டு போய் இறக்கி, மதமாற்றம் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டது. இதற்கான பொறுப்பை ஒரு இந்து அமைப்பிடம் வழங்கினர். வளமான வனப்பகுதியான நாகா பிரதேசத்தில் மரங்களை வெட்டும் உரிமையை 99 ஆண்டுகளுக்கு அந்த இந்துமத அமைப்புக்கு இந்திய அரசு வழங்கி, நாகாலாந்துக்குள் அனுப்பி வைத்தது. மதமாற்றத்துக்காக பெரும் தொகையைத் திரட்டுவதற்காக, இந்த ஏற்பாட்டை செய்தனர். பள்ளிகளில் இந்துமதம் பாடமாக்கப்பட்டது. இதற்காக மத்திய இந்தியாவிலிருந்து பார்ப்பன ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். கிறித்துவ மதம் அன்னிய மதம் என்று அறிவிக்கப்பட்டு, கிறித்துவ மதப் பிரச்சாரம் தடை செய்யப்பட்டது. கிறித்துவ பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளுக்கு பைபிள் கதை சொல்லவும், கிறித்துவ முறைப்படி உடல் அடக்கம் செய்யவும்கூட தடைசெய்யப்பட்டது. கிறித்துவர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகள் முழுமையாக மறுக்கப்பட்டன. கிறித்துவ நிறுவனங்கள் அழிக்கப்பட்டன. இந்த அழித்தொழிப்பு நடவடிக்கைகளுக்கு சட்ட வடிவம் தர 1978 இல் இந்திய நாடாளுமன்றத்தில் ‘மதச் சுதந்திர மசோதா’ ஒன்று தனி நபர் மசோதாவாக அறிமுகப்படுத்தப்பட்டது. மதச்சார்பின்மைக்கு எதிரான இந்த மசோதா கடும் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது.

1975 இல் இந்தியா ‘ஷில்லாங் ஒப்பந்தம்’ என்ற சரணாகதி ஒப்பந்தத்தை நாகாலாந்து மக்கள் மீது திணித்தது. மக்களிடமிருந்து அன்னியமாகிவிட்ட ஒரு சில நாகா தலைவர்கள் இதை ஏற்றுக் கொண்டாலும், நாகா மக்களிடம் செல்வாக்குள்ள தலைவராகத் திகழ்ந்த டி.எச்.மொய்வா மற்றும் சிஷி (இவர் நாகாலாந்து கூட்டாட்சி அரசில் வெளியுறவுத் துறை செயலாளராக இருந்தவர்) இதை ஏற்கவில்லை. 1980 இல் மொய்வா நாகர்களின் அகண்ட நாகாலாந்துக்கான ‘தேசிய சோஷலிஸ்ட் கவுன்சில்’ என்ற அமைப்பை உருவாக்கினார். இந்திய ராணுவத்துக்கு எதிராக நாகா ராணுவம் தாக்குதலைத் தீவிரமாக்கியது. 1980 களின் மத்தியில் நாகர்களின் தாக்குதலை சமாளிக்க முடியாமல், இந்திய ராணுவம் திணறியது. அரசியல் ரீதியாக, கடும் பின்னடைவை சந்தித்தது, இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சி.

இனியும், ராணுவத்தால் நாகர்களின் தேசிய விடுதலை உணர்வை நசுக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்ட இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சி, மூன்றாவது நாட்டின் முன்னிலையில் நிபந்தனையற்ற சமரசப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. இரண்டு ஆண்டுகள் திரை மறைவில் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்தன. கடைசியாக 1997 ஜூலை 25 இல் போர் நிறுத்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது. ஜப்பான் உட்பட பல்வேறு நாடுகளில் நாகா தலைவர் மொய்வாவுடன், இந்தியாவின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். போர் நிறுத்த ஒப்பந்தம் 2007, ஜூலை 31 ஆம் தேதியோடு முடிவுக்கு வருகிறது. பேச்சு வார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அசாம், அருணாசல பிரதேசம், மணிப்பூர் மாநிலங்களில் நாகர்கள் வாழும் பகுதிகளைச் சேர்த்து அகன்ற நாகாலாந்து அமைக்கப்பட வேண்டும் என்ற தங்களது கோரிக்கையில் நாகாலாந்து சோஷலிஸ்ட் கவுன்சில் உறுதியாக உள்ளது.

10 ஆண்டுகாலமாக அமுலில் இருந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஜூலை 31க்குப் பிறகும் நீட்டிப்பது பற்றி இரு தரப்பினரும் நாகாலாந்தில் திம்மாப்பூரில் கடந்த 10 நாட்களாக பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர். இவ்வளவு காலமாக ஒசாக்கா (ஜப்பான்), பாங்காங் (தாய்லாந்து), புதுடில்லி போன்ற நகரங்களில் நடந்த பேச்சு வார்த்தை, இப்போது தான் முதன்முதலாக நாகாலாந்திலேயே திம்மாப்பூரில் நடப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று, ஓயாது எழுதி வரும் ‘இந்து’ பார்ப்பன நாளேடு, நாகாலாந்து இயக்கத்தினருடன் பேச்சு வார்த்தையைப் பொறுப்புடன் நடத்த வேண்டும் என்று அரசுக்கு அறிவுரை கூறுகிறது. இது ‘இந்து’வின் இரட்டை வேடத்தைக் காட்டுகிறது. தேசிய இனங்களின் நியாயமான உரிமைகளை இந்திய தேசியப் பார்ப்பனியம் தனது காலடியில் நசுக்கி வரும் கொடிய அடக்குமுறைக்கு நாகாலாந்து தேசிய இனப் போராட்டம், சான்றாக நிற்கிறது.

**‘நமது செய்தியாளர்’**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# தீண்டாமை தடுப்புச் சட்டங்கள் போனதெங்கே?

*முதல் பக்கத் தொடர்ச்சி*

செட்டிப்பாளையம் அஞ்சல், கோபி வட்டம்.

காளியப்பன் டீக்கடை, தெற்குப் பகுதி, அரிசி ஆலை அருகில், எலத்தூர் மெயின்ரோடு, எலத்தூர்,செட்டிப்பாளையம் அஞ்சல், கோபி வட்டம்.

பொன்னுச்சாமி டீக்கடை, தெற்குப் பகுதி, அரிசி ஆலை அருகில், எலத்தூர் மெயின்ரோடு, எலத்தூர் செட்டிப்பாளையம் அஞ்சல், கோபி வட்டம்.

சின்னப்பன் (எ) காளையன், மாரனூர், ஊத்தண்டியூர் ஊராட்சி, மாரனூர் மேடு, செண்பகபுதூர் அஞ்சல், சக்தி தாலுக்கா.

சிந்து உணவகம் (தேனீர்க்கடை), குமாரசாமி, செண்பகப்புதூர் ஊராட்சி, செண்பகபுதூர் அஞ்சல், சத்தியமங்கலம் வட்டம்.

பாலன் உணவகம் (தேனீர்க்கடை), மாரனூர், உத்தண்டியூர் ஊராட்சி, மாரனூர் மேடு, செண்பகபுதூர் அஞ்சல், சத்தியமங்கலம் வட்டம்.

ராஜேந்திரன் தேனீரகம், வேடச்சின்னானூர் (பேருந்து நிறுத்தம் அருகில்) வேடச்சின்னானூர் ஊராட்சி செண்பகபுதூர் அஞ்சல், சத்தி வழி.

கோபால் தேனீர்க் கடை, விண்ணப்பள்ளி ஊராட்சி, பாலிபாளையம் அஞ்சல், சத்தி வட்டம்.

மாகாளி நாய்க்கர் தேனீர்க்கடை, புதுரோடு (பேருந்து நிலையம் அருகில்), செண்பகபுதூர் அஞ்சல், விண்ணப்பள்ளி ஊராட்சி, சத்தி வழி.

சிக்கரசம்பாளையம்(ஊராட்சி) பொன்னம்மா உணவகம், சிக்கரசம்பாளையம் புதுகாலனி, பேருந்து நிலையம் அருகில், சிக்கரசம்பாளையம் அஞ்சல் சக்தி வட்டம் - 638 401.

சிக்கரசம்பாளையம் ஊராட்சி ராமசாமி தேனீரகம், குளத்தூர் பிரிவு, சிக்கரசம்பாளையம் அஞ்சல், சக்தி வட்டம் - 638 401.

அரியப்பம்பாளையம் பேரூராட்சி சின்னப்பன் டீ, உணவகம், மூலக்கிணறு, அரியப்பம்பாளையம் அஞ்சல், சக்தி வட்டம் - 638 402.

பழனிசாமி டீ, உணவகம், மூலக்கிணறு, அரியப்பம்பாளையம் அஞ்சல், சக்தி வட்டம் - 638 402.

தனலட்சுமி டீ, உணவகம், கொத்துக்காடு, அரியப்பம்பாளையம் அஞ்சல், சக்தி வட்டம் - 638 402.

மணி, டீ, உணவகம், கொத்துக்காடு, அரியப்பம்பாளையம் அஞ்சல், சக்தி வட்டம் - 638 402.

டீ, உணவகம், தமிழரசு (கோவில் அருகில்), பெரியூர், அரியப்பம்பாளையம் அஞ்சல், சக்தி வட்டம் - 638 402.

ஸ்ரீ மாகாளியம்மன் கோவில், பெரியூர், அரியப்பம்பாளையம் அஞ்சல், சக்தி வட்டம் - 638 402.

டீ, உணவகம், சிவகாமி (காலனி அருகில்), சதுமுகை அஞ்சல், தா.க. புதூர் வழி, சக்தி வட்டம் - 638 503.

முருகேசன், டி, உணவகம், காலனி அருகில், கெம்மநாய்க்கன்பாளையம் அஞ்சல், தா.க.புதூர் வழி, சக்தி வட்டம் - 638 503.

கோபால் டீ ஸ்டால் (பட்டரை ஸ்டாப் கூடக்கரை), ராஜகோபால், கூடக்கரை அஞ்சல், காசிபாளையம் வழி, கோபி தாலுக்கா - 638 454.

பாலாஜி டீ ஸ்டால் (பட்டரை ஸ்டாப் கூடக்கரை), பழனியப்பன், கூடக்கரை அஞ்சல், காசிபாளையம் வழி, கோபி தாலுக்கா - 638 454.

ரவி டீ ஸ்டால் (மேற்கு பகுதி கூடக்கரை), ரத்தினசாமி, கூடக்கரை அஞ்சல், காசிபாளையம் வழி, கோபி தாலுக்கா - 638 454.

லட்சுமி டீ ஸ்டால் (கூடக்கரை மேற்கு), மணி பண்டாரம், கூடக்கரை அஞ்சல், காசிபாளையம் வழி, கோபி தாலுக்கா - 638 454.

தங்கராசு டீ ஸ்டால் (கூடக்கரை மேற்கு), இராமலிங்கம், கூடக்கரை அஞ்சல், காசிபாளையம் வழி, கோபி தாலுக்கா - 638 454.

கொண்டையம்பாளையத்துக் காரன் டீ ஸ்டால், (கூடக்கரை மேற்கு), சுப்பிரமணியம், கூடக்கரை அஞ்சல், காசிபாளையம் வழி, கோபி தாலுக்கா - 638 454.

கிட்டுசாமி டீ ஸ்டால், (கூடக்கரை மேற்கு), சுப்பிரமணியம், கூடக்கரை அஞ்சல், காசிபாளையம் வழி, கோபி தாலுக்கா - 638 454.

சரவணன் புரோட்டா ஸ்டால், உணவகம், கூடக்கரை மேற்கு, உரிமை : சரவணன், *இவர் அரியப்பம்பாளையத்தை சார்ந்தவர்.*

**குறிப்பு: அனைத்துக் கடைகளிலும் செயற்கைக் குவளை (பிளாஸ்டிக் கப்) அதிகம் பயன்படுத்தப்படுகிறது.**

கோயில் அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில் கூடக்கரை (வடக்கு)

*தாழ்த்தப்பட்டவர்களுக்கு கூடக்கரையில் முடித்திருத்தாத கடைகள்*

செல்வன் சலூன் கடை, *உரிமை:* செல்வன், கூடக்கரைமேற்கு, கூடக்கரை.

லோகு சலூன் கடை, *உரிமை:* லோகநாதன், கூடக்கரை மேற்கு, கூடக்கரை.

லிங்கேஸ் சலூன் கடை, *உரிமை:* லிங்கேஸ்வரன், கூடக்கரை மேற்கு, கூடக்கரை.

லைட் (எ) ஆறுமுகம், அயனிங்கடை, கூடக்கரை.

**கோவை மாவட்டத்தில்...**

கோவை புறநகர் மோளப்பாளையம், சித்திரைச்சாவடி, வடிவேலம்பாளையம், விராலியூர், நரசிபுரம், அஜ்ஜனூர், கண்டப்பாளையம், காளப்பநாயக்கன் பாளையம், ஜாகீர் நாயக்கன் பாளையம், வெள்ளருக்கம் பாளையம், சிலம்பனூர்.

பெரியநாயக்கன் பாளையம், காரமடை மேற்கு - புஜ்ஜனூர், திம்மம்பாளையம், கே.புங்கம்பாளையம், புன்னையூர், வெள்ளியங்காடு, கண்டியூர், சின்னப்புத்தூர், பெரிய புத்தூர், மங்களக்கரை புதூர், மூலத்துறை, பாலப்பட்டி, வச்சினப்பாளையம், கிட்டாம்பாளையம், புதூர்.

*அன்னூர் :* மோக்கனூர், எஸ். புங்கம்பாளையம், பகத்தூர், பல்லேபாளையம்.

*இரும்பொறை :* கவுண்டன்பாளையம், மீனம்பாளையம், கனுவக்கரை, கள்ளப்பட்டி, சின்னரங்கம்பாளையம், பெரியரங்கம்பாளையம்.

*அவிநாசி -* சேவூர், நம்பியாம்பாளையம் (கருவலூர் சாலை), ராணியம்பாளையம், தண்டுக்காரன்பாளையம்.

*ஈரோடு உட்கோட்ட எல்லை-* காவிரி பாளையம், குப்பன் துறை, உக்கரம், கடத்தூர், பனையம்பாளையம்.

*பல்லடம் -* பாப்பம்பட்டி, கண்ணம்பாளையம், சித்தநாயக்கன்பாளையம், லட்சுமி நாயக்கன்பாளையம், கரடிவாவி, பருவாய், ஆராக்குளம், அனுப்பட்டி, லட்சுமி மில்ஸ், ஐயம்பாளையம், 11 சென்னிபாளையம், அப்பம்பாளையம், காளிகாளப்பட்டி, வேலம்பட்டி, மடுகபாளையம், எளவந்தி, துத்தாரிபாளையம், கேத்தனூர், வெங்கிட்டாபுரம், பணப்பட்டி, பிரண்டம்பாளையம், சிக்கனத்தூர்.

**தனி சுடுகாடு உள்ள இடங்கள்:**

இராஜீவ்காந்தி நகர் வடவள்ளி, கணுவாய், நாதேகவுண்டன்புதூர், மேட்டுக்காடு, முல்லைநகர், புதூர் புதுக்காலனி, போளுவாம்பட்டி, தெனமநல்லூர், ஆலாந்துறை, செம்மேடு, ஆறுமுகனூர், பச்சாபாளையம், கோவைப்புதூர், இடையர்பாளையம், லிங்கனூர் ஆதி தமிழன் நகர்.

*தீண்டாமை கடைபிடிக்கும் பொது கோவில் :* காளப்பட்டி மாரி அம்மன் கோயில்

*தேனீர் கடைகள் : பெருமநாயக்கன் பாளையம்.*

பெருமாநாயக்கன்புதூர், குண்டடம் ஒன்றியம், தாராபுரம் வட்டம்.

எடையபட்டி, குண்டடம் ஒன்றியம், தாராபுரம் வட்டம்.

பாரபாளையம், கொடுவாய் ஒன்றியம், காங்கயம் வட்டம்.

வலையபாளையம், குண்டடம் ஒன்றியம், தாராபுரம் வட்டம்.

*வெல்லநத்தம் கிழக்கு.*

வெல்லநத்தம் வடக்கு, குண்டடம் ஒன்றியம், தாராபுரம் வட்டம்.

சாத்தநாயக்கன்பாளையம், குண்டடம் ஒன்றியம், தாராபுரம் வட்டம்.

மேட்டு கடை டீ கடை, பாரதியார் நகர், குண்டடம் ஒன்றியம், தாராபுரம் வட்டம்.

ராமாத்தாள் டீ கடை, பாப்பம்பட்டி, பாப்பம்பட்டி அஞ்சல், சுல்தான்பேட்டை ஒன்றியம், கோவை - 641 016.

ஆசாரி மணி கடை, கரும்புரவிபாளையம், வடவேடம்பட்டி அஞ்சல், கேத்தனூர் வழி, பல்லடம் தாலுக்கா, கோவை மாவட்டம்.

பாலு உணவகம், கரடிவாலி, பல்லடம் தாலுக்கா, கோவை மாவட்டம்.

வஞ்சியம்மன் உணவகம், லட்சுமி உணவகம், செம்மிபாளையம் அஞ்சல், பல்லடம் தாலுக்கா, கோவை மாவட்டம்.

குமார் உணவகம், சுக்கம்பாளையம், சுக்கம்பாளையம் அஞ்சல், பல்லடம் தாலுக்கா, கோவை மாவட்டம்.

அமாசையப்பன் கவுண்டர் உணவகம், காமராசர் நகர், கண்ணம்பாளையம் அஞ்சல், சூலூர் ஒன்றியம், பல்லடம் தாலுக்கா, கோவை மாவட்டம்.

கவுண்டர் தேனீர் நிலையம், சிக்கனூத்து, சுல்தான் பேட்டை ஒன்றியம், கோவை மாவட்டம்.

தெற்குப்பாளையம், பொங்கலூர் ஒன்றியம், கோவை மாவட்டம்.

மேட்டு கடை டீ கடை, பாரதியார் நகர், குண்டடம் ஒன்றியம், தாராபுரம் தாலுக்கா.

புத்தரச்சல் டீ கடை, குண்டடம் ஒன்றியம், தாராபுரம் தாலுக்கா.

**சலூன்**

வளர்மதி சலூன், மல்லேஸ்வரி சலூன், பாப்பம்பட்டி, பாப்பம்பட்டி அஞ்சல், சுல்தான்பேட்டை ஒன்றியம், கோவை.

ஹீராட் சலூன், சித்நாயக்கன்பாளையம், சுல்தான்பேட்டை ஒன்றியம், கோவை.

நிலா நிரோஷா ஹேர் லைன்ஸ், குப்புசாமி நாயுடுபுரம், பல்லடம் தாலுக்கா, கோவை.

**தலித் மக்களை உள்ளே விடாத கோயில்**

மாகாளியம்மன் வீரமாத்தியம்மன் கோயில், பாப்பம்பட்டி, பாப்பம்பட்டி அஞ்சல், சுல்தான்பேட்டை ஒன்றியம், கோவை.

நடுகவுண்டர் பெரிய பாப்பா கடை, வடவேடம்பட்டி, வடவேடம்பட்டி அஞ்சல், கேத்தனூர் வழி, சுல்தான்பேட்டை, பல்லடம் தாலுக்கா, கோவை.

சுப்பையா கவுண்டர் டீ கடை, கிருஷ்ணா நகர், கரடிவாலி, பல்லடம் தாலுக்கா, கோவை.

முத்தக்கா டீ கடை, அனுப்பட்டி, பல்லடம் தாலுக்கா, கோவை.

பழனிச்சாமி கவுண்டர் டீ கடை, வெங்கிட்டாபுரம், பல்லடம் தாலுக்கா, கோவை.

நடராஜ் டீ கடை, குள்ளம்பாளையம் மேற்கு, சுல்தான்பேட்டை, பல்லடம் தாலுக்கா, கோவை.

சுப்ரமணி டீ கடை, குள்ளம்பாளையம் மேற்கு, சுல்தான்பேட்டை, பல்லடம் தாலுக்கா, கோவை.

செந்தில் நாயக்கர் டீ கடை, துத்தாரிபாளையம் பிரிவு, பொங்கலூர் ஒன்றியம், பல்லடம் தாலுக்கா, கோவை.

எலவந்தி வடுகபாளையம், மூன்று டீ கடை, பொங்கலூர் ஒன்றியம், பல்லடம் தாலுக்கா, கோவை.

மாரப்பன் கவுண்டர் டீ கடை, காளிவேலம்பட்டி, சுக்கம்பாளையம் அஞ்சல், பல்லடம் தாலுக்கா, கோவை.

கீர்த்திகா டீ கடை, வடவேடம்பட்டி, வடவேடம் பட்டி அஞ்சல், கேத்தனூர் வழி, சுல்தான்பேட்டை, பல்லடம் தாலுக்கா, கோவை.

**விழுப்புரம் மாவட்டம்**

அப்பு (ஆறுமுகம்), அருத்தங்கொடி, திருக்கோவிலூர் வட்டம்.

குமார் (செகதீசன்), லக்கிநாயக்கம்பட்டி, சங்கராபுரம் வட்டம்.

**ஆதி திராவிடர்களை அனுமதிக்காத கோயில்கள்**

சிவன் கோயில் - கடுவனூர், சங்கராபுரம் வட்டம்.

துரோபதி அம்மன் - தொழுவந்தாங்கல், சங்கராபுரம் வட்டம்.

துரோபதி அம்மன் - கள்ளிப்பட்டு, சங்கராபுரம் வட்டம்.

ஈசுவரன் கோயில் - கூவனூர், திருக்கோவிலூர் வட்டம்.


கல்வராயன் கோயில் - கோமனூர், கள்ளக்குறிச்சி வட்டம்.

வினாயகர் கோயில் - நாகந்தூர், செஞ்சி வட்டம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 2nd August 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஆகஸ்டு 09, 2007 புரட்சி 5 முழக்கம் 32 விலை : ரூ.2.50


### பல தேனீர்க்கடைகளில் இரட்டைக் குவளை ஒழிகிறது!

## கழகம் தயாரித்த பட்டியல் அடிப்படையில் காவல்துறை அதிரடி நடவடிக்கை

கோவை, சேலம், தர்மபுரி மாவட்டங்களிலும், திண்டுக்கல் பகுதியிலும் கிராமங்களில் தேனீர் கடைகளில் தீண்டாமையின் வடிவங்களான 'இரட்டைக் குவளை', 'இரட்டை இருக்கை' முறைகள் பின்பற்றப்பட்டு வருவதை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகம், களத்தில் இறங்கியுள்ளது.

தீண்டாமையை பின்பற்றப்படும் தேனீர் கடைகளின் பட்டியல் தயாரிப்பு பணிகளில் தோழர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழிலும் இந்த இதழிலும் அந்தப் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆகஸ்டு 15 ஆம் தேதிக்குள் இந்தத் தீண்டாமைக்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் இரட்டைக் குவளைகளை உடைக்கும் போராட்டத்தைக் கழகம் தஞ்சையில் மே 19 இல் நடந்த சாதி ஒழிப்பு மாநாட்டில் அறிவித்தது. கழகத் தோழர்கள் இரட்டைக் குவளை அமுலிலுள்ள தேனீர்க்கடைகளின் விவரங்களை திரட்டினர்.

கழகத் தோழர்கள் 'இரட்டைக் குவளை' முறையைப் பின்பற்றும் கடைகளின் பட்டியலைத் தயாரித்தவுடன், அந்தந்தப் பகுதியில் காவல்துறையினர், கழகப் பொறுப்பாளர்களிடம் பட்டியலைப் பெற்று, நடவடிக்கைகளில் இறங்கி வரும் செய்திகள் கிடைத்துள்ளன. பட்டியலில் இடம் பெற்ற கடைகளுக்கு காவல்துறையினர் நேரில் சென்று, இரட்டைக் குவளைகளை உடன் அகற்ற வேண்டும் என்று எச்சரிக்கை செய்து வரு கிறார்கள். இதனால் பல கடைகளில் இரட்டைக் குவளை முறை கைவிடப்பட்டுள்ள மகிழ்ச்சியான செய்தியை கழகத் தோழர்கள் தெரிவித்துள்ளனர்.

**அரசுக்கு அவகாசம் தர, போராட்டத் தேதி தள்ளி வைப்பு!**

ஒட்டன் சத்திரம் அருகே வாகறை எனும் ஊரிலுள்ள ஒட்டலில் உண வருந்தச் சென்ற கழகத் தோழர்களை சாதி வெறியுடன் ஒட்டலிலிருந்து அதன் உரிமையாளர் வெளி யேற்றிய செய்தியும், அதைத் தொடர்ந்து கழகம் போராட்டம் நடத்திய செய்தியும் ஏற்கனவே வெளி வந்துள்ளது. வாகறையில் சம்பவம் நடந்த தேனீர்க் கடைக்கு காவல் துறையினர் நேரில் சென்று கடும் எச்சரிக்கை செய்து, இரட்டை தம்ளர் முறைக்கு முற்றுப் புள்ளி வைத் துள்ளனர் என்ற செய்தியும் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் - 'தீண்டாமை' நிலவும் தேனீர்க் கடைகளின் முழுமையான பட்டியலைத் தயாரிக்கவும், அரசு நடவடிக்கைகளை மேலும் தொடர கால அவகாசம் தரவும் ஆகஸ்டு 15 போராட்டத்தை மேலும் சுமார் ஒரு மாத காலம் தள்ளி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கழகத் தலைவர், பொதுச்செயலாளர்கள் கலந்து பேசி இந்த முடிவை எடுத்துள்ளனர்.

கழகத் தோழர்கள் பட்டியல் தயாரிப் புப் பணிகளில் மேலும் தீவிரமாக களமிறங்கி செயல்படவும், அதுபோழ்து சாதி, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரப் பயணத்தை நடத்தவும், திட்டமிடப்பட்டுள்ளது. கோவை, தர்மபுரி, சேலம், திண்டுக்கல் பகுதிகளில் கிராமம் கிராமமாக கழகத்தின் இரண்டு பிரச்சார அணிகள் - தீண்டாமை சாதிக்கு எதிராக பிரச்சாரம் செய்து, மக்களை அணி திரட்டும். இந்தப் பிரச்சார அணியின் பயணத் திட்டம் அடுத்த இதழில் வெளி வரும். பட்டியல் தயாரிப்பு மற்றும் பிரச்சாரப் பயணம் முடிந்த நிலையில் 'இரட்டைக் குவளை' உடைப்புப் போராட்டத்தில் கழகம் இறங்கவுள்ளது. ஆகஸ்டு 13 ஆம் தேதி சென்னையில் நடைபெற இருக்கும் கழக ஆட்சிக்குழு கூட்டத்தில் ஆட்சிக் குழுவினரோடு கலந்து பேசி போராட்டத் தேதி முடிவு செய்யப்படும். கழகத் தோழர்களே, தயாராவீர்! ●

## கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசுவுடன் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் கல்வி மணி சந்திப்பு

தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கல்வியாளர் பேராசிரியர் கல்விமணி ஆகியோர் ஆகஸ்டு 1 ஆம் தேதி அன்று காலை 9 மணியளவில் அமைச்சரின் இல்லத்தில் சந்தித்துப் பேசினர். அரசு ஒதுக்கீட்டின் கீழ், தனியார் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் அனுமதிக்கப்படும் மாணவர்களிடமிருந்து, சட்ட விரோதமாக அந்நிறுவனங்கள் வாங்கும் நன்கொடை, 'பிளஸ் 1' வகுப்பில் அரசு ஆணை இருந்தும் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் தனித்தனியாக இடஒதுக்கீட்டைப் பின்பற்றப்படாத நடைமுறை, 'பிளஸ் 1' பாடத்தை நடத்தாமலே முதல் ஆண்டிலேயே 'பிளஸ் டூ' தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதால் ஏற்படும் அறிவாற்றல் இழப்பு, அதனால் அய்.அய்.டி. போன்ற உயர் கல்வியில் தமிழகம் சந்திக்கும் பின்னடைவு, அரசு நிதி உதவி பெறாத பள்ளிகளை அநாதைப் பள்ளிகளாகக் கருதி அதில் படித்து வரும் ஏழை ஒடுக்கப்பட்ட சமூக மாணவர்களுக்கு அரசின் பாடநூல் உதவி, மதிய உணவுத் திட்டம் போன்ற எந்த சலுகைகளும் கிடைக்கப் பெறாத துயர நிலை, தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்கு சத்துணவு உட்பட அரசு செய்ய வேண்டிய உதவிகள், கிராமப்புற மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி, அரசாணைக்கு பதிலாக சட்டமன்றத்தில் சட்டமியற்றுதல் போன்ற பிரச்சினைகள் பற்றி அமைச்சரிடம் எடுத்துக் கூறப் பட்டது. அமைச்சர் மிகவும் கவலையுடனும், ஈடுபாட்டுடனும் பிரச்சினை களைக் கேட்டார். உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

## திருப்பூரில் எழுச்சியுடன் நடந்த பெரியாரியல் பயிலரங்கம்




5.8.2007 ஞாயிறு காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை திருப்பூர் துரைசாமி அவர்கள் தோட்டத்தில் பெரியாரியல் பயிலரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் துரைசாமி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் கலந்து கொண்டு இயக்க வரலாறு, இயக்கச் செயல்பாடுகள் குறித்து விரிவாக விளக்கினர். நிகழ்ச்சியில் புதிய தோழர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு ஆர்வத்துடன் கருத்துக்களை கேட்டனர். கலந்து கொண்ட தோழர்களுக்கு மதிய உணவை தோழர்கள் அகிலன், முகில்ராசு ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சியில் அங்க குமார், ராவணன், பல்லடம் திருமூர்த்தி, விஜயன், அவிநாசியப்பன், ஜீவாநகர் குமார் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கழகத் தோழர்கள் தயாரித்த பட்டியல்

# சேலம் மாவட்டத்தில் 'இரட்டைக் குவளை' தேனீர் கடைகள்

*தீண்டாமையை பின்பற்றும் சாதி வெறி தேனீர் கடைகள் பற்றிய பட்டியல்களை கழகச் செயல்வீரர்கள் தயாரித்து வருகிறார்கள். இது சேலம் மாவட்ட கழகத் தோழர்கள் தயாரித்து அனுப்பிய பட்டியல்.*

**மகுடஞ் சாவடி.**
**வீரபாண்டி ஒன்றியம்**

தங்கம் டீ கடை
பெத்தாம்பட்டி
முருங்கப்பட்டி (அஞ்சல்)
வீரபாண்டி ஒன்றியம்.

ஜெகநாதன் டீ கடை
ஏழமாத்தனூர்
இளம்பிள்ளை (அஞ்சல்)
மகுடஞ்சாவடி ஒன்றியம.

மணையாரன் கடை
(டீ மற்றும் உணவு)
கொம்பாடிப்பட்டி.
அரியானூர்.
வீரபாண்டி ஒன்றியம.

கந்தசாமி டீ கடை
கூட்டத்துப்புளியம்மரம்.
(இளம்பிள்ளை அருகில்)
இராசிகவுண்டனூர்
இடங்கணசாலை (அஞ்சல்)
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

நடுஆள் கடை.
கரிக்கடை பஸ் நிறுத்தம்.
இனம்பிள்ளை அருகில்.
இராசிகவுண்டனூர்.
இடங்கண சாலை (அஞ்சல்)
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

செமட்டையன் டீ கடை.
மாரமங்கலத்துபட்டி.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

சுப்பையன் டீ கடை
மாரமங்கலத்துபட்டி.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

சுந்தரம் டீ கடை
கீரைபாப்பம்பாடி.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

பாண்டியன் டீ கடை
கீரைபாப்பம்பாடி.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

கோவிந்தன் டீ கடை
பாகல்பட்டி.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

இரவி டீ கடை
பாகல்பட்டி.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

லோகநாதன் டீ கடை
கணக்கன்திட்டு.
அழகுசமுத்திரம்.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

இராஜமாணிக்கம் டீ கடை
கருங்கல்வாடி.
அழகுசமுத்திரம்.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

பாண்டு(எ)இளஞ்கோ டீ கடை
கருங்கல்வாடி.
அழகுசமுத்திரம்.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

அருணகிரி டீ கடை
கருங்கல்வாடி.
அழகு சமுத்திரம்.
இரும்பாலை அஞ்சல்.
வீரபாண்டி ஒன்றியம்.

சின்னபையன் டீ கடை
மேட்டுகாடு.
நடுவனேரி ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

முருகேசன் டீ கடை
தைலாம்பட்டி.
ஏகாபுரம் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

மணி டீ கடை
ஏகாபுரம்.
ஏகாபுரம் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

சேட்டு டீ கடை
ஏகாபுரம்.
ஏகாபுரம் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

பெருமாகவுண்டர் டீ கடை
ஏகாபுரம்.
ஏகாபுரம் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

தங்கம் டீ கடை
ஊரட்சி மன்ற தலைவர்
அய்யனூர்.
தப்பக்குடடை ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

இராஜி டீ கடை
அய்யனூர்.
தப்பக்குடடை ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

செல்வம் டீ கடை
அய்யனூர்.
தப்பக்குடடை ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

செல்லமுத்து டீ கடை
சின்னமாரியம்மன் கோவில்.
தப்பக்குடடை ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

சீனி டீ கடை
சின்னமாரியம்மன் கோவில்.
தப்பக்குடடை ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

தேவன் (எ) தேவராஜ் டீ கடை
சின்னமாரியம்மன் கோவில்.
தப்பக்குடடை ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

பெருமாள் டீ கடை
ஒண்டிக்கடை.
கண்ணந்தேரி ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

கணேசன் டீ கடை
நத்தக்காடு.
கண்ணந்தேரி ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்,

பெரியசாமி டீ கடை
நத்தக்காடு.
கண்ணந்தேரி ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்,

கந்தாயி டீ கடை
அ.தாலையூர்.
தாலையூர் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

தனபால் டீ கடை
ராம்நகர்.
தாலையூர் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

சுக்கட்டான் டீ கடை
ராம்நகர்.
தாலையூர் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

அலமேலு டீ கடை
ஆசாரிபட்டறை.
தாலையூர் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

குண்டன் டீ கடை
சுண்டமேட்டூர்.
புதூர் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

வாத்தியார் டீ கடை
சுண்டமேட்டூர்.
புதூர் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

செல்வம் டீ கடை (அப்பா)
ஒண்டிபனை.
புதூர் ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

சின்னமுத்து டீ கடை
கீழ்கடை.
கண்ணந்தேரி ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

பச்சமுத்து டீ கடை
ஜோசியர்காடு.
கண்ணந்தேரி ஊராட்சி.
மகுடஞ்சாவடி ஒன்றியம்.

எம்.ஜி டீ கடை
அத்தனூர்.
வெண்ணந்தூர் பேருராட்சி.
இராசிபுரம் வட்டம்.
நாமக்கல் மாவட்டம்.

குப்பன் டீ கடை
அத்தனூர்.
வெண்ணந்தூர் பேருராட்சி.
இராசிபுரம் வட்டம்.
நாமக்கல் மாவட்டம்.

**குறிப்பு** இவை அனைத்தும் சாதிவெறி மற்றும் ஆதிக்கம் உள்ள பகுதிகள்.

**தாரமங்கலம் ஒன்றியம்**

வெள்ளையன் டீ கடை
மல்லிகுட்டை.
ஓலைப்பட்டி ரோடு.
தாரமங்கலம் ஒன்றியம்.

வெள்ளிகண்ணன் டீ கடை
பஞ்சாயத்து அலுவலகம் எதிரில்.
மல்லிகுட்டை.
ஓலைப்பட்டி ரோடு.
தாரமங்கலம் ஒன்றியம்.

கோவிந்தன் டீ கடை
ஆலமரக்கடை.
மல்லிகுட்டை.
ஓலைப்பட்டி ரோடு.
தாரமங்கலம் ஒன்றியம்.

அரங்கன் டீ கடை
மாரியம்மன்கோவில் அருகில்.
மல்லிகுட்டை.
ஓலைப்பட்டி ரோடு.
தாரமங்கலம் ஒன்றியம்,

செம்மன் டீ கடை
ஓலைப்பட்டி.
தாரமங்கலம் ஒன்றியம்.

மானுவேல் டீ கடை
ஓலைப்பட்டி.
தாரமங்கலம் ஒன்றியம்.

இரத்தினம் டீ கடை
ஓலைப்பட்டி.
தாரமங்கலம் ஒன்றியம்.

கணேசன் டீ கடை
ஓலைப்பட்டி.
தாரமங்கலம் ஒன்றியம்.

**நங்கவள்ளி ஒன்றியம்**

வேனுமயில் டீ கடை
பேருந்து நிருத்தம்.
சின்னசோரகை.
நங்கவள்ளி ஒன்றியம்.

மாரியப்பன்
பவளத்தானூர்.

**மேட்டூர் பகுதி**

வடிவேல் டீ கடை
காவேரிகிராஸ்.
மேட்டூர் பகுதி.

வெள்ளையம்மாள் டீ கடை
கூராண்டியூர்.
மேட்டூர் பகுதி.

கிருட்டிணன் டீ கடை
செக்கானூர் பேரேஜ்.
மேட்டூர் பகுதி.

மணி டீ கடை
தண்ணீர் டேங்க் எதரில்.
சின்னப்பள்ளம்.
மேட்டூர் பகுதி.

பொன்னுசாமி டீ கடை
பேருந்துநிறுத்தம்.
பெரும்பள்ளம்.
மேட்டூர் பகுதி.

இராஜா டீ கடை
ரெட்டியூர்.
மேட்டூர் பகுதி.

செக்கானூர் கிழக்குகரை.
மேட்டூர் பகுதி.

**ஈரோடு மாவட்டம்.**
**அம்மாபேட்டை ஒன்றியம்**

குமார் த-பெ மணி டீ கடை
மசக்கவுண்டனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

பாப்பாள் டீ கடை
மசக்கவுண்டனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

கந்தன் டீ கடை
மசக்கவுண்டனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

சோலையம்மாள் டீ கடை
மசக்கவுண்டனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

கண்ணம்மாள் க-பெ மாதப்பன் டீ கடை
மசக்கவுண்டனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

செல்லம்மாள் டீ கடை
பாப்பாத்தி காடு.
சென்னம்பட்டி ஊராட்சி.

கபூர் டீ கடை
காளியாய் கோவில்.
கொமராயனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

மணி டீ கடை
காளியாய் கோவில்.
கொமராயனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

நாச்சிமுத்து டீ கடை
காளியாய் கோவில்.
கொமராயனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

சிவரஞ்ஜனி ஸ்டோர்
காளியாய் கோவில்.
கொமராயனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

முருகேரு
காளியாய் கோவில்.
கொமராயனூர்.
சென்னம்பட்டி ஊராட்சி.

**காவலாண்டியூர் கிளை கழகம் சார்பில் காவை, இளவரசன். க. சித்துசாமி. க,ஈசுவரன் ஆகியோர் கணக்கெடுத்துள்ளார்கள்.**

**கொளத்தூர் ஒன்றியம்**

வசந்தா டீ கடை
வால்கிணத்தூர்.
கருங்கல்லூர் அஞ்சல்.
கொளத்தூர், ஒன்றியம்.

மாது டீ கடை
கருங்கல்லூர் அஞ்சல்.
கொளத்தூர், ஒன்றியம்.

பெருமாள் டீ கடை
கருங்கல்லூர் அஞ்சல்.
கொளத்தூர், ஒன்றியம்.

இராசேந்திரன் டீ கடை
கருங்கல்லூர் அஞ்சல்.
கொளத்தூர், ஒன்றியம்.

ரங்கசாமி டீ கடை
கருங்கல்லூர் அஞ்சல்.
கொளத்தூர், ஒன்றியம்.

சீவகன் டீ கடை
கருங்கல்லூர் அஞ்சல்.
கொளத்தூர், ஒன்றியம்.

மாதேஸ் டீ கடை
கருங்கல்லூர் அஞ்சல்.
கொளத்தூர், ஒன்றியம்.

பழனி டீ கடை
கருங்கல்லூர் அஞ்சல்.
கொளத்தூர், ஒன்றியம்.

**கோவில்களில் வெளியிலிருந்து வழிபடவேண்டும், பொது கிணற்றில் தண்ணீர் எடுக்க அனுமதியில்லை, மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முடிதிருத்தம் செய்வதில்லை, சாதிக் கொடுமைகள் அதிகம் உள்ள பகுதியாகும்.**

**காவேரிபுரம்**

கோவிந்தன் டீ கடை
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

சின்னரசன் டீ கடை
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

தேவராஜ் டீ கடை
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

பழனிச்சாமி டீ கடை
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

**காவேரிபுரம் சீனிவாசன். ரமேஷ் ஆகியோர் முடி திருத்தங்களில் அருந்ததியர் மக்களுக்கு முடிதிருத்தம் செய்வதில்லை.**

**கோவிந்தபாடி**

ஜெகநாதன் த-பெ பரமேஸ்
கத்திரிப்பட்டி.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

மாது டீ கடை
கத்திரிப்பட்டி.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

வீரப்பன் கோவிந்தம்மாள்
கத்திரிப்பட்டி.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

குமார் டீ கடை
முலக்கொட்டாய்.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

லட்சுமி டீ கடை
நாயன்பாடி.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

முருகேசன் டீ கடை
காரைக்காடு. கோவிந்தப்பாடி அஞ்சல்.கொளத்தூர் ஒன்றியம்.

கோவிந்தன் டீ கடை
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

கோவிந்தன் டீ கடை
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

கிருட்டிணமூர்த்தி டீ கடை
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

மயில்சாமி டீ கடை
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

மணி டீ கடை
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

சக்தி டீ கடை
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

குஞ்சிப்பையன் டீ கடை
பா.ம.க பிரமுகர்
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

பழனி டீ கடை
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

கணேசன் டீ கடை
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

மாதையன் உணவகம்
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர் ஒன்றியம்.

**இப்பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் கடைகளில் பெஞ்சில் உட்காரகூடாது.**

**பொதுகிணற்றில் தண்ணீர் எடுக்ககூடாது, கோவிலின் வெளியிலிருந்து சாமி கும்பிடவேண்டும்.**

மயிலசாமி டீ கடை
செட்டிபட்டி.
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர்.

காந்தி டீ கடை செட்டிபட்டி.
கோவிந்தப்பாடி அஞ்சல்.
கொளத்தூர்.

குழந்தைவேல் டீ கடை
சத்யா நகர்.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர்.

முருகன் டீ கடை
சத்யா நகர்.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர்.

கோகிலா உணவகம்
சத்யா நகர்.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர்.

கண்ணப்பன் டீ கடை
மருத்துவமணை அருகில்.
சத்யா நகர்.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர்.

பெருமாள் டீ கடை
தெலுஞ்கனூர்.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர்.

மாதுராஜ் டீ கடை
தெலுஞ்கனூர்.
காவேரிபுரம் அஞ்சல்.
கொளத்தூர்.

**ஓமலூர் ஒன்றியம்**

இராஜா டீ கடை
முள்ளிசெட்டிப்பட்டி.

சிங்கம் டீ கடை
முள்ளிசெட்டிப்பட்டி.

*(4 ஆம் பக்கம்)*

# பிற ஏடுகளிலிருந்து...

## ‘பிரார்த்தனை’ பயன் தருமா?

பிரார்த்தனைகளால் பயனிருக்கிறதா ? இல்லை என்கிறது ஜான் டெம்ப்ள்டெலின் ஃபௌண்டேஷன். 11 கோடி ரூபாய் செலவிட்டு செய்த ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ள இந்த முடிவு கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை கொஞ்சம் தடுமாறச் செய்யும். குருமார்களையும் சாமியார்களையும் ஏதாவது சமாதானம் சொல்லி தப்பிக்க வைக்கும்.

பிரார்த்தனைகளின் உதவியால் நோய் நீங்குமா, நிவாரணம் கிடைக்குமா ? சாகக் கிடப்பவர்கள் பிழைத்துக் கொள்வார்களா ? என்பதைக் கண்டு பிடிக்க மிகப் பெரிய அளவில் 3 வருடங்கள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து மேற்கூறிய முடிவை அடைந்துள்ளது.

1800 பைபாஸ் சர்ஜரி நோய்களுக்கு இரண்டு கிறித்துவ சர்ச் குழுக்கள் 2 வாரங்கள் தொடர்ந்து பிரார்த்தனை நடத்தியது. ஒவ்வொரு நோயாளிக்கும் தனித்தனியாக 2 வார பிரார்த்தனை மேற்கொள்ளப் பட்டது. நோயாளிகள் அறுவைச் சிசிக்சைக்கு உட்படும் முன்னரும், பின்னரும் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப் பட்டன.

முடிவு: பிரார்த்தனை செய்யப்பட்டவர்களிலும், செய்யப்படாதவர்களிலும் எந்தவித பெருத்த வேறு பாடும் காணப்படவில்லை. பிரார்த்தனை வழங்கப் பட்டவர்கள் எந்தவிதத்திலும் வழங்கப்படாதவர்களி லிருந்து பெரிய முன்னேற்றத்தை அடையவில்லை.

இதில் அதிர்ச்சி மிக்க செய்தி என்னவென்றால் தனக்கு பிரார்த்தனை செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்ட நோயாளிகள் முன்னேற்றத்திற்கு பதிலாக மோசமாகத்தான் போனார்கள்.

இத்தனை பேர்கூடி நமக்கு பிரார்த்தனை செய்யப் போகிறார்களே ! நமது நோயின் தீவிரம் அதிகமோ ! என்ற கவலையிலேயே அதிக டென்ஷன் ஆகி அதிக பாதிப்புக்கு உள்ளாகிவிட்டார்கள். – **‘கலைக்கதிர்’**

## எப்போதும் மாறாத வீரமணி

அரசின் திட்டங்களுக்குத் தோழமை கட்சிகள் முட்டுக்கட்டை போடுவது சரியல்ல என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி கூறியிருப்பது பற்றிச் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டனர்.

இதற்கு விடையளித்த பா.ம.க. நிறுவனர், “மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்ற வாக்கை மறந்துவிட லாமா ?” என்று திராவிடர் கழகத் தலைவர் வீரமணி அவரது அறிக்கையில் வினா எழுப்பியிருக்கிறார்.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில், அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் மீது அப்போது அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. அடக்குமுறையை ஏவிவிட்ட அன்றைய ஆட்சியாளர்களை எல்லோரும் கண்டித்தார்கள். ஆனால் வீரமணி மட்டும் அரசு ஊழியர் களின் போராட்டத்தை அடக்கி ஆண்ட முன்னாள் முதலமைச்சரின் பெருமையை வானளாவ புகழ்ந்தார். அவரைப் போன்று நிருவாகத் திறன் மிக்கவரும், முடிவில் உறுதியாக இருப்பவரும் உலகிலேயே வேறு எவருமில்லை என்ற அளவுக்குப் பாராட்டினார். இன்று மாறியிருக்கிறார். மாற்றம் ஒன்றுதான்மாறாதது என்பது அவரைப் பொறுத்தவரையில் சரியாகத்தான் இருக்கிறது என்று மருத்துவர் இராமதாசு கூறினார்.

முந்தைய ஆட்சியில் எதிர்க்கட்சி என்ற முறையில் அரசின் தவறான திட்டங்களையும், நடவடிக்கைகளையும் கடுமையாக விமர்சித்து வந்திருக்கிறோம்; போராடியும் வந்திருக்கிறோம். எங்களைப் போன்று அந்த ஆட்சியை எதிர்த்துப் போராடியவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். இப்போதும் நாங்கள் எதிர்க்கட்சி; ஆனால் எதிரிக் கட்சி அல்ல. நட்பு அடிப்படையிலான எதிர்க்கட்சி. அந்த வரம் பிற்கு உட்பட்டு தவறு என்று எங்களது கவனத்திற்குக் கொண்டு வரப்படும் சிக்கல்களை அரசின் கவனத் திற்குக் கொண்டு வருகிறோம். பாதிக்கப்படும் மக்களுக்காகக் குரல் கொடுக்கிறோம். அதே நேரத்தில் அரசின் நல்ல திட்டங்களையும் செயல்பாடுகளையும் பாராட்டுகிறோம் என்றும் பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு விளக்கமளித்தார்.

**– ‘தமிழ் ஓசை’ நாளேடு ஆக.3.**

## விடுமுறை நாளில் வீடு மாறும் ‘சனி’!

ஞாயிற்றுக் கிழமையன்று சனி பகவான் கடக ராசியிலிருந்து சிம்ம ராசியில் வீடு மாறுகிறாராம். மாறிவிட்டு போகட்டும். யாருக்கும் தொல்லை இல்லாமல் லீவு நாளாக பார்த்து வீடு மாறுகிறார் போலிருக்கிறது. ஆனால், சனிப் பெயர்ச்சி என்ற பெயரில் சோதிடர் களும், சில பத்திரிகைகளும் அடிக்கும் லூட்டி தாங்க முடியவில்லை. இதில் புதிதாக தனியார் செல்போன் கம்பெனிகளும் சேர்ந்துள்ளன. சனிப் பெயர்ச்சி பலனை தெரிந்து கொள்ள வேண்டுமானால் சனி என்று டைப் செய்து எஸ்.எம்.எஸ். செய்தால் பலனை அனுப்பு வார்களாம். இவ்வாறு அனுப்பினால் உடனடி பலன், பில் தொகையில் 10 ரூபாய் ஏறும் என்பதுதான்.

முன்னாலும், பின்னாலும் ஏகப்பட்ட பட்டங்களை போட்டுள்ள ஒரு சோதிடர் சனிப் பெயர்ச்சியால் பொருளாதார சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதில் கூட்டணி கட்சித் தலைவர்களிடம் கருத்து வேறுபாடு ஏற்படலாம் என்று கணித்து கூறியுள்ளார். பொருளாதார சீர்திருத்தம் தொடர்பான கருத்து வேறுபாடுகளுக்கும், சனி பகவானுக்கும் என்ன சம்பந்தம் ? அவர் என்ன உலக வங்கி தலைவரா ? அல்லது ஐஎம்எப் அடியாளா ? மத்திய அரசு பின்பற்றுகிற பொருளாதார கொள்கை களை எதிர்த்து ஆகஸ்டு 16 முதல் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி பிரச்சார இயக்கத்தையும், ஆகஸ்டு 28 ஆம் தேதி மாபெரும் மறியல் போராட்டத்தையும் நடத்தவுள்ளது. நாட்டை பெரும் கேடாக சூழ்ந்துள்ள உலகமயக் கொள்கைக்கு போராட்டம் ஒன்றே பரிகாரமாக அமைய முடியும். எள் விளக்கு ஏற்றுவதால் எதுவும் செய்ய முடியா.

இது ஒருபுறமிக்க, ஞாயிறன்று சனிப்பெயர்ச்சி வருவதால் ஒரு பிள்ளை இருக்கும் வீடுகளுக்கு ஆபத்து என்று கூறி, சிலர் வதந்தியை கிளப்பி விட்டுள்ளனர். வீட்டு வாசலில் மஞ்சள் தண்ணீர் தெளித்து கோலம் போட்டு வேப்பிலை வைத்து ஒரு பித்தளை தட்டு, ஒரு குத்து விளக்கு வைத்து பூஜை செய்ய வேண்டுமாம். விளக்கின் அடியில் அரிசி, நவதானியம் கொட்டி வைத்து பூஜை செய்ய வேண்டுமாம் என்று கிளப்பி விட்டுள்ள னர். கொஞ்சம் அசந்தால் வாசலில் உள்ள குத்து விளக்கும், பித்தளை தட்டும் காணாமல் போய் விடும்.

சேலம் பகுதியில் ரத்த காட்டேரி நடமாடுவதாகவும், எமதர்மராஜா வீட்டுக் கதவை தட்டுவதாகவும் வதந்தி நிலவி இப்போதுதான் சற்று அமைதி ஏற்பட்டுள்ளது. இப்போது புதிதாக சனியை கிளப்பி விட்டுள்ளார்கள்.

விஞ்ஞான வெளிச்சம் பரவ பரவ மூடநம்பிக்கை இருள் தொலைய வேண்டும். ஆனால், விஞ்ஞான ஊடகங்களை பயன்படுத்தி மூட நம்பிக்கைகளை பரப்பு பவர்களை அந்த ரத்தக் காட்டேரிதான் கேட்க வேண்டும்.

**‘தீக்கதிர்’ 4.8.07**

## பெரியார் இயக்கத்தின் பரிணாமம்

தமிழர்களுக்கு அறிவையும் மானத்தையும் போதித்து, அவர்களின் முதுகெலும்பை நிமிரச் செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தில் இயக்கம் கண்டு, அதற்குப் பல கோடி மூலதனமும் சேர்த்து வைத்துவிட்டுப் போனார், நமது பெரியார். அந்தச் சொத்துக்களை அனுபவிப்பவர்களோ, பெரியார் சொன்ன “அறிவையும் மானத்தையும்” இரண்டாம் பட்சமாக்கிவிட்டு, ஆண் - பெண் உறவுக்கு சத்துணவும், காலையில் சுகபேதியாக மருந்தும் சொல்லி, அதையே ‘வாழ்வியல் சிந்தனை’ என்று வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள் கொஞ்சங்கூட மான - அவமானம் இல்லாமல் !

இந்த நிலையில் பெரியார் இயக்கம் பரிணாமம் பெற்று, ‘பெரியார் திராவிடர் கழகம்’ என்ற பெயரால் இது போன்ற “பெரியார் வேலைகளை”ச் செய்து கொண் டிருப்பது மகிழ்ந்து பாராட்டிப் புகழ்ந்து மனநிறைவு கொள்ளத்தக்கதாக உள்ளது.

**கழக வெளியீடான ‘சோதிடப் புரட்டு’ நூல் பற்றி எழுதிய விமர்சனத்தில் ‘நாத்திகம்’ 27.7.07**

## சாமி!

*‘சாமி கண் தொறந்துடுச்சி...’*
*‘அம்மன் கண் சிமிட்டுச்சி’*
*என்ற பரபரப்பான*
*செய்தியால்*
*கோயிலில்*
*பெருங்கூட்டம்*
*கூடிய மக்கள்*
*பார்க்க வில்லை*
*சாமி கண் திறந்ததையும்*
*அம்மன் கண் சிமிட்டியதையும்*
*கண் திறக்கும்*
*கண் சிமிட்டும்*
*சாமி*
*ஏனோ*
*கைகளைக் காட்டி*
*ஆசீர்வதிப்பதில்லை*
*கூடும் மக்கள்*
*ஏமாறாமல்*
*வீடு திரும்ப.*

**‘குமுதம்’ இதழ்**

## பார்ப்பன சங்க விழாவில் தி.மு.க. - அ.தி.மு.க. கரம் கோர்த்தது

சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள ஏகாம்பர திருமண மண்டபத்தில் பார்ப்பனர் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா கடந்த ஆகஸ்டு 5 ஆம் தேதி நடைபெற்றது. இதில் சோழிங்கநல்லூரில் தி.மு.க. பேரூராட்சித் தலைவராக இருக்கும் அரவிந்த் ரமேஷ் என்பவர் கலந்து கொண்டு, ‘பிராமணர் சங்கம்’ இப்பகுதியில் ஆல்போல் தழைத்து வளர வேண்டும் என்று வாழ்த்தி - பார்ப்பன சங்கத்துக்கு புகழாரம் சூட்டினார். தி.மு.க.வைச் சார்ந்த பேரூராட்சி துணைத்தலைவர் ஆர். உமாபதி என்பவரும் கலந்து கொண்டார். பேரூராட்சியில் தி.மு.க.வுக்கு கடும் எதிர்ப்பாளராக செயல்பட்டு வரும், பேரூராட்சி வார்டு உறுப்பினரான அ.தி.மு.க.வைச் சார்ந்த கஜேந்திரன், மற்றொரு வார்டு உறுப்பினரான அ.தி.மு.க.வைச் சார்ந்த மணி என்பவரும் கட்சிப் பகைமையை எல்லாம் ஒதுக்கி வைத்து - பார்ப்பன சங்கத்தின் புகழ் பாடுவதில் ஒற்றுமையைக் காட்டினார்கள்.

நன்றி கூறி பேசிய பார்ப்பன சங்கத்தின் தலைவர் ஒதுங்கி நிற்கும் தமது சமூகத்தினர் உடனடியாக, சங்கத்தில் உறுப்பினராக வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு பார்ப்பனர்களுக்கு வேலைவாய்ப்பு களை சங்கத்தின் மூலம் தேடித் தருவதாகவும், அதைப் பயன்படுத்திக்கொள்ளுமாறும் பார்ப்பனர் களுக்கு மட்டும் வேண்டுகோள் விடுத்தார்.

## யாழ்ப்பாணத்துக்கு உணவுப்பொருள் கொண்டு போகும் போராட்டம்

யாழ்ப்பாணத்தில் பட்டினி கிடக்கும் தமிழர் களுக்கான உணவுப்பொருட்களை செப்டம்பர் 12 ஆம் நாள் யாழ்ப்பாணத்துக்கு படகுகளில் கொண்டு செல்லப்படும் என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் குழு அறிவித்துள்ளது.

இலங்கையில் பட்டினி கிடக்கும் ஈழத் தமிழர் களுக்கு மருந்து மற்றும் உணவுப் பொருட்கள் அனுப்ப அனுமதி கொடுக்காத இந்திய மத்திய அரசைக் கண்டித்து தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் கண்டன மாநாடு 6.8.2007 அன்று மாலை 4 மணிக்கு விழுப்புரம் திருச்சி நெடுஞ்சாலையில் உள்ள சோலை மகால் திருமண மண்டபத்தில் தோழர் இளங்கோ தலைமையில் நடைபெற்றது. பழ. நெடுமாறன், வே. ஆனைமுத்து, மணியரசன், தியாகு, பொழிலன் உள்ளிட்ட பலரும் உரையாற்றினர். கழக சார்பில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றுப் பேசினார்.

**மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:**

பட்டினி கிடக்கும் யாழ்ப்பாண மக்களுக்கு அனுப்புவதற்காக தமிழக மக்களால் மனமுவந்தும், அளவில்லாத ஆர்வத்துடனும் அளிக்கப்பட்ட ரூ.1 கோடிக்கும் அதிகம் பெருமான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்பி வைப்பதற்காக தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்பு குழு மேற்கொண்ட முயற்சிகளுக்கு இந்திய செஞ்சிலுவை சங்கம் இசைவு தெரிவித்தது. ஆனால் அதற்குரிய அனுமதியை இந்திய அரசு கடந்த 6 மாத காலத்துக்கு மேலாக வழங்காமல் இருக்கிறது. இந்திய அரசு உரிய அனுமதியை வழங்க முன் வராததை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

பட்டினி கிடக்கும் யாழ்ப்பாண மக்களுக்கு தானாகவே முன்வந்து உதவ வேண்டிய தமிழக அரசும் இப்பிரச்சினையில் வாளா இருப்பதோடு தமிழக மக்கள் அளித்த உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்புவதற்கு உதவ முன் வராததற்கு மாநாடு கண்டனம் தெரிவிக்கிறது.

தமிழக மக்களிடம் இப்பிரச்சினை குறித்து விரிவாக எடுத்துரைக்க 2007 செப்.7 ஆம் நாள் தேதி முதல் செப்.11 ஆம் நாள் வரை பிரச்சார பயணம் மேற்கொள்வது.

இரு அணியாக திருச்சியில் இருந்து நாகப் பட்டினம் நோக்கியும், மதுரையில் இருந்து ராமேசுவரம் நோக்கியும் பிரச்சாரப் பயணம் நடத்தி செப்.12 ஆம் நாள் படகுகளில் உணவு பொருட்களை ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்வது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சாதி ஒழிப்புப் போராளிகள் இயக்கத்தின் வேர்கள்

## தஞ்சை மாநாட்டில் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் எழுச்சி உரை

*மே 19 இல் தஞ்சையில் கழக மாநாட்டில் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆற்றிய உரை.*



50 ஆண்டுகளுக்கு முன்னால் இதே தஞ்சையிலே நவம்பர் 3 ஆம் தேதி அய்யா அவர்கள் ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள். அந்த மாநாட்டைப் பற்றி இங்கே வெளியிடப்பட்டுள்ள சாதியை ஒழிக்க சட்ட எரிப்புப் போராட்டம் எனும் ஆய்வு நூலிலே பார்க்கின்றோம்.

அந்த மாநாட்டிலே கூடியவர்கள் 3 லட்சம் பேர். இன்றைக்கு பார்க்கின்றோம். கூடியிருக்கின்ற கூட்டத்திலே பாதிப்பேருக்கு மேல் செல்போன் வைத்திருக்கின்றோம். கார் வசதி இருக்கின்றது. நாமெல்லாம் பேருந்திலே வந்தோம். தொடர் வண்டியிலே வந்தோம். செய்திக்கு பத்திரிகைகள் இருக்கின்றது. இவ்வளவு வாய்ப்புகளோடு இந்தக் காலகட்டத்தில் நாம் மாநாடு நடத்துகின்றோம். 50 ஆண்டுகளுக்கு முன்னால் நினைத்துப் பாருங்கள்.

தஞ்சை மாவட்டத்திலே அந்தப் போராட்ட வீரர் பட்டியலைப் பாருங்கள். 161 இடத்திலே அய்யா அவர்களுடைய ஆணையை ஏற்று சட்டத்தை தோழர்கள் கொளுத்தியிருக்கின்றார்கள். இன்றைய முதியவர்கள் அன்றைக்கு இளைஞர்கள். 161 இடம் என்பது என்ன தாலுக்காவா, நகரமா, இல்லை தோழர்களே. ஒவ்வொரு பகுதியும் பேருந்து செல்ல முடியாத கிராமம். இன்றைக்குக்கூட தொலை தொடர்பு இல்லாத கிராமங்கள். அந்த கிராமங்களுக்குள் அய்யா அவர்களுடைய உரை, அவருடைய வேண்டுகோள் ஊடுருவி சென்றிருக்கிறது. அந்த ஊர்களிலிருந்து தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 3 லட்சம் பேர் கூடினார்கள். இது காவல் துறையின் கணக்கு.

அன்றைக்கு குத்தூசி குருசாமி, வேதாச்சலமும், திருவாரூர் தங்கராசு, பாட்சா, பெங்களூர் விசாலாட்சி சிவலிங்கம், எம்.ஆர். ராதா இவர்கள் எல்லாம் இருந்து நடத்திய அந்த மாநாட்டைப் பற்றி பாராளு மன்றத்திலே பேசப்பட்டிருக்கின்றது. 50 ஆண்டுகளுக்கு முன்னால் 57 ஆம் ஆண்டு நவம்பர் 3 ஆம் தேதி நடத்திய மாநாட்டிலே 50 ஆயிரம் பேர் கலந்து கொண்டார்கள் என்று இந்திய பாராளு மன்றத்திலே பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்றைய பிரதமர் நேரு இந்த செய்தியைப் பதிவு செய்து அய்யா அவர்கள் நடத்திய மாநாட்டை தஞ்சையில் மட்டும் அல்லாது இந்தியா முழுதும் பரவச் செய்தார்.

பிரதமர் நேரு, தமிழ்நாட்டில் திருச்சியில் வந்து பேசுகிறார், தமிழ்நாட்டு மக்களைப் பார்த்து கெஞ்சுகிறார். அந்தப் பதிவுகள் அந்த நூலிலே இருக்கின்றது.

1952 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டுக்காக முதன் முதலில் இந்திய அரசியல் சட்டம் தந்தை பெரியாரால் திருத்தப்பட்டு இட ஒதுக்கீடு கிடைத்தது. இரண்டாவது எந்த கருப்புச் சட்டை இந்த மக்களுக்கான கல்வி வேலை வாய்ப்புக்காக இடஒதுக்கீடு கிடைப்பதற்காக பாடு பட்டதோ அந்த கருப்புச் சட்டைகளை மூன்று ஆண்டுகளுக்கு சிறையில் அடைக்கும் சட்டம் புதிதாக உருவாக்கப்பட்டது. அதுவரைக்கும் இந்திய அரசியல் சட்டத்தையோ, காந்தி படத்தையோ, தேசியக் கொடியையோ கொளுத்தினால் தண்டனை கிடையாது சட்டத்திலே.

தந்தை பெரியார், இந்த மக்களுக்காக 52-லே ஒரு சட்டம் உருவாக காரண மானார்கள். 57-ல் இந்த மக்களுடைய சாதி இழிவை போக்குவதற்காக அரசியல் சட்டத்திலே "பிராமணன்" என்று இருக்கக் கூடாது. அவன் உயர் வானவன் என வாழக் கூடாது இந்த நாட்டிலே என்று, 26 ஆம் தேதிக்குள் ஒழித்து விட்டால், இந்த அரசியல் சட்ட எரிப்பை கைவிட்டு விடுகின்றேன் என்று 20 நாட்கள் கெடு தருகின்றார் அய்யா. ஆனால் நடக்கவில்லை. இது வரைக்கும் நடக்கவில்லை.

நவம்பர் 26 இல் பெரியார் சட்டத்தை எரித்த அதே நாளில் தான் ஈழத்திலே தம்பி பிரபாகரனும் பிறந்த நாள். தமிழ்நாட்டிலே 10 ஆயிரம் பேர் சாதி இழிவை போக்க சிறைப்பட்ட நாள் நவம்பர் 26.

அண்ணா அவர்கள் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த பின்னால், திராவிடர் கழகமே இல்லை என்று சொல்லப்பட்ட, பேசப்பட்ட காலக் கட்டத்திலே, போராட்டத்தில் மட்டும் 10 ஆயிரம் பேர் கலந்து கொண்டு 3000 பேர் சிறைப்பட்டனர். அன்றைக்கு போலீஸ் அமைச்சராக இருந்த பக்தவச்சலம், சட்டமன்றத்திலே பேசுகின்றார் - "பைத்தியகாரத்தனமான ஒரு போராட்டம் நடத்தப் போகின்றார்களாம்" என இழிவாகப் பேசி நம் அரசியல் சட்டத்தை, காந்தி படத்தை, தேசியக் கொடியை கொளுத்தினால், தண்டனை என்று ஒரு சட்டத்தை கொண்டு வர வேண்டிய கட்டத்திலே இருக்கின்றோம் என பயமுறுத்தி அந்த சட்டம் வந்த பின்னால், 10 ஆயிரம் பேர் எரித்தார்கள். நாமெல்லாம் விழுதுகள், வேர்களுக்கு விழா எடுத்துக் கொண்டிருக்கின்றோம். நாம் ஊர்திக்கும், மாநாட்டுப் பந்தலுக்கும், மேடைக்கும், நுழை வாயிலுக்கும் பெயர் சூட்டி இருக்கின்றோமே, அந்த 13 பேர் களப்பணியில் பலியானார்கள்.

அண்ணன் செல்வேந்திரன் இன்றைய இளைஞர்களுக்கு சொல்லிச் சொல்லி கன்னி மங்கலம் கணேசனைப் பற்றி, பட்டுக்கோட்டை இராமசாமியைப் பற்றி சொல்லி, ஒரு ஆர்வத்தை, உணர்ச்சியை இந்த வரலாறு எல்லாம் நாம் படிக்க வேண்டாமா என தூண்டி விட்டார்கள். இன்றைக்கு அது ஒரு வரலாற்று ஆவணமாக மாறி இருக்கின்றது. இந்தப் போராட்டத்திலே திருவாரூரிலே முத்துக்கிருட்டிணன் என்று ஒரு தோழர் சிறைப்படுகின்றார். அவருடைய மனைவி காலரா நோயால் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவரை பார்ப்பதற்கு பரோலிலே செல்லுங்கள் என்று தோழர்கள், வழக்கறிஞர்கள் எல்லாம் போய் கேட்கின்றார்கள். மறுத்துவிட்டார் பரோலிலே வருவதற்கு. மூன்று மாதத்திலே அவருடைய மனைவி இறந்து விட்டார்கள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். மாமியார் இரண்டு குழந்தைகளையும் எடுத்து வளர்க்கின்றார்கள். அவருடைய மாமியாரும் சில காலங்களிலே இறந்து விடுகிறார்கள். இரண்டு குழந்தைகளும் அனாதையாக இருக்கின்றது. இவர் விடுதலை அடைந்த பின்னால்தான் அந்த இரண்டு குழந்தைகளையும் அவர் ஊர்வலமாக அழைத்துப் போகின்றார்.

(தொடரும்)

**சிற்பி இராஜன் நன்கொடை**

**கடந்த ஜூலை 23 ஆம் தேதி குடந்தை நாச்சியார் கோயிலில் கழகப் பொதுக் கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சிற்பி இராஜன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை நடத்தியதோடு, கழக வளர்ச்சிக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)**

புராணங்களை

### வந்த கடிதங்கள்

'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் 'உலகத் தலைவர் பெரியார்' என்ற கட்டுரை மிகச் சிறப்பாக வரப்பெற்றுள்ளது. இந்த 21 ஆம் நூற்றாண்டில் (ஆரியர்கள்) பார்ப்பனர்கள் தான் வரலாற்றைத் திரித்தார்கள் என்றால் திராவிடர்களும், சுக்ரீவப் படையும் வரலாற்றைத் திரிப்பதை எண்ணிக் கவலைப்படுவதா ?வெட்கப்படுவதா ?

சிந்துவெளி நாகரிகத்தில் காளையைக் குதிரை என்று ஆரிய நாகரிகம் உயர்ந்தது என்கிறான். வாஜ்பேயி ஆட்சியில் திருத்தப்பட்ட வரலாறு பாடப்புத்தகமாகியது. அது போல்தான் இதுவும். கட்டுரையாளர் ஏராளமான ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். தளபதி வீரமணி அவர்களின் வரலாற்றுத் திரிபுவையும் நன்கு சித்தரித்துள்ளார்.

**– தேவ. சீனி. சுந்தரம், தேவகோட்டை.**

பெரியாரை உலகத் தலைவராக கூறக் கூடாது என்று கூறி உள்ளீர்கள். அந்த கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. மற்றபடி 'உலகத் தலைவர் பெரியார் பாகம் 2' நூல் முழுவதும் படித்து அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து வீரமணியை கண்டித்து சரியான சாட்டையடி கொடுத்துள்ளீர்கள். வீரமணி எழுதிய நூலைப் படித்து அவரை கண்டித்து விமர்சனம் செய்தது இதுவரை யாரும் செய்யாதது. வீரமணி ஒரு நூல் எழுதினார் என்றால் அதில் தவறு இருக்காது. அது ஒரு வரலாற்று கருவூலம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் இப்போது அந்த கருத்தை மாற்றிக் கொண்டு விட்டேன். **– சொ. சிவசுப்ரமணியன், வடசேரி**

பெரியாரைப் பற்றி, பெரியார் நடத்திய போராட்டங்கள் பற்றி, ஒரு முழுமையான தொகுப்பு இல்லையே என்கிற கவலை, ஏக்கம் எல்லோரிடமும் எழுந்து கொண்டேயிருக்கிறது. எங்கே இந்த ஏக்கப் பெருமூச்சு புயலாய் மாறி "அதிகாரபூர்வ வாரிசுகளின் வளமான வாழ்க்கையை நோக்கி நகர்ந்து விடக்கூடாதே என்கிற முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாகவோ, அல்லது பெரியாரைப் பற்றிய முழுமையான வரலாற்றுப் பதிவை அதிகாரப் பூர்வமற்றவர்கள் வெளிக்கொண்டு வருவதற்குள் முந்திக் கொள்ள வேண்டும் என்கிற உந்துதல் காரணமாகவோ என்னவோ தமிழர் தலைவர் பெரியாரை உலகத் தலைவராக்கி உண்மைக்கு மாறான வரலாறுகளை உலவவிட்டிருக்கிறார்கள். **– காசு.நாகராசன், பொள்ளாச்சி**

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

**காடையாம்பட்டி ஒன்றியம்**

மாரப்பன் டீ கடை
சந்தை திடல்.
தின்னப்பட்டி.

கமலா டீ கடை
சந்தை திடல்.
தின்னப்பட்டி.

சீனி டீ கடை
சந்தை திடல்.
தின்னப்பட்டி.

மாதேசன் டீ கடை
சந்தை திடல்.
தின்னப்பட்டி.

நடராஜ் டீ கடை
ரயில் நிலையம்.
தின்னப்பட்டி.

சிங்காரவேல் டீ கடை
ரயில் நிலையம்.
தின்னப்பட்டி.

கலியன்(எ) ஓபுளி டீ கடை
ரயில் நிலையம்.
தின்னப்பட்டி.

முருகேசன் டீ கடை
பேருந்து நிருத்தம்.
சரக்கப்பிள்ளையூர்.
தின்னப்பட்டி.

முருகன் டீ கடை
பேருந்து நிருத்தம்.
சரக்கப்பிள்ளையூர்.
தின்னப்பட்டி.

சம்பு முதலியார் டீ கடை
பேருந்து நிருத்தம்.
சரக்கப்பிள்ளையூர்.
தின்னப்பட்டி.

லட்சுமி மாதேஸ் டீ கடை
நான்கு ரோடு.
சரக்கப்பிள்ளையூர்.
தின்னப்பட்டி.

பவளா கந்தசாமி டீ கடை
நான்கு ரோடு.
சரக்கப்பிள்ளையூர்.
தின்னப்பட்டி.

**தகவல் சேகரிப்பு ஆ.மாரியப்பன் பவளத்தானூர்.**

நாகராஜன் டீ கடை
பூமனூர்.
கருஞ்கரடு.
செட்டியூர் அஞ்சல்.
கொளத்தூர்.

சுப்பிரமணி டீ கடை
முலக்கடை.
செட்டியூர் அஞ்சல்.
கொளத்தூர்.

லூர்துசாமி டீ கடை
சவேரியார் பாளையம் அஞ்சல்.
கொளத்தூர்.

சித்தன் டீ கடை
குரும்பனூர் அஞ்சல்.
கொளத்தூர்.

ஜெயன் டீ கடை
குரும்பனூர் அஞ்சல்.
கொளத்தூர்.

இராஜி டீ கடை
குரும்பனூர் அஞ்சல்.
கொளத்தூர்.

இராசேந்திரன் டீ கடை
குரும்பனூர் அஞ்சல்.
கொளத்தூர்.

சம்பு டீ கடை
குரும்பனூர் அஞ்சல்.
கொளத்தூர்.

**பண்ணவாடி. பூதப்பாடி. சேத்துக்குழி ஆகிய ஊர்களில் உள்ள பெரியமாரியம்மன் கோவில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்கு வெளியே நின்று வழிபட வேண்டும், பொங்கல் வைக்க தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.**

**தாழ்த்தப்பட்டோர் பொங்கலை பூசைக்கு எடுத்துக்கொள்வதில்லை.**

**தகவல் சேகரிப்பு இளஞ் செழியன். துரை. சுந்தரம். விஸ்வநாதன். குமார் கொளத்தூர்.**


**மேச்சேரி ஒன்றியம்**

மல்லிகுந்தம் – தஞ்ராஜ், சுந்தரம்
பனங்காடு – செல்வம்
சந்தை தாளம்பட்டி – 4 கடைகள் உள்ளன. பெயர் தெரியவில்லை.
பள்ளிபட்டி – மாணிக்கம் மற்றும் 3 கடைகள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 9th August 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஆகஸ்டு 16, 2007 புரட்சி 5 முழக்கம் 33 விலை : ரூ.2.50


- செப்.5 முதல் 11 வரை – மேற்கு மாவட்டங்களில் பிரச்சாரப் பயணம்
- போராட்டத்தை விளக்கி சுவரெழுத்து; துண்டறிக்கைகள்

# அக்.2 இல் இரட்டைக் குவளை உடைப்புக் கிளர்ச்சி

*13.8.2007 திங்கள் அன்று காலை 11 மணியளவில் சென்னை பெரியார் திராவிடர் கழக புதிய அலுவலகத்தில் (1, காமராசர் சாலை, மயிலாப்பூர், சென்னை – 600 004) பெரியார் திராவிடர் கழக ஆட்சிக்குழு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கூடியது.*

கலந்து கொண்டவர்கள் : கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், ஆட்சிக் குழு உறுப்பினர்கள் பால்.பிரபாகரன், லோகு அய்யப்பன், நங்கவள்ளி சி. அன்பு, எ. கேசவன், ந. பிரகாஷ்.

**தீர்மானங்கள்:**

- தீண்டாமைக்கு எதிராக ஆகஸ்டு 15 அன்று நமது கழகத்தால் நடத்துவதாக இருந்த இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டத்தை 2007 அக்டோபர் 2 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்க முடிவெடுக்கப்பட்டது.
- போராட்டத்தை விளக்கி தமிழ்நாடு முழுவதும் சுவரெழுத்துகள் எழுதுவதென்றும், போராட்ட விளக்க துண்டறிக்கைகளை பெருமளவில் வெளியிடுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.
- தீண்டாமையின் வெளிப்பாடுகளாய் இரட்டைக் குவளை முறை, பொதுக் கோவில் நுழைவு மறுப்பு, முடிதிருத்தங்களில் புறக்கணிப்பு என்ற வடிவங்கள் போதிய எதிர்ப்புகளின்றி அதிகம் நிலவும் மேற்கு மாவட்டங்களில் இரண்டு கட்டமாக பிரச்சார பயணம் மேற்கொள்வது எனவும், முடிவு செய்து பயணத் திட்டமும் இறுதி செய்யப்பட்டது.
- பெரியாரியல் சிந்தனைகளைக் கொண்ட மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு மாணவர் கழகம் என்ற அமைப்பை 'பெரியார் திராவிடர் கழகம்' முன்முயற்சி எடுத்து உருவாக்குவது என்று முடிவெடுக்கப்பட்டது.

## கழக ஆட்சிக்குழு முடிவுகள்

*தீண்டாமை, சாதி எதிர்ப்பு பிரச்சாரக் குழுவின் பயணத் திட்டம் விவரம்:*

*5.9.2007* - சக்தி-புதுரோடு-புளியம்பட்டி-சேவூர்-அவினாசி-சோமனூர் (தங்கல்)

*6.9.2007* - திருப்பூர்-காங்கயம்-குண்டடம் - வெள்ளகோயில்-தாராபுரம் (தங்கல்)

*7.9.2007* - தாராபுரம்-சாலைக்கடை-பருத்தியூர்-குமாரசாமிக்கவுண்டன்வலசு-அப்பனூத்து-ஒட்டன்சத்திரம் (தங்கல்)

*8.9.2007* - ஒட்டன்சத்திரம்-சாமியார்புதூர்-சின்ன கரட்டுப்பட்டி-பெரிய கோட்டை-16 புதூர், தேவத்தூர் -கப்பல்பட்டி-பொருளூர்-வாகரை-தொப்பம்பட்டி கீரனூர்-அத்திமரத்துவலசு-நரிக்கல் பட்டி மானூர் (தங்கல்)

*9.9.2007* - பழனி-நெய்க்காரப்பட்டி-கரடிக் கூட்டம்-காவல்பட்டி-வேலாயுதம் பாயைம்புதூர்-பாப்பம்பட்டி-அய்யம் பாளையம்-நல்லெண்ணக் கவுண்டன் புதுர்-வயலூர் மில்கேட்-உடுமலை (தங்கல்)

*10.9.2007* - உடுமலை-முக்கோணம்-சாலையூர்-கொடிங்கியம்-நா.மூ.சுங்கம்-கோட்டூர்-ஆனைமலை-கா.க.புதூர்-பொள்ளாச்சி (தங்கல்)

*11.9.2007* - பொள்ளாச்சி - நெகமம் - கிணத்துக் கடவு-பேரூர்-தொண்டாமுத்தூர்-துடியலூர்-காரமடை - மேட்டுப்பாளையம்.

---

*சேலம் ரயில் கோட்டம் :*

## தமிழக மார்க்சிஸ்டுகள் எந்தப் பக்கம்?

சேலம் ரயில்வே கோட்டம் அமைப்பதைத் தடை செய்ய வேண்டும் என்று - கேரள அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை, உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

நாடாளுமன்றத்தில் கேரள உறுப்பினர்கள் அவையை நடத்த முடியாத அளவுக்கு கூச்சல் போட்டு ரகளை செய்துள்ளனர். கேரள மார்க்சிஸ்டுகள் முதலில் தங்களை மலையாளிகள்; பிறகு மார்க்சிஸ்டுகள் என்றுதான் கருதுகிறார்கள். தமிழ்நாட்டில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் 'தீக்கதிர்' நாளேடு இந்த நாடாளுமன்ற ரகளை செய்தியை வெளியிடாமல், கண்களை மூடிக் கொண்டு விட்டது. தமிழ்நாட்டின் பெரும்பகுதி ரயில் நிலைய நிர்வாகத்தை கேரளாவின் பிடியில் - பாலக்காடு பிரிவில்தான் இருக்க வேண்டும் என்பது நியாயமற்ற கோரிக்கை என்பதை தமிழக மார்க்சிஸ்டு கட்சி, தனது சக தோழர்களுக்கு இடித்துரைக்காமல் ஏன் மவுனம் சாதிக்க வேண்டும்?

*வெளிவந்துவிட்டது!*

### பெ. மணியரசனுக்கு எஸ்.வி.ஆரின் மறுப்பு

### மார்க்சியம் - பெரியாரியம் - தேசியம்

'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழில் வெளிவந்த தோழர் எஸ்.வி. ராஜதுரை (எஸ்.வி.ஆர்.) உரைக்கு மறுப்பு தெரிவித்து - த.தே.பொ.க. தலைவர் தோழர் மணியரசன் 'கண்ணோட்டம்' இதழில் எழுதிய மறுப்புக்கு தோழர் எஸ்.வி. ராஜதுரை அளித்துள்ள விரிவான பதில் நூலாக வெளிவந்துள்ளது. நூலின் பெயர் 'மார்க்சியம் - பெரியாரியம் - தேசியம்'. 136 பக்கங்களைக் கொண்டுள்ள இந்நூல் விடியல் பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. விலை ரூ.60. 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் வெளிவந்துள்ள எஸ்.வி. ராஜதுரை உரை; அதற்கு தோழர் மணியரசன் தந்த மறுப்பு ஆகியவற்றோடு எஸ்.வி.ஆர். தந்துள்ள விரிவான பதிலை இந்த நூல் பதிவு செய்துள்ளது.

வெளியீடு: **விடியல் பதிப்பகம்,**
11 பெரியார் நகர், மசக்காளி பாளையம் (வடக்கு),
கோவை - 641015, தொலைபேசி: 0422-2576772

*கி.வீரமணிக்கு நாத்திக நந்தனார் கடிதம்*

## பெரியார் கைத்தடி என்ன விலை?

'பெரியார்' திரைப்படத்தில் நடித்த நடிகர் சத்தியராஜிக்கு பெரியார் அணிந்திருந்த வரலாற்று நினைவுப் பொருளான மோதிரத்தை தி.க. தலைவர் வீரமணி வழங்கியது - பெரியாரியல்வாதிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தைச் சார்ந்தவரும், பெரியாரியல் கொள்கை யாளருமான நாத்திக நந்தனார் - கி.வீரமணிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

அன்புள்ள அய்யா வணக்கம்.

சென்னையில் நடந்த பெரியார் திரைப்பட 100வது நாள் வெற்றி விழாவில் பெரியார் அணிந்திருந்த பச்சைக்கல் மோதிரத்தை ஒரு நிறுவனம் விலைக்கு வாங்கி நடிகர் சத்தியராஜிக்கு அன்பளிப்பாக தந்த செய்தியை படித்தேன். பெரியார் பயன்படுத்திய பொருள்கள் அனைத்தும் மிகப் பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது என்றே இத்தனை நாள் நினைத்து இருந்தேன். பெரியார் பயன்படுத்திய பொருள்களை விலைக் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம் என்பதையும் அதை அன்பளிப்பாக அளிக்கலாம் என்பதையும் இதன் மூலம் தெரிந்துகொண்டேன்.

அயல்நாட்டில் சமீபத்தில் ஏலம்போக இருந்த காந்தியார் எழுதிய மடலின் மூலத்தை இந்திய அரசு வாங்கிப் பத்திரப்படுத்தி உள்ளது.

பெரியார் பயன்படுத்திய பொருள்கள் விலைக்கு கிடைக்கும் என்றால் பெரியாரின் கைத்தடி மற்றும் அவர் கடைசி காலத்தில் பயன்படுத்திய மூத்திர சேமிப்பு வாளி இவற்றை விலைக்கோ அல்லது அன்பளிப்பாகவோ பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு என்ன விலை? என்றைக்கு எங்கே வாங்கிக் கொள்ளலாம் என்ற தகவலை அன்புகூர்ந்து 18.08.2007 ம் தேதிக்குள் ஒரு வாரத்தில் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்களது சாதகமான பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேன் - என்று கடிதத்தில் எழுதியுள்ளார்.

குறிப்பு : நாத்திக நந்தனாரின் இந்தக் கடிதம், பெரும் பாலான பெரியாரியல்வாதிகள் உணர்வாகும்.

## 60ஆம் ஆண்டு ‘சுதந்திர’த்தின் அவலம் பாரீர்!

# திண்டுக்கல்–பழனி பகுதியில் ‘இரட்டைக் குவளை’ தேனீர் கடைகளின் பட்டியல்

*திண்டுக்கல், பழனி ஒன்றியத்தில் இரட்டைக் குவளை முறை பின் பற்றப்படும் தேனீர் கடைகள் பற்றி கழகத்தினர் தயாரித்த பட்டியல்*

பஞ்சலிங்கம் டீக்கடை
பெரிய கோட்டை.

செந்தப்பத்தேவர்
டீக்கடை
பெரிய கோட்டை.

துரைராசு டீக்கடை
பெரிய கோட்டை.

இராசம்மாள் டீக்கடை
பெரிய கோட்டை.

நாகராஜ் டீக்கடை
பெரிய கோட்டை.

சின்னத்தம்பி டீக்கடை
பெரிய கோட்டை.

சங்கரய்யர் (எ)
இராமசாமி டீக்கடை
பெரிய கோட்டை.

நாச்சம்மாள் டீக்கடை
பெரிய கோட்டை.

சோழராஜ் டீக்கடை
ரெட்டியபட்டி.

திருநீர் இராமசாமி
டீக்கடை
ரெட்டியபட்டி.

மணி ஆசாரி டீக்கடை
சின்னக்கரட்டுப்பட்டி.

பசுங்கிளி டீக்கடை
கந்தப்பக்கவுண்டன்
வலசு.

குட்டி (எ) பழனிச்சாமி
டீக்கடை
கந்தப்பக்கவுண்டன்
வலசு.

அண்ணாச்சி டீக்கடை
பால்கடை, வடகாடு.

மணி டீக்கடை
பால்கடை, வடகாடு.

ஆறுமுகம் டீக்கடை
பள்ளிக்கூடம், வடகாடு.

பெரியசாமி டீக்கடை
வண்டிப்பாதை,
வடகாடு.

சவடமுத்து டீக்கடை
புது அத்திக்கோம்பை.

சின்ராசு டீக்கடை
சக்கம்பட்டி,
அம்பிளிக்கை.

செல்லம்மாள் டீக்கடை
சக்கம்பட்டி,
அம்பிளிக்கை.

தங்கவேல் டீக்கடை
சக்கம்பட்டி,
அம்பிளிக்கை.

நடராஜ் டீக்கடை
சக்கம்பட்டி,
அம்பிளிக்கை.

குபேந்திரன் டீக்கடை
பெத்தேல்புரம், வடகாடு
ஒட்டன்சத்திரம்.

குணசேகரன் டீக்கடை
பெத்தேல்புரம், வடகாடு
ஒட்டன்சத்திரம்.

கோபால் டீக்கடை
முத்துநாயக்கன்பட்டி
ஒட்டன்சத்திரம்.

வைரமுத்து டீக்கடை
முத்துநாயக்கன்பட்டி
ஒட்டன்சத்திரம்.

இலட்சுமி டீக்கடை
முத்துநாயக்கன்பட்டி
ஒட்டன்சத்திரம்.

*கள்ளிமந்தையம்*

கருப்புச்சாமி டீக்கடை
அம்மாபட்டி.

முத்துச்சாமி டீக்கடை
அம்மாபட்டி.

இராமாத்தாள் டீக்கடை
அம்மாபட்டி.

வீராச்சாமி டீக்கடை
கரியாம்பட்டி.

சுரேஷ் டீக்கடை
கரியாம்பட்டி.

சின்னப்பன் டீக்கடை
கரியாம்பட்டி.

பெரியப்பன் டீக்கடை
கரியாம்பட்டி.

இராமசாமி டீக்கடை
கரியாம்பட்டி.

கவுண்டர் டீக்கடை
கழுத்தறுக்கான்பாளையம்.

பண்ணாடி டீக்கடை
அம்பிளிக்கை

பெரிய பொன்னையன்
டீக்கடை
ஓடைப்பட்டி,
அம்பிளிக்கை.

செங்கோட்டை
டீக்கடை
ஓடைப்பட்டி,
அம்பிளிக்கை.

குருசாமி டீக்கடை
ஓடைப்பட்டி,
அம்பிளிக்கை.

செல்வி (எ)
செல்லம்மாள்
டீக்கடை
ஓடைப்பட்டி,
அம்பிளிக்கை.

செல்லமுத்து டீக்கடை
ஓடைப்பட்டி,
அம்பிளிக்கை.

தேவர் டீக்கடை
பெரிய மண்டவாடி,
அம்பிளிக்கை.

கவுண்டர் டீக்கடை
பெரிய மண்டவாடி,
அம்பிளிக்கை.

ஈஸ்வரன் முனியாண்டி
விலாஸ்
சிந்தலப்பட்டி,
அம்பிளிக்கை.

பழனிச்சாமி
சிந்தலப்பட்டி,
அம்பிளிக்கை.

கவுண்டர் டீக்கடை
இராமபட்டிணம் புதூர்,
சத்திரப்பட்டி.

*ரெட்டியார் சத்திரம் ஒன்றியம்*

செல்லாத்தாள்
டீக்கடை
செம்மடைப்பட்டி.

தங்கவேல் டீக்கடை
செம்மடைப்பட்டி.

அய்யர் டீக்கடை
புதுச்சத்திரம்.

பிச்சை டீக்கடை
சட்டையப்பனூர்.

மோகன் டீக்கடை
சட்டையப்பனூர்.

பழனிச்சாமி டீக்கடை
சட்டையப்பனூர்.

*பழனி ஒன்றியம்:*

மிடாப்பாடி, மயிலாபுரம், நல்லெண்ணக் கவுண்டன்புதூர், பாப்பாகுளம், அய்யம் பாளையம், சின்னாக் கவுண் டன்புதூர், வேலாயுதம் பாளையம் புதூர், காவலப்பட்டி, போடுவார்பட்டி, மஞ்ச நாயக்கன் பட்டி.

*ஒட்டன் சத்திரம் ஒன்றியம்*

திரு வாண்டபுரம், மோதுப்பட்டி, அப்பியம்பட்டி, நால்ரோடு, கூத்தம் பூண்டி, கழுத்தறுக்கன் பாளையம், கரியாம் பட்டி, அம்மாபட்டி, குத்திலிப்பை, ஒடைப் பட்டி, சக்கம் பட்டி, சிந்தலப்பட்டி, சவ்வாது பட்டி, கோ.கீரனூர், புது அத்திக்கோம்பை, அரசப் பிள்ளைபட்டி, காவேரி யம்மாபட்டி, சின்னக் கரட்டுப்பட்டி, பெரிய கரட்டுப்பட்டி, பெரிய கோட்டை, தேவத்தூர், கொத்தயம், கந்தப்ப கவுண்டன் வலசு, 16 புதூர்.

*தொப்பம்பட்டி ஒன்றியம்*

கோவில் அம்மாபட்டி, இராஜம் பட்டி, அத்திமரத்து வலசு, பணம் பட்டி, அக்கரைப்பட்டி, சரவணப் பட்டி, ஆலாவலசு, பூலாம்பட்டி, வாகரை, மரிச்சிலம்பு, கொழுமங் கொண்டான், சங்கஞ்செட்டிவலசு, கல்துரை, கோட்டத்துரை, பெரிய மொட்டனூத்து, தாளையூத்து, நாச்சியப்பக் கவுண்டன் வலசு, புங்கமுத்தூர், அப்பனூத்து, குமார சாமிக் கவுண்டன் வலசு, அரண்மனை வலசு, தீத்தாக்கவுண்டன் வலசு, திருமலைக்கவுண்டன் வலசு, பருத்தியூர், கிலாங்குண்டல், கப்பல் பட்டி,புலியூர்நத்தம், முத்து நாயக்கன் பட்டி, நவாலூத்து, இ. கல்லுப்பட்டி, புளியமரத்துக்கோட்டை, பி.என். கல்லுப்பட்டி, குளிப்பட்டி, சின்னக் குளிப்பட்டி, மறுநூத்துப்பட்டி, சிறு நாயக்கன்பட்டி, வடகாடு, பால்கடை, வண்டிப்பாதை, கொசவபட்டி, தங்கச்சியம்மாபட்டி, மேட்டுப்பட்டி (அம்பிளிகை), வளையபட்டி (இடையகோட்டை), வெரியப்பூர், சீரங்கக் கவுண்டன்புதூர், கொல்லப் பட்டி, குட்டில்நாயக்கன்பட்டி, வட பருத்தியூர், பொருளூர், மேட்டுப்பட்டி (கள்ளிமந்தையம்), ஒத்தையூர் (கள்ளிமந்தையம்), வேலம்பட்டி, புளியம்பட்டி.

---

## ‘சாதியை ஒழிக்க அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம்’ நூல்

# நெய்வேலியில் அறிமுக விழா

கடலூர் மாவட்டம் நெய்வேலி நகரம் தமிழர் கலை இலக்கிய மன்றம் சார்பில் 28.7.2007 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நெய்வேலி நகரம் மெயின் பஜார் காமராசர் சிலை அருகில் சாதியை ஒழிக்க அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் நூல் அறிமுக விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

50 ஆண்டுகளுக்கு முன்னால், 1957 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்தை தந்தை பெரியாரின் ஆணைக் கிணங்க தமிழ் நாடெங்கும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நடத்தினர். வீரஞ்செறிந்த தியாகமிக்க இப் போராட்ட வரலாறு இன்றளவும் மறைக்கப்பட்டே வந்துள்ளது.

இந்த வரலாற்றை ஆவணமாக கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் வெளிக் கொண்டு வந்துள்ளது. பெரியாரின் இயக்க செயல்பாடுகள் - போராட்ட வியூக முறை - தொண்டர்களின் முழுமையான ஈடுபாடு - சாதியை ஒழிக்க கழகத் தோழர்கள் கொண்ட உறுதி - வருங்கால பெரியார் இயக்கத்திற்கான வழிகாட்டல் போன்று பல்வேறு பரிமாணங்களை விளக்குகின்றது - இந்நூல்.

இந்நூல் பற்றிய திறனாய்வுக் கூட்டம் நெய்வேலியில் தமிழர் கலை இலக்கிய மன்றத்தின் சார்பில் சிறப்புடன் நடந்தது. கடலூர் மாவட்ட அமைப்பாளர் புலவர் இரா. சிவஜோதி தலைமை தாங்கினார். பெரியார் திராவிடர் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் வே. கலியமூர்த்தி, மாவட்டத் தலைவர் நா. வெங்கடேசன், மா.பெ. பொ.க.தொழிலாளர் அணிச் செயலாளர் இரா. கல்யாண சுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மா.பெ.பொ.க. மாவட்டத் துணைச் செயலாளர் பி. அறிவழகன் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் புதுவை மாநில பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், தி.மு.கழக நகரச் செயலாளர் எம். நாகலிங்கம், தமிழர் பேரவை பால குருசாமி, வீணங்கேணி விடுதலை, மா.பெ.பொ.கட்சி நிர்வாகி வடக்கு மாங்குடி, பா. மோகன் ஆகியோர் பேசினர்

அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் சிறைச் சென்ற சாதி ஒழிப்புப் போராளி வடக்கு மாங்குடி பாலகிருஷ்ணன் அவர்களுக்கு கழகத் தலைவரால் மரியாதை செய்யப்பட்டு நினைவுப் பரிசும், “சாதியை ஒழிக்க அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம்” நூலும் வழங்கப்பட்டு சிறப்பு செய்யப்பட்டது.

நூலை அறிமுகம் செய்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றிய பின்னர் நூலாசிரியர் தி.மு.கழக வெளியீட்டுச் செயலாளர் திருச்சி செல்வேந்திரன் ஏற்புரை நிகழ்த்தினார். இறுதியாக, கடலூர் மாவட்ட கழக அமைப்பாளர் கு. அழகிரி நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெய்வேலித் தோழர் இன்முகம், கொளத்தூர் பாலு, புலவர் சிவஜோதி உள்ளிட்ட தோழர்கள் சிறப்புறச் செய்திருந்தனர். இறுதியில் 200க்கும் மேற்பட்ட தோழர்களுக்கு இரவு உணவாக புலால் விருந்தை புலியூர் தோழர் திருமால் வளவன் வழங்கினார்.

பெருந்திரளாக பொது மக்களும் அனைத்து கட்சியினரும் கலந்துகொண்டு பெரியாரின் போராட்ட இயக்க வரலாற்றை தெரிந்து கொள்ளும் வகையில் அரசியல் சட்ட எரிப்புப் போராட்ட நூலை ஆர்வமாக வாங்கிச் சென்றனர். நூறு புத்தகங்கள் பொதுக் கூட்டத்தில் விற்றதே அதற்குச் சான்றாகும்.

நூல் அறிமுக விழா பொதுக் கூட்டத்தில் புதுவைத் தோழர்கள் வீர. மோகன், இளங்கோ, மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் ந. பிரகாசு, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் கா. கருமலையப்பன், உடுமலைப்பேட்டை நகரத் தலைவர் யாழ் நடராசன் மற்றும் சுற்றுப்புற பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

**செய்தி: கருமலையப்பன்**

# லட்சியத்திற்காக மரணத்தை தழுவிய மாவீரர்கள்!

## தஞ்சை மாநாட்டில் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் எழுச்சி உரை

*மே 19 இல் தஞ்சையில் கழக மாநாட்டில் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆற்றிய உரையின் தொடர்ச்சி.*

மூன்று ஆண்டு தண்டனை என மிரட்டிய பின்னும், பயமுறுத்திய பின்னும் இதைப் பற்றி யாரும் கவலைப்படாமல் சிறைச் சென்றார்கள். தந்தை பெரியார் சிறையிலே போய் தோழர்களைப் பார்த்து சொல்லுகின்றார் : "உங்களுக்கு சிறையிலே எவ்வளவோ சிரமங்கள் இருக்கும். நாம் எண்ணிக்கையிலே அதிகமா வந்து விட்டோம். அரசால் எந்த வசதியும் செய்து தர முடியாது. கொடுமைகள் இருக்கும். வ.உ.சி. அவர்கள் செக்கிழுத்தார்கள். நானும் பல கொடுமையான தண்டனைகளைப் பெற்றிருக்கின்றேன். சிறையிலே வேலை செய்திருக்கின்றேன். ஆனால் நாமெல்லாம் அதைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்" என்று சொல்லிவிட்டு பெரியார் மேலும் சொல்லுகின்றார் : "நான் வெளியிலிருந்து இதையெல் லாம் சொல்வதற்கு வெட்கப்படுகின்றேன். ஏனென்றால் பல பேர் நினைக்கலாம், உனக்கென்ன நீ வெளியிலிருந்து பேசலாம். உள்ளே வந்து பார்த்தாதானே தெரியும் என நினைக்கலாம்". ஏனென்றால் அன்றைக்கு சிறை அவ்வளவு கொடுமையானது. இன்றைக்கு இருக்கக்கூடிய சிறைகள் அல்ல. இன்றைக்கு இருக்கக் கூடிய சிறைக்கே எத்தனைப் பேர் செல்ல தயாராக இருக்கின்றார்கள். கோழிக் கறி, முட்டை, நல்ல உணவு வழங்குகின்றார்கள்.



"தமிழர் தலைவர்" ஒருவர் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டிற்காக நீதிபதிகளின் கொடும்பாவி கொளுத்தி விட்டு அப்போதைய கலைஞர் ஆட்சியிலே சிறைக்குப் போய் எனக்கு 'ஏ' வகுப்பு தர வேண்டும் என நீதிபதியிடம் வாதாடினார். இப்படி வசதியான சிறைக்கே தயங்குகின்ற காலத்திலே அன்றைக்கு என்ன கொடுமை தெரியுமா ?

சிறையிலே பாத்ரூம் கிடையாது. இரு சட்டிக் கொடுப்பான். ஒரு சட்டியிலே மூத்திரம் போயிக்கணும், இன்னொரு சட்டியிலே தண்ணிக் கொடுப்பான். பலநேரங்களில் இரண்டு சட்டிக்கும் வித்தியாசம் தெரியாது. அதனாலேயே தண்ணியை நாங்க உள்ளே வைத்திருக்க மாட்டோம். இப்போ உள்ள சிறையிலே இருப்பதைப் போல கக்கூஸ் எல்லாம் கிடையாது. காந்தி கக்கூஸ் தான். அது என்னான்னா ஒரு குழியை வெட்டி அதன் மேல் இரண்டு பலகை போட்டிருப்பான். அந்த பலகை மேல் நின்னுக்கிட்டு தான் ஒவ்வொருத்தரா போகணும். ஈழத்திலேகூட நம்முடைய தம்பிகள் காடுகளிலே இப்படித்தான் கட்டியிருப்பார்கள்.

சிறையிலே ஆயிரக்கணக்கானப் பேர் இப்படித்தான் போக வேண்டும். அந்தக் குழியிலிருந்து ஆயிரக்கணக்கான ஈக்கள் வரும். அது மனுசனையே தூக்கிக் கொண்டு போயிடும்போல இருக்கும். சாப்பாடு கொடுப்பான் கஞ்சி. அதிலே புழு நெளியும். மருத்துவ வசதி கிடையாது. அப்படிப்பட்ட கொடுமைகளிலே 13 பேர் இறந்தார்கள்.

குத்தூசி குருசாமி எழுதியிருக்கின்றார், "உண்மையிலே கொடுமைகள் தாங்காமல் செத்தார்களா, ஒவ்வொரு தோழர்களிடமும் அதிகாரிகள் வந்து மன்னிப்புக் கடிதம் கொடு, மன்னிப்புக் கடிதம் கொடுத்தால் விடுதலை செய்கிறேன் என்று சித்திரவதை ஒரு பக்கம் செய்திருக்கிறார்கள். அதனாலேயே தோழர்கள் இறந்திருக்கலாம்" என்று விடுதலையிலே எழுதியிருக்கின்றார்.

இந்தத் தோழர்கள் எல்லாம் அன்றைக்கு, பெரியார் இயக்கத்தில், பிற்காலத்தில் கல்லூரிகள் வரும், பாலிடெக்னிக்குகள் வரும், அங்கே நம் பிள்ளைகளுக்கு இடம் கிடைக்கும் என கனவிலும் நினைத்து இருப்பார்களா ? அப்படி நினைத்துப் போராட்டத்திற்குப் போயிருப்பாங்களா ? இன்றைக்கு அத்தகைய நிறுவனங்களை கட்டியிருக்கிறார்கள். அதில் ஒரு போராளியின் பெயர் கூட இல்லை. ஆனால் 10 ஆயிரம் பேரையும் தண்டிப்பதற்கு சட்டம் கொண்டு வர வேண்டும். மூன்று ஆண்டுகள் அல்ல முப்பது ஆண்டுகள் தண்டிக்க வேண்டும் என்று அன்றைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் கல்யாண சுந்தரம் அன்றைக்கு சட்டமன்றத்திலே பேசினார். அந்த கல்யாண சுந்தரத்திற்குக்கூட வல்லத்திலே, திருச்சியிலே பெரியார் பெயரில் இருக்கக்கூடிய கல்லூரியிலே, கட்டடங்களிலே அவர் பெயர் இருக்கின்றது. ஆனால் இந்த போராளிகளுக்கு அங்கே எங்காவது ஒரு கல்வெட்டோ, பெயரோ உண்டா தோழர்களே ?

இன்றைக்கு ஊர்வலத்திலே பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், தலைவர் அழைத்தார், இயக்கம் அழைத்தது என்கின்ற போது 3 ஆயிரம் பேர் வந்தார்களே, எங்களைப் போன்றவர்கள் வேண்டுமானால் 50 வயதை தாண்டியிருக்கலாம். பெரியாரை பார்த்திருக்கலாம். ஆனால் இந்த ஊர்வலத்திலே 3 ஆயிரம் பேரில் 2500 பேர் பெரியாரையே பார்க்காதவர்கள் வந்தார்கள். பெரியாரை மட்டுமல்ல வீரமணியையே பார்க்காதவர்கள் இந்த தஞ்சை மண்ணிலே வந்திருக்கின்றார்கள்.

இவர்களைப் பார்த்து, திருப்பூரிலே அவர் (வீரமணி) பேசினார். நாங்களெல்லாம் பெரியார் படத்தைப் பார்த்து வந்தவர்களல்ல. பெரியார் கைப்பிடித்து வந்தவர்கள் என்று சொன்னவர், இன்று படத்தைப் பாருங்கள், படத்தைப் பாருங்கள். எங்காவது திருட்டு வி.சி.டி. போயிடுமா ? அதைக் கண்டு பிடியுங்கள் என்று சொல்லி அந்த தோழர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்.

எங்களுடைய தோழர்களுக்கு அதுவல்ல பணி. எங்களுடைய பணி பெரியார் விட்டுச் சென்ற பணி. சாதி ஒழிப்புக்காக 50 ஆண்டுகளுக்கு முன்னால் பெரியார் விட்டுச் சென்றாரே அந்தப் பணி இன்னும் முடிவடையவில்லை. அதற்காக மீண்டும் நாங்கள் களத்திற்கு வருவோம். நாங்கள் பெரியாரை பார்க்காதவர்கள்தான். ஆனால், பெரியாரின் வரலாற்றைப் படிக்கின்றவர்கள். பெரியார் வரலாற்றைத் தெரிந்து கொண்டவர்கள். பெரியாரின் கரம் பிடித்து சிறைச் சென்ற தோழர்களைப் பார்க்கின்றோம், வரலாற்றைப் படிக்கின்றோம். அந்த வரலாறு எங்களை இயங்க வைக்கின்றது. அந்த வரலாறு இயக்கமாக இயங்க வைக்கின்றது. அந்த வரலாற்றிலே நாங்கள் மீண்டும் இந்த இயக்கத்தை சாகவிட மாட்டோம். இந்த பெரியார் தத்துவத்தை சாகவிட மாட்டோம். தூக்கிப் பிடிப்போம் களத்துக்கு வருவோம். போராடுவோம் என்றார், கோவை. இராமகிருட்டிணன். ●

---

## 'அறிவுக்கொடி' இதழ் பாராட்டுகிறது

# செல்வேந்திரன் படைத்துள்ள வரலாற்று ஆவணம்

*திருச்சி செல்வேந்திரன் அவர்கள் எழுதி, கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள நூல் – சாதியை ஒழிக்க அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம்; 1957 இல் நடந்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை விளக்கும் முதல் வரலாற்று ஆவணம் இதுதான். இந்த நூல் பற்றி 'அறிவுக்கொடி' பகுத்தறிவு இனமான இதழ் வெளியிட்டுள்ள நூல் மதிப்புரையை நன்றியுடன் வெளியிடுகிறோம்.*

வெள்ளையனை எதிர்த்துக் காந்தியார் நடத்திய விடுதலைப்போரின் பயனாய் ஆட்சி அதிகாரம் ஒரு சாராருக்கு அல்லது கட்சிக்குக் கிடைக்கும் என்பதை அறிந்து - எதிர்பார்த்து நடந்த போர்!

பெரியாரின் சாதி ஒழிப்பு - சட்ட எரிப்புப் போரின் பயன் ஒரு சாராருக்கு - ஒரு கட்சிக்குக் கிடைக்காது என்பதை உணர்ந்து நடந்த பயன் கருதாப் போர்!

அது பற்றிய நாம் அறிந்த சுருக்கமான வரலாற்றுச் செய்திகளின் தொகுப்பே இந்நூல் எனத் தன்னடக்கமாக நூலாசிரியர் திருச்சி செல்வேந்திரன் தெரிவித்தாலும், நூலாசிரியரின் முழுத் திறமை - உழைப்பு, ஈடுபாடு காரணமாகவே மிகச் சிறந்த ஆவண நூலாக மிளிர்கிறது.

வரலாற்று நூலில் எந்தத் திரிபும், கூட்டலும், கழித்தலும், விருப்பு வெறுப்புகளும் இன்றி எழுதப்பட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்நூலினை படைத்துள்ளார்.

சாதி ஒழிப்பிற்காகக் கடுமையான விலை கொடுத்து, கடுமையான விளைவுகளைச் சந்தித்து மாபெரும் போராட்டம் நடத்தியது தந்தை பெரியார் ஒருவரே. சாதி ஒழிப்புப் போராட்ட நிகழ்வினை விளக்கும் வரலாற்று நூல் இல்லாத குறையைத் திருச்சி செல்வேந்திரன் இந்நூலினைப் படைத்ததின் மூலம் போக்கிவிட்டார்.

இந்தியாவின் அரசியல் சட்டம் ஏற்புக் கையொப்பம் ஆன நாள் 1949 நவம்பர் 26. (சட்டம் அமுலுக்கு வந்தது 1950 ஜனவரி 26) எனவே, சாதியைக் காக்கும் அச்சட்டத்தைக் கொளுத்தும் போராட்டத்தை அதே நவம்பர் 26 இல் தொடங்கியிருக்கிறார். தந்தை பெரியார் போராட்டத்தை அறிவித்தபின்தான் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினால், கொளுத்து பவர்களுக்கு இன்ன தண்டனை என ஏதும் இல்லை என்பதை உணர்ந்தனர். தண்டனையை வரையறுக்கவும், அதன் மூலம் தந்தை பெரியாரின் போராட்டத்தை நசுக்கவும், சிதைக்கவும், திட்டமிட்டுச் சட்ட திருத்தம் கொண்டு வந்தனர்.

அதன் பிறகும் தந்தை பெரியார் மகத்தான போராட்டத்தை நடத்தியிருக்கிறார் என்பதை இந் நூல் விரிவாக விளக்குகிறது. 3000 பேர் சிறைபட்டுத் தண்டனை பெற்றார்கள். 3 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை தண்டனை பெற்றனர். சிறைக் கொடுமை காரணமாகச் சிறைக்குள் 5 தோழர்களும், விடுதலையான சில நாள்களில் 13 தோழர்களும், மொத்தம் 18 தோழர்கள் உயிர்த் தியாகம் செய்தனர் என்பதையும் விவரிக்கிறது இந்நூல்.

தந்தை பெரியாரின் ஆதரவை பெற்றுச் சட்டமன்றத்திற்குள் சென்றவர்கள் எல்லாம், தந்தை பெரியாரையும் - அவரது தொண்டர்களுக்கும் தண்டனை விதிக்கவும், போராட்டத்தை நசுக்கவும் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்தை - ஆதரித்த நிலையில் - தந்தை பெரியாரின் ஆதரவு இல்லாத நிலையில், ஏன் தந்தை பெரியாரின் கடுமையான எதிர்ப்புக்குப் பின், சட்டமன்றம் சென்ற அறிஞர் அண்ணா அவர்கள்தான் பெரியாருக்கு ஆதரவாக, பெரியார் அறிவித்த சாதி ஒழிப்புப் போராட்டத்திற்கு ஆதரவாகச் சட்டதிருத்தத்தை எதிர்த்துப் பேசினார் என்பதை படம் பிடித்துக் காட்டுகிறது இந்நூல்.

உலக வரலாற்றில் தனது நாட்டின் அரசியல் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த முதல் இயக்கம் பெரியார் இயக்கம் தான்.

இந்தப் புரட்சிகர வரலாற்றைப் பாடம் பயில இளைய தலைமுறையினர் உண்மைகளை உணர, சாதியற்ற சமுதாயத்தைப் படைத்திட இந்நூல் வழிகாட்டுகிறது. பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் பயன்படும் நூல். தமிழ் நாட்டுப் பல்கலைக்கழக நூலகங்களிலும், கல்லூரி நூலகங்களிலும், பொது நூலகங்களிலும், வீட்டு நூலகங்களிலும், இடம் பெற வேண்டிய அரிய நூல். நாம் சாதி ஒழிந்த தமிழர்களாய் மலரத் தமிழர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நூல்.

**நன்றி : 'அறிவுக்கொடி' 1–15 ஆகஸ்ட், 2007**

**நூல் வெளியீடு :**
'பெரியார் திராவிடர் கழகம்' கோவை மாவட்டம்.

**நூல் கிடைக்குமிடம்:**
**இரா. மனோகரன்**
68, காந்தி மண்டபம் வீதி, பொள்ளாச்சி - 642 001.
கைப்பேசி : 9442128792
பக்கம் : 376; விலை : ரூ.100/-

# சர்வதேச உறவுகளை சீரழித்த ‘ரா’

***‘ரா’ என்ற இந்திய உளவு நிறுவனம் ஈழ தமிழர் பிரச்சினையில் நடத்திய முறைகேடுகளை அண்மையில் பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள நூல் அம்பலப்படுத்தியிருந்தது. இந்த நிலையில் ‘ரா’ முறை கேடுகள் தொடர்ந்து வெளிச்சத்துக்கு வருகின்றன. ‘ரா’வில் பணியாற்றிய வி.கே. சிங் என்ற அதிகாரி அண்மையில் எழுதியுள்ள ஒரு நூல் - இந்த உளவு நிறுவனம் பற்றிய பல்வேறு முறைகேடுகளை அம்பலப்படுத்தியுள்ளது.***

‘ரா’ அமைப்பின் தொழில்நுட்ப பிரிவின் தலைவராக செயல்பட்டவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் வி.கே. சிங். இவர், ‘ரா’வின் செயல்பாடுகள் குறித்து ‘இண்டியாஸ் எக்ஸ்டர்னல் இன்டலிஜென்ஸ்; சீக்ரட்ஸ் ஆப் ரா’ என்ற பெயரில் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். அந்த நூலில் பல அதிர்ச்சித் தகவல்கள் அடங்கியுள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காக உள்நாட்டு தொலைபேசிப் பேச்சுக்களை ஒட்டு கேட்பது காலம் காலமாக நடந்து வருகிறது. ஆனால், தேவையில்லாமல் நாடுகளுக்கு இடையே தகவல் தொடர்பு வசதியை ஊடுருவி, தொலைபேசி பேச்சுக்களை ஒட்டு கேட்டது, நாடுகளுக்கு இடையே பரிமாற்றம் செய்யப்பட்ட தகவல்களை திருட்டுத்தனமாக பெற்றது போன்ற காரியங்களிலும், ‘ரா’ அமைப்பு ஈடுபட்டது. தென்கிழக்கு ஆசியா, வளைகுடா நாடுகள், மேற்கு ஐரோப்பா ஆகிய பகுதிகளுக்கு இடையே தகவல் தொடர்பை ஏற்படுத்த, கடலுக்கு அடியே பைபர் கேபிள் அமைக்கப்பட்டு தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டது. இந்த வசதிக்கு ‘சீ-மி-வி’ என்று பெயர். இதன் மூலம், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு இடையே தொலைபேசி இணைப்பு மட்டுமல்ல, பிராட்பேண்ட் சேவை, இணைய தளம், வீடியோ சேவை, ஏ.டி.எம். சேவை என பல வசதிகளும் பரிமாற்றம் செய்யப்பட்டன. இந்த தகவல் தொடர்பு வசதியை ‘ரா’ அமைப்பினர் தேவையில்லாமல் ஊடுருவி தகவல்களை பெற்றனர். அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.வை விட தாங்கள் சிறப்பாக செயல்படுகிறோம் என்பதை நிலை நிறுத்தவே, இது போன்ற காரியங்களில் ‘ரா’ அமைப்பினர் ஈடுபட்டனர். ஜெர்மனி, ஜப்பான் மற்றும் பிற நாடுகளுக்கு இடையே இருந்த தகவல் தொடர்பை ஊடுருவி தகவல்கள் பெறப்பட்டது. இது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது.

‘ரா’வில் பணியாற்றும் அதிகாரிகள் சிலருக்கு, தாங்கள் சட்டத்தைவிட பெரியவர்கள் என்ற நினைப்பு உண்டு. நாடாளுமன்றம் உள்ளிட்ட எந்த அமைப்புக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தாலும், தங்களுக்கு ஏற்றவாறு சட்டத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொள்கின்றனர். இது போன்ற நிலை சர்வாதிகார ஆட்சியில் தான் காணப்படும்.

எனவே, ‘ரா’ உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகள் நாடாளுமன்றத்துக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டும். பொறுப்புணர்வு இல்லாதது, தகுதியில்லாத தலைமை, நம்பிக்கையின்மை ஆகியவை ‘ரா’ அமைப்பை சீர்குலைத்து வருகின்றன. இந்திய உளவுத் துறைக்குள் ஊடுருவ, அமெரிக்கா பல ஆண்டுகளாக முயற்சித்து வந்தது. பணத்தின் மீது ஆசை காட்டுவது தான் அமெரிக்க உளவுத் துறை கையாண்ட தந்திரம். அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த பெண் அதிகாரி ரோஷனே மின்சவ், தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகத்துக்குள் சமீபத்தில் ஊடுருவியது இதற்கு சிறந்த உதாரணமாக கூறலாம்.

கடந்த 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய விமானம், ஆப்கானிஸ்தானில் உள்ள காந்தகாருக்கு தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டது. நேபாள தலைநகர் காத்மாண்டுவில் இருந்து அந்த விமானம், இந்தியாவில் உள்ள அமிர்தசரசுக்கு வந்து இறங்கியது. அப்போதே அந்த விமானத்தினுள் அதிரடிப் படையினர் உட்புக வாய்ப்பு இருந்தது. அதுபோல செயல்பட்டு இருந்தால், இந்திய சிறைகளில் இருந்த முக்கிய பயங்கரவாதிகளை விடுவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆனால், அந்த விமானத்தில் ‘ரா’ அமைப்பைச் சேர்ந்த சீனியர் அதிகாரி இருந்ததால் தான், கமாண்டோக்கள் அதிரடி தாக்குதலில் இறங்கவில்லை. அப்போது பிரதமராக இருந்த வாஜ்பாய் அலுவலகத்தில் சீனியர் அதிகாரியாக இருந்தவர் என்.கே.சிங். இவரது மைத்துனர் சசி பூஷண் சிங். இவர் ‘ரா’ அமைப்பின் உயர் அதிகாரி. காத்மண்டு வில் பணிபுரிந்து வந்தார். அவர் அந்த விமானத்தில் இருந்த காரணத்தால்தான் கமாண்டோ தாக்குதல் நடத்தப்படவில்லை. அந்த விமானமும் இந்திய எல்லையை விட்டுச் செல்ல அனுமதிக்கப்பட்டது. கார்கில் போரில் பாகிஸ்தான் அரசுக்கும் தொடர்பு உள்ளதை நிரூபிக்க, பாகிஸ்தானின் அப்போதைய ராணுவ ஜெனரல் முஷராப் மற்றும் லெப்டினென்ட் ஜெனரல் முகமது அசீஸ் ஆகியோரின் டெலிபோன் பேச்சு விவரத்தை, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வெளியிட்டது. இதன் மூலம், அமெரிக்காவின் நன்மதிப்பை இந்தியா பெற நேரிட்டது. ஆனால், சம்பவத்துக்குப் பிறகு, சீன தலைநகர் பீஜிங் மற்றும் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் இடையேயான செயற்கைக்கோள் இணைப்பை பாகிஸ்தான் அரசு துண்டித்துவிட்டது. இந்த இணைப்பை ஊடுருவி தான் முஷாரப்பின் டெலிபோன் பேச்சை பதிவு செய்ய முடிந்தது. இந்த இணைப்பை துண்டித்துவிட்டதால், அதன் பிறகு எந்த தகவலும் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செய்த மிகப் பெரிய தவறு இது. இவ்வாறு அந்த நூலில் கூறப்பட்டுள்ளது. ●

## மூத்த பத்திரிகையாளர் ஆர்.எம்.டி. முடிவெய்தினார்

*மூத்த பத்திரிகையாளரும் தமிழர் இன உணர்வு மிக்கவருமான ஆர்.எம்.டி. சம்பந்தம் (73) ஆகஸ்டு 14 விடியற்காலை 5 மணியளவில் சென்னை பெசன்ட் நகரிலுள்ள அவரது இல்லத்தில் முடிவெய்தினார். கடந்த 3 ஆண்டுகளாக அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் - அவர் மாணவராக இருந்தபோது பெரியார் இயக்கத்தில் நேரடி தொடர்பு கொண்டிருந்தவர். இறுதிவரை, பெரியார் கொள்கை உணர்வுகள் - அவரது உள்ளத்தில் பதிந்திருந்தது. அதன் காரணமாகவே, தனது கண்களை தியாகராயர் நகரிலுள்ள ஒரு மருத்துவ மனைக்கும், உடலை இராமச்சந்திரா மருத்துவமனைக்கும் நன்கொடையாக வழங்கிட வேண்டும் என்று தனது விருப்பத்தை முன் கூட்டியே எழுதி வைத்தார். ‘தமிழ்நாடு’, ‘தினசரி’ நாளிதழ்களில் தனது பத்திரிகையாளர் பணியைத் துவக்கி, பார்ப்பன - பனியா ஆதிக்கம் நிறைந்த ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆங்கில நாளேட்டில் செய்தியாளராகவும், தலைமை செய்தியாளராகவும் பணியாற்றி, தனது திறமையை வெளிப்படுத்தினார். 1976 ஆம் ஆண்டு அவசர நிலை பிரகடனம் அமுலில் இருந்த காலத்தில் கடும் அடக்குமுறையை ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ சந்தித்த காலத்தில் எக்ஸ்பிரஸ் ஏட்டில் ஒரு செய்தியாளராக அவர் ஆற்றிய பணி மகத்தானது. ‘தினமணி’ நாளேட்டின் ஆசிரியர் பொறுப்பை அவர் ஏற்ற பிறகு தான், ‘தினமணி’யின் உள்ளடக்கமே மாறியது. தமிழின உணர்வாளர்களுக்கு உரிய பங்கு, அந்த நாளேட்டில் கிடைத் தது, அவர் ஆசிரியராக இருந்த காலத் தில் தான்.*

*பத்திரிகைத் தொழிலை மிகவும் விரும்பி ஏற்றுக் கொண்ட அவர் - அதைத் தனது வாழ்க்கையாகவே மாற்றிக் கொண்டார். காலை 11 மணிக்கு அலுவலகம் வந்து இரவு 11 மணி வரை பத்திரிகை அலுவலகத்திலே இருந்து ஒவ்வொரு பக்கத்தையும் நேரில் பார்வையிட்டு, கடுமையாக உழைத்த ஆசிரியர் இவர் ஒருவராகவே இருக்க முடியும். மேற்பார்வைக் கடமைகளோடு ஆசிரியர் பணியை முடித்துக் கொண்டு, உயர்ந்த சமூக நிலையைத் தக்க வைத்துக் கொள்வதையே - பல பத்திரிகை ஆசிரியர்கள் தங்களின் பண்புகளாக்கிக் கொண்ட சூழலில் - ஆர்.எம்.டி. வித்தியாசமானவராகவே இருந்தார். பணிகளில் குறை கண்டால் கடுமையாக நடந்து கொள்ளும் அவர், பாராட்ட வேண்டிய நேரங்களில் மனம் திறந்து பாராட்டுவார்.*

*தனது பத்திரிகைச் செல்வாக்கை சொந்த நலனுக்கு ஒரு போதும் பயன்படுத்தாதவர். எல்லாவற்றையும்விட, ஏராளமான பார்ப்பனரல்லாத இளம் பத்திரிகையாளர்களை உருவாக்கியது தான், அவரது தனித்துவமான என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடிய சிறப்பாகும்.*

*கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மறைந்த ஆர்.எம்.டி. அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். தோழர்கள் மேட்டூர் கிட்டு, சென்னை மதிவாணன் உடன் சென்றிருந்தனர். தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்தத் தலைவர் நல்லக்கண்ணு மற்றும் ஏராளமான பத்திரிகையாளர்கள் இறுதி மரியாதை செலுத்தினர். பகல் ஒரு மணியளவில் அவரது உடல் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டது.* ●

*‘பெரியார் திராவிடர் கழக’*
*அலுவலக புதிய முகவரி :*
**1, காமராசர் சாலை, மயிலாப்பூர்,**
**சென்னை-600 004.**

## அப்பா - மகன்

**மகன் :** *தான் சங்கராச்சாரி பக்தன் என்பதால், சங்கராச்சாரி வழக்கை விசாரிக்க மாட்டேன் என்று, தமிழ்நாட்டைச் சார்ந்த உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் கூறியுள்ளாரே, அப்பா!*

**அப்பா:** *ஆம், மகனே.*

**மகன் :** *கொலைக் குற்றம் சாட்டப்பட்ட சங்கராச்சாரிக்கு பிணை வழங்கி தீர்ப்பளித்தது இதே நீதிபதி தானே. அப்போதும் அவர் சங்கராச்சாரி பக்தர் தானே அப்பா!*

**அப்பா:** *எனக்குத் தெரியாது, மகனே!*

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857


## சீர்காழியில் கழகப் பயிற்சி முகாம்

*சீர்காழி பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பெரியாரியல் பயிற்சிமுகாம் 22.7.2007 ஞாயிறு காலை 10 மணிக்கு மா.பெ. பொ.க. மாவட்ட செயலாளர் முத்து அன்பழகன் இல்லத்தில் உருவாக்கப்பட்டுள்ள அரங்கில் நடைபெற்றது. பயிலரங்கிற்கு கொள்ளிட ஒன்றிய தலைவர் நந்த. இராசேந்திரன் தலைமை ஏற்க சீர்காழி ஒன்றிய துணை தலைவர் பொன். தேவேந்திரன் வரவேற்புரையாற்றினார். நகர மாணவரணி செயலாளர் ப. தினேசுகுமார் கடவுள் மறுப்பு கூறினார். தோழர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் வகுப்பு எடுத்தனர். மாவட்டத் தலைவர் இரா.பரசுராமன், மா.பெ.பொ.க. கடலூர் மாவட்ட செயலாளர் ப.மோகன், முத்து அன்பழகன், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற மாவட்ட செயலாளர் அன்பு. ராசப்பா ஆகியோர் கருத்துரை வழங்கினர். நிகழ்ச்சியையொட்டி சீர்காழி நகரம் முழுவதும் கழகக் கொடிகள் கட்டப்பட்டு இருந்தன. பயிற்சி முகாம் இரவு 7 மணியளவில் முடிவடைந்தது. 60க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். அனைவருக்கும் மதியம் மாட்டுகறி பிரியாணி வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சீர்காழி நகரத் தலைவர் பெரியார் செல்வம் சிறப்பாக செய்து இருந்தார். இறுதியாக சீர்காழி ஒன்றிய செயலாளர் ப. பண்பரசன் நன்றி கூறினார்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 17th August 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஆகஸ்டு 23, 2007 புரட்சி 5 முழக்கம் 34 விலை : ரூ.2.50

## சோதிடர் நேரம் குறித்த “சுதந்திரம்”

இந்திய அரசியல் நிர்ணய சபையின் செயலாளராக பதவி வகித்தவர் எச்.வி.ஆர்.அய்யங்கார், அய்.சி.எஸ். படித்தவர். இந்தியாவின் பிரதமரான நேருவின் முதன்மைச் செயலாளர், உள்துறை செயலாளர், ரிசர்வ் வங்கி கவர்னர் என்ற உயர் பதவிகளில் இருந்தவர். இந்தியாவின் “சுதந்திரம்” அறிவிக்கப்படுவதற்கு முன்பே, அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கான சட்ட நிர்ணய சபை அமைக்கப்பட்டுவிட்டது. இந்த சபை அரசியல் சட்டத்தை உருவாக்கி, அதை அமுலுக்கு கொண்டு வரும் காலம் வரை, நாட்டை ஆட்சி செய்யும் மன்றமாகவும் செயல்படும் என்று அறிவிக்கப் பட்டது.

இந்த அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் - பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த மாகாண சட்டமன்றங்களின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் (229 பேர்). அப்போது சொத்து உள்ளவர்களுக்கும் படித்தவர்களுக்கும் மட்டுமே ஓட்டுரிமை என்பதால், பல மாகாணங்களில் பிரதிநிதிகளே இல்லை, மன்னர்கள் ஆட்சி நடந்த சமஸ்தானங்களும் இருந்தன. இந்த சமஸ்தானங்களின் சார்பில், அரசியல் நிர்ணய சபை பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர் (70 பேர்).

அரசியல் சட்டத்துக்கான வரைவை தயாரிக்க டாக்டர் அம்பேத்கர் தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. குழுவில் ஒருவர் அப்போதே இறந்துவிட்டார். மற்றொருவர் அமெரிக்கா போய்விட்டார். ஒருவர் தீவிர அரசியலுக்குப் போய் விட்டார். இருவரால் டெல்லிக்கு அடிக்கடி வந்து போக முடிய வில்லை. இவ்வளவு இடர்ப்பாடுகளுக்கிடையே தான் அம்பேத்கர் தனது கடமையைச் செய்ய வேண்டியிருந்தது.

அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படையான தகவல்களைத் திரட்டுவதற்காக ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் ஆந்திராவைச் சார்ந்த பி.என்.ராவ் என்ற பார்ப்பனர். பிரிட்டன், அயர்லாந்து, அமெரிக்கா, பிரான்சு, கனடா, ஆஸ்திரேலியா, சோவியத் ஒன்றியம், ஜெர்மனி நாட்டுச் சட்டங்களிலிருந்து, இந்தியாவுக்கு பொருத்தமானவை என்று கருதப்பட்ட அம்சங்களை எல்லாம், இவர்தான் திரட்டினார். அவருடன் அரசியல் நிர்ணய சபையின் செயலாளராக இணைந்து செயல்பட்டவர் எச்.வி.ஆர். அய்யங்கார். ‘சுதந்திரம்’ அறிவிக்கப்பட்ட காலத்தை நினைவுகூர்ந்து இவர் எழுதிய கட்டுரையை கடந்த ஆகஸ்டு 15 ஆம் தேதி ‘இந்து’ நாளேடு வெளியிட்டுள்ளது. இது ஏற்கனவே 1972-இல், இதே ஏடு வெளியிட்ட கட்டுரை. இப்போது மறு வெளியீடாக வந்துள்ளது. சுதந்திரத்துக்கு நாள் குறிக்கப்பட்ட போதே பார்ப்பன சடங்குகள் தொடங்கிவிட்டதை, அவரது கட்டுரை குறிப்பிடுகிறது. இதுபற்றி கட்டுரையில் வெளிவந்த தகவல்கள்:

“பிரிட்டிஷார், 1947 ஆகஸ்டு 15 ஆம் நாளை சுதந்திரத்துக்கு தேர்வு செய்தபோது, அவர்கள், சோதிடர்களைக் கலந்து ஆலோசிக்கவில்லை. அரசியல் கண்ணோட்டத்தில் முடிவெடுத்தார்கள். ஆனால், டெல்லியில் இருந்த பல தலைவர்கள் - அது சோதிடப்படி நல்ல நாள் தானா என்று சோதிடர்களைக் கலந்து ஆலோசித்தார்கள். சோதிடர்கள், அது நல்ல நாள் அல்ல என்றும், ஆகஸ்டு 14 ஆம் தேதி தான் நல்ல நாள் என்றும் கூறினார்கள். ஆனால், அந்த நாளில்தான் பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்து தனிநாடாகும் நாளாக பிரிட்டிஷாரால் முடிவு செய்யப்பட்டிருந்தது. வைஸ்ராய் மவுண்ட்பேட்டன், அந்த நாளில், பாகிஸ்தானில் லாகூரில் இருந்தாக வேண்டும். புதுடில்லிக்கு, இரவு தான் வந்து சேர முடியும். இந்த நிலையில் மலையாள வரலாற்று ஆசிரியரான கே.எம். பணிக்கர் என்ற பார்ப்பனர் (இப்போதுள்ள வரலாற்று ஆசிரியர் பணிக்கர் அல்ல), ஒரு சமரச திட்டத்தை உருவாக்கினார். அதன்படி 15 ஆம் தேதி பிறப்பதற்கு முன்பு ஆகஸ்டு 14 ஆம் தேதி நள்ளிரவு 12 மணிக்கு 30 நிமிடங்களுக்கு முன்பாக நிர்ணய சபை உறுப்பினர்கள் கூட வேண்டும். இதனால், ‘கிரகங்களின்’ கோபத்திலிருந்து தப்பி விடலாம்; என்றார். அதன்படி நள்ளிரவு 12 மணிக்கு சுதந்திர இந்தியாவைப் பெற்றுக் கொள்வதற்கான உறுதியை ஏற்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அதன்படியே நடந்தது”

- என்று எழுதியுள்ளார். எச்.வி.ஆர். அய்யங்கார். இப்படி சுதந்திரம் அறிவிக்கப்பட்ட இடம், தற்போதுள்ள நாடாளுமன்றக் கட்டிடம் தான்.

“சுதந்திரம்” நல்ல நாளில் பிறந்தது; மக்களுக்குத் தான் “நல்ல” காலம் வரவில்லை.

### இரட்டைக் குவளை உடைப்புக் கிளர்ச்சி:

# சேலம் மாவட்டம் தயாராகிறது!

**இரட்டைக் குவளை உடைப்புக் கிளர்ச்சிக்கும் கழக ஏட்டுக்கு சந்தா சேர்க்கவும் சேலம் மாவட்டக் கழகம் தயாராகி வருகிறது. கழகத்தின் கலந்துரையாடல் கூட்டங்கள் பற்றிய செய்தித் தொகுப்பு:**

12.7.2007 வியாழன் மாலை 5 மணிக்கு சேலம் மாவட்டம் பவளத்தானூரில் பெரியார் திராவிடர் கழக தாரமங்கலம் ஒன்றியம், வீர பாண்டி ஒன்றியம் கலந்துரையாடல் கூட்டம் பவளத்தானூர் சரவணன் இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு இரும்பாலை பகுதி பழனிசாமி தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் முல்லை வேந்தன், செயலாளர் டைகர் பாலன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இரண்டு ஒன்றியங்கள் சார்பாக 100 ‘பெரியார் முழக்க’ சந்தாக்கள் சேர்த்துத் தருவதாக தோழர்கள் உறுதியளித்தனர். தார மங்கலம், பவளத்தானூர், கே.ஆர். தோப்பூர், இரும்பாலை பகுதிகளைச் சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். தாரமங்கலம் ஒன்றிய பொறுப்பாளர் மாரியப்பன் நன்றி கூறினார். சித்ரா அனைவருக்கும் பலகாரம், தேநீர் வழங்கி உபசரித்தார்.

#### இளம்பிள்ளை

12.7.2007 வியாழன் இரவு 8 மணிக்கு சேலம் மாவட்டம் இளம்பிள்ளையில் மகுடஞ்சாவடி ஒன்றிய கலந்துரையாடல் கூட்டம் முத்துமாணிக்கம் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பெரியார் மூத்த பெருந்தொண்டர் ஊஞ்சக்காடு செழியன் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், செயலாளர் டைகர் பாலன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மகுடஞ்சாவடி ஒன்றியம் சார்பாக 100 ‘பெரியார் முழக்க’ சந்தாக்களை சேர்த்துத் தருவதாக தோழர்கள் ஒப்புதல் அளித்தனர். கூட்டத்தில் பெரியார் முழக்க சந்தா, இரட்டைக்குவளை கணக்கெடுப்பு ஆகிய வேலைத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. கூட்டத்தில் இளம்பிள்ளை, ஊஞ்சகாடு, பாப்பாப்பட்டி, கலைஞர் கருணாநிதி நகர், சித்தர் கோவில், வருவம்பட்டி, பெத்தாம்பட்டி, முருங்கப்பட்டி, நல்லனம்பட்டி, ஏழுமாத்தானூர், கூத்தப்பாளையம் ஆகிய பகுதிகளை சார்ந்த 35 தோழர்கள் கலந்து கொண்டனர். முத்துமாணிக்கம் தோழர்களுக்கு தேநீர், ரொட்டி வழங்கி உபசரித்தார். கோகுலக் கண்ணன் நன்றி கூற, இரவு 10.30 மணிக்கு கலந்துரையாடல் நிறைவுற்றது.

#### மேட்டூர் ஆர்.எஸ்.

15.7.2007 ஞாயிறு காலை 10 மணிக்கு மேட்டூர் டிகே.ஆர். நினைவு பெரியார் படிப்பகத்தில் பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் நடை பெற்றது. மேட்டூர் ஆர்.எஸ். தங்கமாபுரி பட்டினம், சாம்பள்ளி, காந்தி நகர் ஆகிய பகுதிகளை சார்ந்த தோழர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு சேலம் மாவட்டத் தலைவர் முல்லை வேந்தன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் டைகர் பாலன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் இரட்டைக்குவளை கணக்கெடுப்பு, ‘பெரியார் முழக்கம்’ சந்தா சேகரிப்பு ஆகிய வேலைத் திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. தோழர்கள் 200 சந்தாக்கள் திரட்டி தருவதாக ஒப்புதல் அளித்தனர். மாவட்ட இளைஞரணி தலைவர் சக்திவேல், காந்தி நகர் அருள்செல்வம், தங்கமாபுரிபட்டினம் அரவிந்த், தேசாய் நகர் நாகராஜ், முகமது அலி உட்பட 20 தோழர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அசோக்குமார் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

#### குமரன் நகர்

15.7.07 ஞாயிறு மாலை 5 மணிக்கு மேட்டூர் நகர குமரன் நகர் பகுதி பெரியார் திராவிடர் கழகக் கலந்துரையாடல் கூட்டம் குமரன் நகர் பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன் தலைமை வகித்தார். செயலாளர் டைகர் பாலன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் இரட்டைக்குவளை கணக்கெடுப்பு, ‘பெரியார் முழக்கம்’ சந்தா சேகரிப்பு ஆகிய வேலைத் திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. குமரன் நகர் பகுதி சார்பாக 50 ‘பெரியார் முழக்க’ சந்தாக்களை திரட்டித் தருவதாக தோழர்கள் உறுதியளித்தனர். கூட்டத்தில் கழக ஓவியர் குமரப்பா, தர்மராசு, பொன் தேவராசு உட்பட 10 தோழர்கள் கலந்து கொண்டனர். சிவக்குமார் நன்றிக் கூற கூட்டம் நிறைவுற்றது.

#### மேட்டூர் நகரம்

15.7.07 ஞாயிறு இரவு 8 மணிக்கு பெரியார் திராவிடர் கழக மேட்டூர் நகர கலந்துரையாடல் கூட்டம் சேலம் மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன் தலைமை வகித்தார். செயலாளர் டைகர் பாலன் முன்னிலை வகித்தார். மேட்டூர் நகர பொறுப்பாளர்கள் கோவிந்த ராசு மார்ட்டின், சக்திவேல் உட்பட 10 தோழர்கள் கலந்து கொண்டனர். பெரியார் முழக்க சந்தா மேட்டூர் நகர சார்பாக 300 சந்தாக்கள் திரட்டி தருவதாக தோழர்கள் உறுதி யளித்தனர். போராட்டம் சம்பந்தமாக கலந் துரையாடல் நடை பெற்றது. தூக்கணாம் பட்டி பிரவீன் நன்றி கூற கூட்டம் நிறை வுற்றது.

#### கொளத்தூர்

16.7.07 திங்கள் மாலை 5 மணிக்கு கொளத்தூர் பகுதி பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் கொளத்தூர் புதூர் பெரியார் படிப்பகத்தில் நடை பெற்றது. கூட்டத்திற்கு நகர செயலாளர் சூரியகுமார் தலைமை வகித்தார். சேலம் மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், செயலாளர் டைகர் பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கொளத்தூர் நகரம் சார்பாக 200 ‘பெரியார் முழக்க’ சந்தாக்களை வசூல் செய்து தருவதாக உறுதி யளித்தனர். கொளத்தூர் நகர பொருளாளர் சுந்தரம் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

#### காவாலாண்டியூர்

16.7.07 திங்கள் இரவு 8 மணிக்கு கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள காவாலாண்டியூர் கிளை கழக பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் கண்ணையன் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் சித்துசாமி தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் முல்லை வேந்தன், செயலாளர் டைகர் பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் இரட்டைக் குவளை கணக்கெடுப்பு, ‘பெரியார் முழக்கம்’ சந்தா சேர்ப்பு ஆகியவைகள் பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. காவாலாண்டியூர் சார்பாக 100 பெரியார் முழக்க சந்தாக்கள் சேர்த்து தருவதாக தோழர்கள் உறுதி அளித்தனர். 20 தோழர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டனர். விஜயகுமார் நன்றி கூற கூட்டம் இரவு 10 மணிக்கு நிறைவுற்றது.

#### வனவாசி

18.7.07 புதன் மாலை 5 மணிக்கு வனவாசி நங்கவள்ளி, பனங்காடு ஆகிய பகுதிகளில் பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் வனவாசி கதிர்வேல் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மல்லப்பனூர் பெரியசாமி தலைமை தாங்கினார்.

(4 ஆம் பக்கம்)

*தலையங்கம்*

# சரியான பரிந்துரை

*உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றங்கள் – பார்ப்பனர் பிடியிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஒரு ‘தலித்’ அமர்ந்திருந்தாலும்கூட அது பார்ப்பன மன்றமாகவே செயல்படுகிறது. அண்மைக்காலமாக – தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்கு சமூக நீதியை உறுதிப்படுத்தும் சட்டங்களுக்கு, உச்சநீதிமன்றம் முட்டுக்கட்டை போட்டே வருகிறது.*

*நாடாளுமன்றத்திலே, கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் தேதி தனியார் கல்வி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்தும் 93-வது சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. குடியரசுத் தலைவர் ஒப்புதலும் பெறப்பட்டது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்தது. சட்டத் திருத்தம் அரசியல் சட்ட வரம்புகளுக்கு உட்பட்டதா என்பதை பரிசீலிக்க வேண்டிய உச்சநீதிமன்றம் – தனது வரம்பைத் தாண்டி சட்டத்தின் நோக்கத்தையே கேள்விக்குள்ளாக்கியது. இடஒதுக்கீட்டுக்கு எதிராகவே – நீதிபதிகள், கருத்துகளைக் கூறி வருகிறார்கள். நடப்பு ஆண்டிலேயே உயர்கல்வி நிறுவனங்களில் 27 சதவீத இடஒதுக்கீட்டை அமுல்படுத்தக் கோரி, மத்திய அரசு தாக்கல் செய்த மனுவையும் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இத்தனை காலம் பொறுத்தவர்கள், இன்னும் கொஞ்ச காலம் பொறுக்கக் கூடாதா என்று நீதிபதி கேட்கிறார். உண்மையைச் சொன்னால், அரசியல் சட்டத்திருத்தம் அமுலுக்கு வந்த 1951 ம் ஆண்டிலிருந்தே இந்த இடஒதுக்கீட்டை (இப்போது கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தம் இல்லாமலே) வழங்கியிருக்க முடியும். 50 ஆண்டுகாலத்துக்கு மேலாக மறுக்கப்பட்ட உரிமைகளைப் பற்றி நீதிமன்றம் சிந்திக்கத் தயாராக இல்லை; இப்போது பொறுக்கக்கூடாதா என்று அறிவுரை கூறுகிறது. என்ன கொடுமை!*

*பிற்படுத்தப்பட்டோர் பற்றிய கணக்கெடுப்பு சரியாக இல்லை என்றும், இடஒதுக்கீடு எத்தனை காலத்துக்குத்தான் நீடிப்பது என்றும், தகுதி திறமை வேண்டாமா என்றும், நீதிபதிகள் பேசுகிறார்கள். காரணம் என்ன? அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத, பார்ப்பன-உயர்சாதிப் பிரிவிலிருந்து இந்த நீதிபதிகள் வருவதுதான்!*

*உச்சநீதிமன்றத்திலே இப்போது 22 நீதிபதிகள் இருக்கிறார்கள் என்றால், அதில் ஒருவர் மட்டுமே தலித்! அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த 56 ஆண்டுகளில், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒரே ஒருவர்தான் உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்துள்ளார். அவர் தான் நீதிபதி ரத்தினவேல்பாண்டியன்.*

*இந்த நிலையில் – சுதர்சன நாச்சியப்பன் தலைமையிலான நாடாளுமன்ற நிலைக்குழு, முக்கிய பரிந்துரைகளை முன் வைத்திருக்கிறது. சமூக நீதியும், சமத்துவமும் மலர வேண்டுமானால், உயர்நீதிமன்றங்களிலும், உச்சநீதி மன்றத்திலும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளது. வரவேற்றுப் பாராட்ட வேண்டிய பரிந்துரையாகும். ஜனநாயகத்தின் இரண்டு தூண்களான நிர்வாகம், சட்டமன்றங்களில், அரசியலமைப்பு வலியுறுத்தும் இடஒதுக்கீடு பின்பற்றப்படும்போது, மூன்றாவது தூணாகிய நீதித்துறையிலும், இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டாமா, இல்லாவிட்டால் நீதித் துறையைத் தவிர, இதர தூண்கள் மீது சந்தேகத் தன்மையை உருவாக்கிவிடுமே” என்று அந்தக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. 610 உயர்நீதிமன்ற நீதிபதிகளில் – தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் 20 பேர் மட்டும் தான் உள்ளனர் என்ற அவல நிலையையும் படம்பிடித்துக் காட்டியுள்ளது. இந்த இடஒதுக்கீட்டிற்காக, புதிய சட்டத்திருத்தம் ஏதும் தேவையில்லை. அரசியல் சட்டத்தின் 14 மற்றும் 15 பிரிவுகளிலேயே இது தெளிவாக்கப்பட்டுள்ளதையும் குழு சுட்டிக் காட்டியுள்ளது.*

*இது தவிர நீதிபதிகள் நியமனங்களே அகில இந்திய சர்வீசுகளைப் போல் ஒரு தேர்வு முறையின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று அரசியல் சட்டத்தின் 312வது பிரிவு கூறுகிறது. பெரியார் திராவிடர் கழகம் நடத்திய மாநாடுகளிலும் இது தீர்மானமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், இந்த சட்டப் பிரிவு மட்டும் அமுல்படுத்தப்படாமலே உள்ளது.*

*சமூக நீதியை ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை நாடாளுமன்றம் அங்கீகரித்தாலும்கூட, நீதிமன்றங்கள் தடுத்து நிறுத்துவதை இனியும் சகிக்க முடியாத காலம் வந்துவிட்டது. இந்த உணர்வுகளின் பிரதிபலிப்பாகவே சுதர்சனம் நாச்சியப்பன் குழுவின் பரிந்துரையும் வெளி வந்துள்ளது. நீதித்துறையின் பார்ப்பனிய மேலாதிக்கத்துக்கு எதிராக சமூக நீதி இயக்கங்கள் வலிமையாக குரல் எழுப்பி, மக்கள் கருத்தை உருவாக்கவேண்டியது அவசியம்.*

# ‘ஓணம்’ விடுமுறையும் சேலம் ரயில் கோட்டமும்

## வந்த கடிதங்கள்

*ஆகஸ்டு 14 ஆம் தேதி தொலைக்காட்சியிலே நாடாளுமன்றத்தில் நடந்த ஒரு அமளியைப் பார்த்தேன். கேரளாவின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூச்சல் குழப்பம் போட, சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜியே, ஆத்திரமடைந்து எச்சரிக்கிறார். எதற்கு இந்த கூச்சல்? சேலம் ரயில்வே கோட் டத்தை அனுமதிக்கக் கூடாதாம்! தமிழ்நாட்டில் 623 கிலோமீட்டர் தூரத்தில் அடங்கியுள்ள ரயில் நிலையங் கள் இதுவரை, கேரளாவில் பாலக்காடு ரயில்வே கோட் டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. இதனால் தமிழ்நாட்டில், சோலார்பேட்டை தொடங்கி, கோவை வரையில் உள்ள ரயில் நிலையங்களில் சிற்றுண்டி விடுதிகள், விற்பனை நிலையங்களில் ஒரே மலையாளிகள் ஆதிக்கம்!*

*இப்போது பாலக்காட்டுப் பிரிவிலிருந்த 623 கிலோ மீட்டர் பாதையைப் பிரித்து திருச்சியிலிருந்து 135 கி.மீட்டர் பாதை மற்றும் புதிதாக 85 கிலோ மீட்டர் பாதையுடன் இணைந்து சேலம் ரயில்வே கோட்டம் உருவாக்க மத்திய ரயில்வே அமைச்சகம் முடிவு செய்தது. இதற்காக தொடர்ந்து போராட்டங்களை நடத்தியது, கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் தான். பாலக்காடு ரயில்வே கோட்டத்தின் கீழ் 509 கிலோ மீட்டர் பாதை இருக்கும். ஆனாலும், தமிழக ரயில்வே, கேரளா கட்டுப் பாட்டுக்குள்தான் இருக்க வேண்டும் என்று, தமிழர்களின் உரிமைகளைத் தடுக்கிறார்கள், மலையாளிகள்! கேரள அரசே உச்சநீதிமன்றம் வரை போய் தடை கோருகிறது.*

*அதே நேரத்தில் - தமிழ்நாட்டிலுள்ள மலையாளிகள் சங்கம் சார்பில் அதன் நிர்வாகிகள், தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியை சந்தித்து ‘ஓணம்’ பண்டிகைக்கு உள்ளூர் விடுமுறை தரவேண்டும் என்று கோர, முதலமைச்சரும், மின்னல் வேகத்தில் விடுமுறை அறிவிக்கிறார். தமிழநாட்டில் கோவை, நீலகிரி, கன்யா குமரி மாவட்டங்களோடு சென்னை மாவட்டத்திற்கும் (இங்கு மலையாளிகள் 20 சதவீதத்துக்கும் குறைவு) ‘ஓணம்’ விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாற்றாக எந்த சனிக்கிழமையும் வேலை நாளாக அறிவிக்கவில்லை. அதேபோழ்து, கேரளாவிலும் அய்ந்து மாவட்டங்களில், தமிழர்கள் 30 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை வாழ்கிறார்கள். அங்கெல்லாம் தமிழர் திருநாளான பொங்கலுக்கு உள்ளூர் விடுமுறை இல்லை. தமிழ்நாட்டில் எந்த மலையாளிகள் சங்கமும் முல்லைப் பெரியாறு, சேலம் ரயில்வே கோட்டம் பிரச்சினைகளில் தமிழ்நாட்டுக்கு ஆதரவாக எந்தத் தீர்மானமும் போடவில்லை.*

*தமிழ்நாட்டில் மலையாளிகள் வாழும் பகுதிகளில் அவர்கள் கலாச்சார உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது நியாயம் என்றால், தமிழர்களின் ரயில்வே துறை உரிமைகளை, மலையாளிகள் தங்கள் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும் என்பது நியாயம் தானா?*

*இதற்குப் பெயர் பெருந்தன்மையா? தமிழனின் இளிச்சவாய்த்தனமா?*

**– சு. மகிழ்மாறன், சென்னை – 600 001.**

### அற்புத போராட்ட முறை

*‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வரும் ‘இரட்டைக் குவளை தேநீர் கடை பட்டியல்’ ஒரு அற்புதமான போராட்ட முறை. பெயரைப் பார்க்கும் கடைக்காரர் வெட்கப்பட்டு தாமே திருந்த வழி உள்ளது. அரசும் நடவடிக்கை எடுக்க முடியும். நாமும் எச்ரிக்கையும் அவகாசமும் தந்த மாதிரி இருக்கும். இந்த சின்ன யுக்திகூட அரசுக்கு தோன்றாதது வியப்புதான். கடை பெயர்களில் சாதிப் பெயர் - கல்யாண மண்டபங்களில் சாதிப் பெயர் எல்லாவற்றையும் இப்படி பட்டியலிடலாம். அண்ணாமலை செட்டியார் நிறுனங்களும், பொள்ளாச்சி மகாலிங்கம் ‘கவுண்டர் அண்டு கம்பெனி’ என்று வைத்திருப்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும். சாதி என்கிற வெட்கக் கேட்டை கேவலமடையும் கீழ்சாதிகள் ஒழித்துவிட்டு பார்ப்பானை சமூக விலக்கம் செய்தால் ரத்த களரி இல்லாமலே சாதியை ஒழிக்க முடியும். வாழ்த்துக்கள். பாராட்டுக்கள்.*

**– சங்கமித்ரா, சென்னை–48.**

### சீரியப் பணி

*‘இரட்டைக் குவளை’ நடைமுறையிலுள்ள தேநீர் கடைகள் பட்டியலைப் பார்த்தேன். பெரியார் பிறந்த மண்ணில் இப்படி ஒரு கொடுமை நடப்பதுதான் பெருங் கொடுமை! உங்களின் தோழர்களின் கடும் உழைப்பில் இந்த உண்மையான பட்டியல் தயாராகி உள்ளது. இரண்டொரு மாவட்டங்களில் மட்டுமே இத்தனை நீண்ட பட்டியல்! தமிழகம் பூராவும் கணக்கெடுத்தால் மிகப் பெரிய பட்டியல் உருவாகுமே! நம் மக்களின் இன-இழிவு பட்டியலை கண்டுபிடித்த நம் பெரியார் தி.க.வின் பெருமைக் குரியத் தோழர்களை பெரிதும் பாராட்டி மகிழ்கிறேன்!*

**– ச. நாத்திக நந்தனார், சென்னை.**

### அறிவு – நாணயம் என்ன விலை?

*போராட்டமே வாழ்க்கையாய் வாழ்ந்த மாபெரும் சமூகப் புரட்சியாளர் தந்தை பெரியாருக்கு நேர்ந்துள்ள அவமானம் உலகில் வேறு எந்தவொரு புரட்சியாளருக்கும் நேராதது, நேரக் கூடாதது. கொண்ட கொள்கைக்காக இயக்கம் கண்டு இயக்கத்திற்கு தேவையான அத்தனை வசதிகளையும் உருவாக்கி வைத்து, கடைசி மூச்சு வரை சுற்றிச் சுழன்று களங்கண்ட தன்னிகரில்லாப்போராளி பெரியாரைப் பற்றி, பெரியார் நடத்திய போராட்டங்கள் பற்றி, ஒரு முழுமையான தொகுப்பு இல்லையே என்கிற கவலை, ஏக்கம் எல்லோரிடமும் எழுந்து கொண்டேயிருக்கிறது. எங்கே இந்த ஏக்கப் பெருமூச்சு புயலாய் மாறி “அதிகாரபூர்வ வாரிசு களின் வளமான வாழ்க்கையை நோக்கி நகர்ந்து விடக் கூடாதே என்கிற முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாகவோ, அல்லது பெரியாரைப் பற்றிய முழுமையான வரலாற்றுப் பதிவை அதிகாரப் பூர்வமற்றவர்கள் வெளிக்கொண்டு வருவதற்குள் முந்திக் கொள்ள வேண்டும் என்கிற உந்துதல் காரணமாகவோ என்னவோ கி.வீரமணி பெரியாரை உலகத் தலைவராக்கி உண்மைக்கு மாறான வரலாறுகளை உலவவிட்டிருக்கிறார்.*

**– காசு.நாகராசன், பொள்ளாச்சி**

## மு.க. அழகிரி நடத்திய யாகம்

*மதுரையை மய்யமாகக் கொண்டு, தென் மாவட்டங்களில் ஆட்சி செய்து வரும் மு.க. அழகிரி, பல கோடி ரூபாய் செலவில், மதுரையில் திருமண மண்டபம் ஒன்றை கட்டியுள்ளார். தமிழக சட்டப் பேரவைத் தலைவர் உட்பட 10க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் அந்த திறப்பு விழாவுக்கு வந்திருந்தனர். இந்த செய்தியை வெளியிட்ட ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேடு (மதுரை பதிப்பு), புரோகிதர்கள் யாகம் வளர்த்து, திருமணம் மண்டபம் திறக்கப்பட்டது என்று செய்தி வெளியிட்டுள்ளது. யாகத்தை முடித்து புரோகிதர்கள் அழகிரிக்கு பிரசாதம் வழங்கினார்களாம். திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் இருந்தும், மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலிருந்தும் புரோகிதர்கள், அழகிரிக்கு பிரசாதம் கொண்டு வந்திருந்தனர்’ என்று அந்த ஏடு செய்தி வெளியிட்டுள்ளது. இதே செய்தியை ‘டெக்கான் குரோனிக்கல்’ நாளேட்டில் (ஆகஸ்டு 5) வாசகர் ஒருவர் கடிதமாகவும் எழுதியுள்ளார். வாழ்க, “பகுத்தறிவு” பரம்பரை!*

**அடுத்த இதழில்...**

- **அமெரிக்க – இந்திய அணுசக்தி ஒப்பந்தத்தின் நோக்கம் என்ன?**
- **‘மார்க்சியம், பெரியாரியம், தேசியம்’ எஸ்.வி.ஆர் எழுதிய – நூல் மதிப்புரை.**

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 2451 2857

# வர்க்கத்தைக் கூறுபோடும் சாதி

## தஞ்சை மாநாட்டில் வழக்கறிஞர் பானுமதி உரை

***"உலக நாடுகளில் உள்ளது தொழில் பிரிவினைதான்; இந்த நாட்டில்தான் தொழிலாளர் பிரிவினை இருக்கிறது" என்று வழக்கறிஞர் பானுமதி மே.19 இல் தஞ்சையில் கழகம் நடத்திய சாதி ஒழிப்பு மாநாட்டில் குறிப்பிட்டார். அவரது உரை:***

அன்றைக்கு சம்பூகனை கொலை செய்தான் இராமன். இன்றைக்கு பூணூலை அறுத்ததற்காக நமது தோழர்களை கைது செய்திருக்கிறது இந்த அரசாங்கம். இதற்கு எவ்வளவு முக்கியத்துவம் இருந்தால் இந்த சாதீய அமைப்பிற்கு பார்ப்பனீயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் இருந்திருந்தால் இப்படி தேசப் பாதுகாப்பு சட்டம் என்பது பாயும். இந்த முக்கியத்துவம் வாய்ந்த இந்த சாதியை ஒழிப்பது என்பது ஏதோ சாதாரண விசயம் இல்லைங்க. பல பேர் சொல்லுவாங்க சாதி எல்லாம் நில பிரபுத்துவ காலத்து மிச்ச சொச்சங்கள். அந்த நில பிரபுத்துவ காலம் முடிந்தாகிவிட்டது. பண்ணை அடிமை முறை முடிந்தாகிவிட்டது. எங்கங்க இருக்கு சாதி? என்று கேட்பவர்களும் உண்டு. எல்லா நாட்டிலும் நிலபிரபுத்துவ ஆட்சி ஒழிந்தது. முதலாளித்துவ ஆட்சி மலர்ந்தது. சாதிகள் ஒழிந்துவிட்டன என்று கூறினார்கள். அதை பொய் என்கிறார் அம்பேத்கர். சாதியையும் தொழிலோடு ஒப்பிட்டு, அது ஒரு தொழில் முறை. தொழில் பிரிவு என்பது உலகத்தில் எல்லா இடங்களிலும் இருந்திருக்கிறது, இந்தியாவில் மட்டும் அல்ல என்று கூறி சாதியத்திற்கு ஒரு சப்பைக் கட்டு கட்டியிருக்கிறார்கள். அதையும் பொய் என்கிறார் அம்பேத்கர். எல்லா நாட்டிலும் தொழில்களை பிரித்தார்கள், தொழிலாளர்களைப் பிரிக்கவில்லை. அது இந்தியாவில் தான் நடந்தது.

பார்ப்பனீயமும், சாதியமும் தொழிலாளர்களைப் பிரித்தது, தொழிலை வைத்து அல்ல! அதுவும் தொழிலாளர்களை எப்படிப் பிரித்தது, ஏணி அடுக்கு முறையில் யார் பெரியவன் தாழ்ந்தவன் என்று பிரித்தது. இடதுசாரி கட்சிகள் சொல்லுகிற மாதிரி பாட்டாளி வர்க்கங்கள் சம நிலையில் தான் இருக்க வேண்டும். ஆனால் இந்துத்துவத்தில் பாட்டாளி வர்க்கங்கள் படி நிலையில் இருக்கிறார்கள். இந்த படிநிலை மற்ற நாட்டில் உள்ளது போல் ஏதோ தொழில் அடிப்படையில் நடந்த பிரிவினை அல்ல. தொழிலாளர்களை சாதியத்தின் மூலம் பிரித்து வைத்திருக்கிறார்கள். இந்த சாதீயம் என்கின்ற அமைப்பு மட்டும் இன்று வரை இவ்வளவு தூரம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்றால் இதற்கு ஏதோ ஒரு அடிப்படை இருக்க வேண்டும்.

இன்றைக்கும் அரசியலில் சாதி இல்லை என்றால் அரசியலை நடத்த முடியாது என்கின்ற சூழ்நிலை வந்தாச்சு. என்னங்க நாங்க சாதியில்லாமல் அரசியல் நடத்த முடியுமா? என்பதுதான் இன்று கேள்வி. சாதி அரசியலை வைத்து இன்றைக்கு சனநாயகம் நடந்து கொண்டிருக்கின்றது. இந்தியாவில் மட்டும் குறிப்பாக இந்த சாதீய முறை எப்படி இவ்வளவு கட்டுக்கோப்பாக இன்று வரையிலும் தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கின்றது என்றால் அதைத் தான் அம்பேத்கர் சொல்கிறார், சாதி ஒரு சிறப்புத் தன்மையானது. அது தானே இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது ஒவ்வொரு காலக் கட்டத்திலும் தன்னை உருமாற்றிக் கொண்டு எழுந்து நின்று கொண்டிருக்கின்றது. சில பழக்க வழக்கங்களை நாம் கைவிட்டோம் என்றால் அது அழிந்து போகும். அதே மாதிரி சாதிய பழக்கங்களை கைவிட்டால் அது அழிந்து விடும். ஆனால், இந்த சாதிய அமைப்பு முறை மட்டும் அழியாமல் இருக்கிறது. இதைத் தொடர்ச்சியாக கைப்பிடித்துக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக இதற்கு பின்னணியில் பார்ப்பனர்களின் பிடியில் இருக்கக்கூடிய வேதங்களும், சாஸ்திரங்களும், புராணங்களும், சமய நம்பிக்கைகளும், சடங்குகளும் இருக்கின்றன. அவை அத்தனையுமே புனிதமானவை என்பதே பார்ப்பான் நமக்கு இட்ட கட்டளை. அதனாலேயே சாதியை புனிதமானது என்பதே பார்ப்பான் நமக்கு இட்ட கட்டளை. அதனால் சாதியும் புனிதமானது என்று காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். யாராவது நீங்க எந்த சாதி என்று கேட்டால் நமக்கு அருவருப்பாக இருக்கின்றது.

நான் வழக்கறிஞராக முதன் முதலாக நீதிமன்றத்திற்கு சென்றபோது ஒரு வழக்கறிஞர் என்னை கேட்டார், நீங்க நம்மாளா எனக் கேட்டார். அப்படின்னா என்ன அர்த்தம் என்று கேட்டேன். அதற்கப்புறம் என்கிட்ட அவர் பேசவே இல்லை. எதை முதலில் தேடுகிறார்கள்? நம்முடைய அடையாளம் என்ன? இவர் வழக்குரைஞரா? என்ன படித்திருக்கிறார்? என்ற கேள்வி அல்ல. இவர் எந்த சாதியச் சேர்ந்திருக்கிறார் என்ற அடையாளத்தையே தேடுகின்றார்கள். அருவருப்பாகத்தான் இருக்கிறது. சாதியத்தைச் சொல்லும்போது. ஆனால் இந்த சாதியை புனிதமானது என்று கொண்டாடிக் கொண்டு பார்ப்பான் திணித்த அந்த பண்பாட்டை இன்று வரை நாம் கடைபிடித்துக் கொண்டிருக்கிறோம். இந்த புனிதத் தன்மையை வைத்துத்தான் சாதியம் இன்றைக்கும் உயிர் பெற்றுள்ளது. கேள்விக்கு அப்பாற்பட்டதாக்கப்பட்ட சாதிமுறை புனிதமாக ஆக்கப்பட்டது. இந்த சாதிமுறை புனிதம் என்றால் எல்லோருக்கும் ஒரு மரியாதை வந்துவிடும். அதை வணங்கவேண்டும் என நினைப்போம். காப்பாற்ற வேண்டும் என நினைப்போம். உயிரைக் கொடுத்தாவது காப்பாற்ற வேண்டும் என நினைப்போம். பார்ப்பனீயம் என்ன கற்றுக் கொடுக்கிறது தெரியுமா? இந்தியாவிலுள்ள ஒவ்வொருவனுக்கும் உள்ள மிகப் பெரிய சொத்து என்பதே அவனுடைய சாதி என கற்றுக் கொடுத்திருக்கின்றான். எதுவுமே இல்லையென்றாலும் சாதி என்று ஒன்னு இருக்கு என்பதுதான்.

அதனால் தான், காரல் மார்க்ஸ் பாட்டாளி வர்க்கத்திடம் உங்களிடமிருந்து உடைத்தெறிவதற்கு உங்கள் கையில் உள்ள விலங்குகளைத் தவிர வேறு எதுவும் இல்லை" என்று கூறினார். ஆனால் இந்தியாவில் இருக்கக் கூடிய ஒவ்வொரு பாட்டாளி வர்க்கத்திற்கும் தான் பெற்ற சாதி ஒரு அடையாள சொத்தாக இருக்கிறது. அதனால்தான் இன்று வரையில் அதன் கை விலங்குகளை உடைக்க முடியவில்லை என்று அம்பேத்கர் கூறினார். அந்த சாதி அடையாளத்தைக் காப்பாற்ற விரும்புகிறார்கள். இந்த அடையாளத்தை ஒழுக்கம் என்கின்ற நெறியை வைத்தோ, பகுத்தறிவு என்கின்ற ஒரு தீயை வைத்தோ கொளுத்தி அழித்து விட முடியாது என்று கூறுகிறார் அம்பேத்கர்.

பகுத்தறிவு என்பது எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்குவது. பார்ப்பனீயம் என்பது கேள்வியே கேட்காதே என்பது. கேள்வியே கேட்காதே நான் சொல்வதை ஏற்றுக்கொள் என்கின்ற பார்ப்பனீயத்தை நீங்கள் பகுத்தறிவுக் கொண்டு எரிக்க முடியாது. அல்லது ஒழுக்கத்தைக் கொண்டு எரிக்க முடியாது. இது மிகப் பெரிய கற்கோட்டைப் போன்றது. இதற்கு இராணுவமாக நிற்கிறார்கள் பார்ப்பனர்கள் என்கிறார் அம்பேத்கர். இந்த இராணுவப் பாதுகாப்போடு உள்ள இந்த கற்கோட்டையை தகர்க்க வேண்டும் என்றால், அதற்கு அணுகுண்டும் பீரங்கியும் வைத்துத்தான் நீங்கள் சிதறலை உண்டாக்க வேண்டும். சாதீயம் என்ற அமைப்பை நீங்கள் உடைக்க வேண்டும் என்றால் பார்ப்பனீயம் சொல்லி வந்த வேதம், சாஸ்திரம், சம்பிரதாயங்கள், புனிதம் என்கிற கருத்துக்களை உடைப்பதற்கு பீரங்கி போன்ற குண்டுகளைக் கொண்டு நீங்கள் துளைக்க வேண்டும் என்றார் டாக்டர் அம்பேத்கர்.

எதற்காக இதைத் தகர்க்க வேண்டும்? இருந்து விட்டுப் போகட்டுமே என்று கூறுகிறவர்களும் இருக்கிறார்கள். இது மிகப் பெரிய ஆபத்து என்பதை கண்டுக் கொள்ளாத ஒரு சமூகம் இருக்கிறது என்றால் அது இந்திய சமூகம் தான். நாம் சமூகம் என்று கூட கூற முடியாது. சமூகம் என்றால் எல்லோருடனும் ஒட்டி உறவாட வேண்டும், ஒற்றுமையோடும், சரிசமமாகவும், சகோதரத்துவடனும் நாம் வாழ்க்கை நடத்தினால் அதை ஒரு சமூகம் எனக் கூறலாம். இங்கே சமூகம் இல்லை; சாதிகளின் தனித்தனிக் கூட்டம்தான் வாழ்கிறது. தனித்தனியாக இருக்கக் கூடிய ஒவ்வொரு சாதியும் தனித்தனியாக இருக்கக் கூடிய ஒரு தேசம் என்று கூறுகிறார் அம்பேத்கர்.

### பார்ப்பனீயமும் ஏகாதிபத்தியமும்

இந்த பார்ப்பனீயத்தை ஏகாதிபத்தியத்திற்கு இணையாக கூறுகிறார் அம்பேத்கர். ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை தொடர்ச்சியாக ஒடுக்கிக் கொண்டே வந்தால், அது ஏகாதிபத்தியம்.

பார்ப்பனீயத்தை ஒரு தேசியம் என்கிறார் அம்பேத்கர். அந்த தேசியத்திற்கு அரசியல் எல்லை தேவையில்லை. ஒரு குறிப்பிட்ட எல்லை பரப்பு தேவையில்லை. அதற்குள் தனித்தனி தேசங்களாக இருப்பதுதான் சாதிகள். நாமெல்லாம் தனித் தனி தேசங்களாக இருக்கிறோம், ஒவ்வொரு சாதியும் ஒரு தேசம். இப்படி தனித்தனி தேசங்களாக இருக்கக் கூடியவர்களை நாமெல்லம் ஒரு தனித் தனி தேசமா ஒரு சாதிக்காரனா நினைக்கிறோம் என்றால் இந்த சாதியை உடைக்கிறது எவ்வளவு பெரிய விசயம். இதை உடைத்தெறிய வேண்டும். இதிலே வசதியான ஒரு விசயம் என்ன வந்திருக்குன்னு சொன்னா, இன்றைக்கு சம காலத்தில் இந்த சாதி முறையை ஒழிக்கவில்லை என்றால் நாம் மீண்டும் மீண்டும் வளர்ச்சி அடையாமல் அடிமையாகவே அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு இப்ப இருக்கக்கூடிய புதிய பொருளாதாரக் கொள்கை மூலமாக அடிமைப்பட்டு செத்துவிடுவோம் என்பதுதான் உண்மை. இந்த நாட்டின் பிரிவினை எது? சாதி.

சாதியும் வர்க்கமும் ஒன்றாக இருக்கிறது. பணக்கார வர்க்கம் உயர்சாதி. ஏழை தாழ்ந்த சாதி. இப்படிப்பட்ட பிரிவினைகள் இருக்கும் போது அந்நிய ஏகாதிபத்தியம் யாரை இன்றைக்கு துணையாக கொண்டிருக்கிறது. இந்தியாவில் என்றால், இந்தியாவிலுள்ள உயர்சாதி வர்க்கமாக இருக்கக்கூடிய பார்ப்பனீயத்தின் துணையோடுதான் இந்தியாவில் நுழைந்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது இந்தியாவில் ஏகாதிபத்தியம் ஒரு சுரண்டலை நோக்கி வரும்பொழுது அதற்கு ஆதரவாக இருக்கக்கூடிய பார்ப்பனியமும், அதைச் சார்ந்த உயர்சாதி வர்க்கங்களும் பிழைத்துக் கொள்வார்கள். ஆனால் உழைக்கும் வர்க்கங்களாக இருக்கக் கூடிய நாம் அழிந்து விடுவோம். அதாவது 40, 50 வருடத்திற்கு முன்பாக ஆப்பிரிக்க நாட்டில் இருக்கக் கூடிய மக்கள் நாம் தெருவில் இறங்கி நடப்போம் என்று கூட கற்பனைச் செய்து பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் நடந்தது, இன்றும் ஏகாதிபத்தியத்தின் உண்மையான நிலையை நாம் உணர்ந்து கொள்ளவில்லை என்றால் நமக்கும் அந்த சூழல் ஏற்படும். இன்றைக்கும் தென் அமெரிக்க நாடுகளில் உள்ளவர்கள் ஏகாதிபத்தியத்தின் நிலையைப் புரிந்து கொண்டு போராடி வென்றெடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றாக ஒரே சமூகமாக ஒரே மக்களாக போராடியதுபோல் இங்கு போராட முடியுமா? ஒன்றாக நின்று ஒரே சமூகமாக நின்று இந்திய மக்கள் போராட முடியாது, சாதி இருக்கின்றவரையில்!

பார்ப்பனீயம் இருக்கின்ற வரையில் அந்தப் போராட்டத்தை அனுமதிக்காது. ஆனால், இந்த நாட்டில் நாம் வளர்ச்சியடைய வேண்டும் என்றால் கூட பார்ப்பனீயத்தை ஒழித்தால்தான் முடியும். எல்லோரும் என்ன சொல்லிக்கிட்டுருக்காங்க? இன்டர்நெட் கம்ப்யூட்டரைப் பற்றி பேசும்போது எல்லாம் அமெரிக்காவில் இருக்கக்கூடிய எல்லாம் இந்தியாவிற்கு வந்துவிட்டது. இந்தியாவிலுள்ள எல்லா இளைஞர்களுக்கும் வேலை கிடைத்து விட்டது. இது மாபெரும் முன்னேற்றம் என்கிறார்கள். இது ஒரு மார்டன் பண்ணை அடிமை. நவீன பண்ணை அடிமை. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இங்கு இருந்து வேலை செய்து கொடுக்கிற ஒரு பண்ணை அடிமைத்தனம்தான். இது மீண்டும் மீண்டும் உங்களை சாதிய வலைக்குள்தான் சிக்க வைக்க முடியும். இதிலிருந்து யாரும் விடுபடலை. பெரிய கம்ப்யூட்டர் இன்சீனியரா இருக்கிறவர்கூட தன் சாதி, கோத்திரம், குலம் பார்த்து பெண் தேடுகிறார். 'இந்து' பத்திரிகையை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் எடுத்துப் பாருங்க, தெரியும். சாதியத்தை அது வென்றெடுக்காது. ஏகாதிபத்தியத்தை நீங்க முறியடிக்க முடியாது. ஆனால், இந்த நாட்டிலுள்ள சாபக்கேடு என்ன தெரியுமா? சாதிக் கட்சிகளில் இருக்கக் கூடியவர்கள் எல்லாம் இந்த நாட்டின் யதார்த்த சூழ்நிலையாக இருக்கக்கூடிய சாதியத்தையும், பார்ப்பனீயத்தையும கவனிக்காத விளைவுதான் இங்கு புரட்சி ஏற்படவில்லை.

ஒரு சகோதரர் பேசும்போது சொன்னார், இந்த 'பெரியார் திராவிடர் கழகக்' கொடியிலுள்ள நட்சத்திரம் புரட்சியின் அடையாளம் என்று! சாதியை ஒழிக்காமல் புரட்சி நடத்த முடியாது. அம்பேத்கர் கூறுகிறார் - இந்த நாட்டில் வெறும் ஏழை பணக்காரன் பிரச்சனை மட்டும் இருக்கவில்லை. இங்கு சாதிப் பிரச்சனை இருக்கு. இங்கு சாதி இல்லாத ஒரு பாட்டாளி வர்க்கத்தைப் பார்க்க முடியாது. அதனால் உங்களால் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடியாது. அது உண்மை. சாதியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாத வர்க்கப் போராட்டமும், சாதி வர்க்கத்தை கணக்கில் எடுத்துக்

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# கழக ஏட்டுக்கு சந்தா சேர்ப்பில் தீவிரம்

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், செயலாளர் டைகர் பாலன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். 50 சந்தாக்கள் சேர்த்து தருவதாக தோழர்கள் உறுதி அளித்தனர். பனங்காடு மூர்த்தி பெருமாள், நாகராசன், செந்தில்குமார், சீனி, நங்கவள்ளி கிருட்டிணன் உட்பட 15 தோழர்கள் கலந்து கொண்டனர். செந்தில் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது. தோழியர் செல்வி அனைவருக்கும் ரொட்டி, தேநீர் வழங்கி உபசரித்தார்.

## மேச்சேரி

18.7.07 புதன் இரவு 8 மணிக்கு மேச்சேரி ஒன்றிய கலந்துரையாடல் கூட்டம் மறைந்த பெரியார் பெருந்தொண்டர் கோபாலன் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தமிழரசன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், செயலாளர் டைகர் பாலன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இரட்டைக் குவளை கணக்கெடுப்பு பெரியார் முழக்கம் சந்தா ஆகிய வேலைத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. தோழர்கள் 100 சந்தாக்கள் சேர்த்து தருவதாக உறுதி அளித்தனர். தோழர்கள் தமிழ் இளஞ்செழியன், கிருட்டிணமூர்த்தி, இரமேசு, கார்த்தி, சுந்தரம், க. பிரபு, சே. பிரபு, கலைமணி உட்பட 10 தோழர்கள் கலந்து கொண்டனர்.

## ஏற்காடு

22.7.07 ஞாயிறு காலை 10 மணிகபு ஏற்காடு ஒன்றிய பெரியார் திராவிடா கழக கலந்துரையாடல் கூட்டம் ஏற்காடு புளூ டைமண்ட் விடுதியில் மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் டைகர் பாலன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகப் போராட்டம் பற்றியும், பெரியார் முழக்கம் சந்தா சேர்ப்பு ஆகிய வேலைத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. தோழர்கள் 50 பெரியார் முழக்க சந்தா சேர்த்து தருவதாக உறுதியளித்தனர். ஜரினாகாடு பகுதி கார்த்திகேயன், பாலு, பாண்டித்துரை, நாகராஜ், ஜெ.ஜெ. நகர் பகுதி சந்தோசுகுமார், சுதாகர், நவீன்குமார், வெள்ளக்கடை எழிலரசன், முண்டாசுபாடி பகுதி சேகர், மோகன்குமார், ஜெயபிரகாசு, உலகநாதன், இராதாகிருட்டிணன், கு. சரவணன், செந்தில் குமார், ஞானசேகரர், வெள்ளக்கடை பகுதி சிவக்குமரன் உட்பட 18 தோழர்கள் கலந்து கொண்டனர். ஏற்காடு பகுதி பொறுப்பாளர் பெருமாள் கலந்துரையாடல் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். அனைவருக்கும் பாக்கியராசு சிறப்பாக பிரியாணி உணவு வழங்கினார். இராதாகிருட்டிணன் நன்றி கூற பகல் 2 மணிக்கு கலந்துரையாடல் நிறைவுற்றது.

## சேலம் மாநகரம்

22.7.07 ஞாயிறு மாலை 5 மணிக்கு சேலம் மாநகர பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் வேலுநகர் அமுதம்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன் தலைமை வகித்தார். செயலாளர் டைகர் பாலன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் இரட்டைக்குவளை கணக்கெடுப்பு, பெரியார் முழக்கம் சந்தா சேர்ப்பு ஆகிய வேலைத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. சேலம் மேற்கு பகுதி அமைப்பாளர் பாலு, கிழக்குப் பகுதி அமைப்பாளர் விசு, ஜங்சன் பகுதி தங்கராசு, ராபர்ட், மணியனூர் ராமு, ஆனந்த், சரவணன், ஆசைத்தம்பி, கதிரேசன், அனில்குமார், தாதகாப்பட்டி செந்தில் குமார், இராஜசேகரன், குமார், அசோகன், சிவக்குமார், கார்த்திகேயன், அமுதா, அம்மாப்பேட்டை பகுதி செந்தில்குமார், கிரி, கோபி ஆகியோர் கலந்து கொண்டனர். சேலம் மாநகரம் சார்பாக 400 சந்தா வசூல் செய்து தருவதென தோழர்கள் உறுதி கொடுத்தனர். கலந்துரையாடல் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை டேவிட் சிறப்பாக செய்திருந்தார். அம்மாபேட்டை செந்தில்குமார் நன்றி கூற இரவு 8 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது. தோழர்கள் அனைவருக்கும் ரொட்டி, தேநீர் வழங்கப்பட்டது.

## ஓமலூர்

23.7.07 திங்கள் மாலை 7 மணிக்கு ஓமலூர் ஒன்றிய பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் செம்மாண்டபட்டி சின்னதுரை இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஓமலூர் ஒன்றிய பொறுப்பாளர் சக்திவேல் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஓமலூர் ஒன்றியம் சார்பாக 100 பெரியார் முழக்க சந்தாக்கள் சேர்த்து தருவதாக உறுதி அளித்தனர். சிந்தாமணியூர் பிரகாசு, இரவி, செம்மாண்டபட்டி சின்னதுரை உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர். பிரகாசு நன்றி கூற இரவு 9 மணிக்கு கலந்துரையாடல் நிறைவுற்றது.

## கொளத்தூர் ஒன்றியம் புதிய பொறுப்பாளர்கள் நியமனம்

25.7.07 மாலை 6 மணிக்கு கொளத்தூர் ஒன்றிய பெரியார் திராவிடர் கழக கலந்துரையாடல் கூட்டம் கொளத்தூர் நகர பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், செயலாளர் டைகர் பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் இயக்க வளர்ச்சி சம்பந்தமாகவும், புதிய பொறுப்பாளர்கள் நியமனம் சம்பந்தமாகவும் கலந்துரையாடல் நடைபெற்றது. கீழ்க்கண்ட தோழர்கள் புதிய பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

கொளத்தூர் ஒன்றிய - தலைவர் சூரிய குமார், செயலாளர் காவை இளவரசன், அமைப்பாளர் ஈசுவரன்.

ஒன்றிய இளைஞரணி - தலைவர் பெரியசாமி, செயலாளர் மாஸ்டர் குமார், மாணவரணி தலைவர் விசுவநாதன், செயலாளர் கனிகா செல்வன், மகளிரணி - அமைப்பாளர் சீமா, தலைவர் சோதிமணி, செயலாளர் சரசுவதி. கொளத்தூர் நகர - தலைவர் சரவணன், செயலாளர் இளஞ்செழியன், பொருளாளர் சுந்தரம், ஒன்றிய பகுத்தறிவாளர் கழகத் தலைவர் ஆசிரியர் செல்வேந்திரன், செயலாளர் ஆசிரியர் தெய்வசிகாமணி, பொருளாளர் பரமசிவம்.

காவாலாண்டியூர் கிளை கழகத் தலைவர் இராசேந்திரன், செயலாளர் பச்சியப்பன், துணைச் செயலாளர் பழனிச்சாமி, பொருளாளர் கண்ணையன் (எ) இராமலிங்கம். இளைஞரணி தலைவர் ரவிக்குமார், செயலாளர் சசிக்குமார். மாவட்ட பெரியார் முழக்க செய்தி யாளர் காவை விஜயகுமார். இளஞ்செழியன் நன்றி கூற இரவு 9 மணிக்கு கூட்டம் நிறை வுற்றது.

**செய்தித் தொகுப்பு –முல்லைவேந்தன்**

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

*கொள்ளாத சாதீயப் போராட்டமும் வென்றெடுக்க முடியாது என்பதுதான். சாதி என்பது ஒழிக்கப்பட வேண்டும். அம்பேத்கர் வழியில்தான் போராடித் தான் வெல்ல முடியும். சாதியமே இல்லை என்று சொல்லாதீர்கள். நமக்கு நடைமுறையில் உதாரணங்கள் இருக்கின்றன.*

*நேபாளத்தில் சாதி இருந்தது. நேபாளத்தில் மாவோஸ்டுகள் போராடி அந்த கட்டமைப்பைத் தகர்த்திருக்கிறார்கள். ஈழத்தில் போராட்டம் நடந்து கொண்டிருக்கின்றது. போராடிக் கொண்டிருக்கிற நம் தமிழர்கள், சாதியத்தைக் கட்டுக் குலைத்திருக்கிறார்கள். அது நடந்துக் கொண்டிருக்கிறது.*

*சாதியத்தை ஒழிப்பது என்பது முடியாது என்பதல்ல. அதை போராட்டத்தின் ஊடாக முறியடிக்க வேண்டும் என்பதுதான். அப்படி நாம் முறியடிக்க வில்லை என்றால் மீண்டும், மீண்டும் பார்ப்பனீயத்திற்கு அடிமையாகி ஒரு சாதாரண பூணூல் அறுப்புக்குகூட 10 வருடம் சிறையிருக்கக் கூடிய நிலை தான் வந்து சேரும்.*

*ஆகவே, சாதியம் என்பது ஒழிக்கப் படக் கூடியது என்று கூறி முடிக்கிறேன் - என்றார் வழக்கறிஞர் பானுமதி.*

**தொகுப்பு : சொ. அன்பு**

# விற்பனைக்கு வந்த பெரியார் மோதிரம்

உலகத் தலைவர்கள் பயன்படுத்திய பொருள்கள் வரலாற்றுச் சின்னங் களாகவே மதிக்கப்படுகின்றன. தனி மனிதர்களிடம் தங்கியுள்ள, அந்தப் பொருள்களை அரசுகளே மிக அதிகமான விலை கொடுத்து வாங்கி அவற்றை நினைவுப் பொருள்களாக பாதுகாத்து வருகின்றன. தமிழ்ச் சமூகத்தில், வரலாற்றுத் திருப்பத்தை உருவாக்கியவர் சமுதாயப் புரட்சியாளர் பெரியார். அவர் பயன்படுத்திய பொருள்கள் ஒவ்வொன்றும் பாதுகாக்கப்பட வேண்டியவை. பொது மக்கள் பார்வையிடக்கூடிய அருங்காட்சியகம் ஒன்றை உருவாக்கி அதில், அவை பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், தி.க. தலைவர் வீரமணியோ, பெரியார் இறுதி வரை பயன்படுத்திய பச்சைக் கல் மோதிரத்துக்கு ரூ.5 லட்சம் விலை நிர்ணயித்து விட்டார். அதை 'பெரியார்' படத்தில் நடித்த நடிகருக்கு - அவர் திரைப்படத்தில் நடிப்பதற்கு ஊதியம் வாங்கவில்லை என்பதற்காக பரிசாக வழங்கிவிட்டார்.

பெரியாரே - அந்த மோதிரத்தை தனக்கு அன்பளிப்பாக வழங்கியவர் நினைவாக, இறுதி வரை தனது கரங்களில் அணிந்து பாதுகாத்து வந்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன. பெரியாரே போற்றிப் பாதுகாத்த ஒரு 'நினைவுப் பரிசை' - விற்பனை சந்தைக்குக் கொண்டு வந்துவிட்டார் வீரமணி. இது சரியா ?

தி.மு.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான ப.உ. சண்முகம், பெரியாருக்கு வழங்கப்பட்ட பரிசுகள், பயன்படுத்திய பொருள்கள் ஏன், பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படவில்லை என்று, பெரியார் முடிவெய்திய காலத்திலேயே கேள்வி எழுப்பினார். அவை பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது என்று அன்றைக்கு வீரமணி பதிலளித்து - ப.உ.ச.வுக்கு சவால் விட்டார். பெரியார் திடலுக்குள் ஒரு அறைக்குள் கண்ணாடிப் பெட்டிக்குள் பெரியார் பயன்படுத்திய ஒரு சில பொருள்களை வைத்து, இதுதான் பெரியார் அருங்காட்சியகம் என்று வீரமணி மலினப்படுத்திவிட்டார்.

ஆனால், தலைவர்களின் இத்தகைய வரலாற்றுப் பொருட்கள் எப்படிப் பாதுகாக்கப் படுகின்றன ?

1948 ஜனவரி 11 இல் காந்தியார் சுட்டுக் கொல்லப்படுவதற்கு 19 நாட்களுக்கு முன்பு முஸ்லீம்கள் மீது நட்பு காட்ட வேண்டும் என்று, நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து எழுதிய கடிதம் ஒன்றை லண்டனிலுள்ள கிறிஸ்டி கலைப் பொருள் விற்பனைக் கூடம் - கடந்த ஜூலை 3 ஆம் தேதி ஏலத்துக்கு விடுவதாக அறிவித்தது. லண்டன் வாழ் காந்தியவாதிகள் பசீத் குமார் பிர்லா, சத்யாபால் ஆகிய இருவரும், பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதி இந்திய அரசே, இதை வாங்க வேண்டும் என்று வலியுறுத்த இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த மன்மோகன் சிங், மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் வழியாக நடவடிக்கை எடுத்தார். வெளிநாட்டுத் துறையோடு கலாச்சாரத்துறை தொடர்பு கொண்டு, காந்தியின் கடிதத்தைத் திரும்பப் பெறும் முயற்சியில் இறங்கியது. 5 லட்சம் பணம் தந்து, அந்தக் கடிதத்தை, இந்திய அரசே வாங்கிக் கொண்டது.

சுவிட்சர்லாந்து நாட்டைச் சார்ந்த அல்பின்ஸ்ராம் என்பவர் உலகின் பிரபல தலைவர்கள் எழுதிய 570 கடிதங்களை சேகரித்து பாதுகாத்து வைத்துள்ளார். நெப்போலியன், வின்ஸ்டன் சர்ச்சில், சார்லஸ் டிக்கின்ஸ், ஆஸ்கார் ஒயில்ட் போன்றவர்களின் கடிதங்களோடு காந்தியார் கடிதமும் அவரிடமிருந்தது. அங்கிருந்து தான் கிறிஸ்டி விற்பனைக் கூடம் வாங்கி ஏலத்துக்குவிட திட்டமிட்டது. பெரியாருக்கு 'உலகத் தலைவர்' என்று பெயர் சூட்டுகிறவர்கள், உலகத் தலைவர்களின் நினைவுப் பொருட்களைப் பாதுகாப்பது போல், பெரியார் பயன்படுத்திய பொருட்களையும் பாதுகாக்க வேண்டாமா ?

இப்படி ஒரு முக்கிய முடிவை எடுக்கும் அதிகாரத்தை வீரமணி என்ற ஒரே மனிதர் தம்மிடம் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதுதான். இதிலே இன்னும் கொடுமை ! நடிகர் சத்தியராஜ் மீது நமக்கு எந்த வருத்தமும் இல்லை. பெரியாராகவே மாறி நடித்து பெருமை பெற்றுள்ளார். ஆனால் பெரியாராக நடித்ததாலேயே அவரையே பெரியாராக்கி காட்டிடும் முயற்சிகளை - சத்யராஜ்கூட விரும்ப மாட்டார். ஆனால், வீரமணி அப்படி விரும்புவதாகவே தெரிகிறது. பெரியாரைவிட தான் உயர்ந்த தலைவராகிவிட்டதாகக் காட்டிக் கொள்ளத் துடிப்பதாகவே தெரிகிறது ! அதற்கு - சத்யராஜைப் பெரியாராக்கிட வேண்டும் என்று அவர் கருதுவதாகவே தெரிகிறது.

பெரியார் - இந்த சமூகத்தின் இழிவை ஒழித்து, மானமும் அறிவும் பெற - தனது சிந்தனைகளை முன் வைத்தார். அதேபோல், தனது ''சுய''( ?) சிந்தனைகளையும் முன் வைக்க வேண்டும் என்று நினைத்த வீரமணி, 'வாழ்வியல் சிந்தனைகளை' எழுதினார்.

பெரியார் எழுத்து சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தினார் என்றால், தன்னாலும் எழுத்து சீர்திருத்தத்தை அமுலாக்க முடியும் என்று, ஒவ்வொரு நாளும் 'விடுதலை'யில் புதிய எழுத்து சீர்திருத்தத்தை வெளியிடுகிறார்.

பெரியார் நடிகவேள் எம்.ஆர். ராதாவுக்கு மன்றம் அமைத்தார் என்றால், இவர் சத்யராஜ் பெயரில் மன்றம் அமைப்பதாக அறிவிக்கிறார்.

பெரியாருக்குரிய 'தமிழர் தலைவர்' பட்டத்தைத் தானே எடுத்துக் கொண்டார். பெரியாருக்கு தொண்டர்கள் வேன் வழங்கினார்கள் என்றால், தனக்கும் வேன் வழங்கும் விழா நடத்துகிறார். பெரியாருக்கு எடைக்கு எடை மக்கள் பொருட்களைத் தந்தார்கள் என்றால், தனக்கும் எடைக்கு எடை நாணயங்களை வாங்கிக் கொள்கிறார்.

புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாகவே வீரமணியின் இந்த நடவடிக்கைகள் இருக்கின்றன.

வீரமணி பெரியாரை உண்மையில் மிஞ்சினால் வரவேற்கலாம் ! லட்சியத்தில்; துணிவில்; சுயமரியாதை உணர்வில்; தன்னல மறுப்பில்; தியாகத்தில் மிஞ்சிக் காட்டவேண்டும். ஆனால் அரசுகளிடம் பதிவு செய்யப் பெற்ற அறக்கட்டளைகள் வழங்குகிற அதிகாரங்களைப் பயன்படுத்தி மிஞ்ச முடியுமா ?

**– இந்திரசித்**

Tamil Weekly

Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 23rd August 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.